# உதயன்

சுடர் 30 | கதிர் 129 | வள்ளுவர் ஆண்டு 2046 | பங்குனி 21, சனிக்கிழமை 04.04.2015


வானிலை

கூ.வெ. 32 °C
கு.வெ. 23 °C
தெளிவான காலநிலை

## இந்திய மீனவரை அச்சுறுத்துகிறார் இலங்கை ஜனாதிபதி

### தமிழக வாழ்வுரிமைக் கட்சி கொந்தளிக்கிறது

சென்னை, ஏப்.4

தமிழக மீனவர்களுக்கு மிரட்டல் விடுத்துள்ள இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை மத்திய அரசு வன்மையாகக் கண்டிக்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் இது தொடர்பாக இன்று அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

"தமிழக மீனவர்கள் பாரம்பரிய மீன்பிடி உரிமை உள்ள பகுதியில் மீன்பிடித்தால் கைது செய்வோம்,

பக்.24

## போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டாலே நல்லிணக்கம் ஏற்படும்



### வலியுறுத்துகிறது அமெரிக்கா

கொழும்பு, ஏப்ரல் 4


போரின் பின்னரான சந்தர்ப்பங்களை இலங்கை சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை என்று தெரிவித்துள்ள அமெரிக்கா கடந்த கால தவறுகளைத் திருத்திக்கொண்டு குற்றச்செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு உரிய தண்டனை வழங்குவதன் மூலம் மட்டுமே உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் 2009ஆம் ஆண்டு போர் நிறைவுக்குக் கொண்டுவரப்பட்டதன் பின்னர் நாட்டை ஒன்றிணைக்கக் கிடைக்கப்பெற்ற சந்தர்ப்பம் உரிய முறையில் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை என்று ஜனநாயகம், தொழில் மற்றும் மனித உரிமைகளுக்கான

பக்.24

## கொல்லப்பட்ட மக்களுக்கு மாலினோவ்ஸ்கி அஞ்சலி






யாழ்ப்பாணம், ஏப். 04

போரின் போது முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களுக்கு, அந்தப் பகுதிக்கு நேற்று நேரடியாகச் சென்று மலரஞ்சலி செலுத்தியுள்ளார் அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் ரொம் மாலினோவ்ஸ்கி. வடக்குக்கான பயணத்தை நேற்று மேற்கொண்ட இராஜாங்கச் செயலாளர், அதன் ஒரு பகுதியாக இறுதிப்போரில் 'மோதல் தவிர்ப்பு வலயம்' என்று அரசால் அறிவிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தின் பிரதேசங்களை

பக்.24

## இந்திய மீனவர்கள் 33 பேர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.4

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் 33 பேர் இலங்கைக் கடற்படையினரால் நேற்றிரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

5 படகுகளில் கச்சதீவுக் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த சமயமே அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் தமிழகத்தின் நாகப்பட்டினத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம்

பக்.24

## புலம்பெயர் அமைப்புகள் மீதான தடையை உடன் நீக்க முடியாது

### ஆழமாக ஆராய வேண்டும் என்கிறது மைத்திரி அரசு



கொழும்பு, ஏப்.4

மஹிந்த ஆட்சியில் புலம்பெயர் அமைப்புகள் மற்றும் தனிநபர்களுக்கு எதிராக விதிக்கப்பட்ட தடையை உடனடியாக நீக்கிவிட முடியாது என்று அறிவித்துள்ள மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு, அதுபற்றி ஆழமாக ஆராயப்படவேண்டும் என்றும் தெரிவித்துள்ளது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. அதன்கேள்வி நேரத்தின்போது, "புலம்பெயர் அமைப்புகள் மீதும், தனிநபர்களுக்கு எதிராகவும் விதிக்கப்பட்ட தடையை நீக்குவது தொடர்பில் பரிசீலிக்கப்படுமென வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன்படி, அத்தடை எப்போது நீக்கப்படும்?" என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் ராஜித சேனாரத்ன,

"மேற்படி தடையை உடன் நீக்கிவிட முடியாது. அதுபற்றி ஆராயவேண்டும். தற்போது ஐரோப்பாவில் புலித்தடை நீடிக்கப்பட்டுள்ளது. இது பற்றி எவரும் பெரிதாகப் பேசுவதில்லை" என்று கூறினார்.

(ற–சி)

## சந்திரிகாவின் தலைமையில் ஒற்றுமைக்கான அலுவலகம்

### ஒப்புதல் வழங்கியது அமைச்சரவை

கொழும்பு, ஏப். 04

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில், தேசிய ஒற்றுமைக்கான அலுவலகம் அமைப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு நல்லிணக்கத்தையும், தீர்வையும் அடைவதற்கான பரிந்துரைகளை இந்தச் செயலணி முன்வைக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

பக்.24

## 'உதயன்' கிரிக்கெட் கொண்டாட்டம் லட்சங்களை வெல்லப்போவது யார்?

யாழ்ப்பாணம், ஏப். 4

கடந்த இரண்டு மாத காலமாக நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட்தொடரைமுன்னிட்டு, 'உதயன்' பத்திரிகை விளம்பரதாரர்களுடன் இணைந்து, தனது வாசகர்களுக்காக பரிசுப் போட்டியை நடத்தியது.



வாசகர்கள் அனுப்பியவற்றில் சிறுபகுதி

இந்தப் பரிசுப் போட்டிக்கு பல லட்சக்கணக்கான வாசகர்கள் தங்கள் பதில்களை அனுப்பியுள்ளனர். அவர்களில் லட்சங்களை வெல்லும் அதிர்ஷ்டசாலிகளைத் தெரிவு செய்யும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணிக்கு உதயன் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் – கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். விளம்பரதாரர்களும் பங்குபற்றவுள்ளனர். நிகழ்வைப் பார்வையிடுவதற்கு, உதயன் வாசகர்களும் வருகை தர முடியும்.

## மைத்திரியை வளைத்து போடும் முயற்சியில் சீன அரசு

அவரது பயணத்தைத் தொடர்ந்து மஹிந்த ராஜபக்ஷவை விட மைத்திரிபால சிறிசேன தமக்கு மிகவும் வேண்டியவர் என்பதை சீனா உணர்ந்துள்ளது.

பக்கம் 17

## இனவாதம் பேசினால் 2 ஆண்டுகள் உள்ளே

### குற்றவியல் சட்டக்கோவையில் விரைவில் திருத்தம்

கொழும்பு, ஏப்.4

இனவாதம், மதவாதம் ஆகியவற்றை தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிடுவோர் மற்றும் எழுதுவோருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை வழங்கும் வகையில் குற்றவியல் சட்டக்கோவையில் திருத்தம் மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இதற்கான யோசனையை நீதி அமைச்சரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான விஜயதாஸ ராஜபக்ஷ அமைச்சரவையில் முன்வைத்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் அமைச்சரவை முடிவுகளை

பக்.24

## 'போகோ ஹராம்' தீவிரவாத அமைப்புக்கு மஹிந்தவின் மருமகன் ஆயுத விநியோகம்

### புதிய அரசுக்கு பலத்த சந்தேகம்; விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, ஏப்.4

உக்ரேன் பிரிவினைவாதப் போராளிகளுக்கு, ஆயுதங்களை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் சிக்கியுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மருமகனும், அவரது ஆட்சிக்காலத்தில் ரஷ்யாவுக்கான தூதுவராகப் பணியாற்றியவருமான உதயங்க வீரதுங்க, நைஜீரியாவில் இயங்கும் "போகோ ஹராம்" தீவிரவாதிகளுக்கும் ஆயுதம் விற்பனை செய்திருக்கலாம் என்று இலங்கை அரசு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

பக்.24

## சந்திரசிறி வழியில் செல்வாரா பளிக்கரா?

பக்கம் 16

# திருமலையில் தமிழ் மொழி புறக்கணிப்பு

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஜே.எம்.லாஹிர் குற்றச்சாட்டு

மூதூர், ஏப்.4
தமிழ் மொழி அரச கரும மொழியாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் திருகோணமலை மாவட்ட அரச கரும நிர்வாகத்தினர், திணைக்களங்கள் அதுவிடயத்தில் அசமந்தப் போக்கில் செயற்படுகின்றன. – இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி ஜே. எம்.லாஹிர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற கிழக்கு மாகாண சபை அமர்விலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

"எமது மாகாண வீதி அபிவிருத்தி காணி அமைச்சர் ஆரியவத்தி கலப்பத்தி சிங்களப் பெண்மணியாவார். சகோதரி தனது அமைச்சு கோவைகளை எமக்கு தமிழிலே அனுப்பி வைக்கிறார். அதற்காக இந்தச் சபையிலே அவரைப் பாராட்டுகின்றேன். இதுதான் நல்லாட்சிக்கான முன்னுதாரணங்கள். ஆனால் திருகோணமலை மாவட்டத்தில் அரசகரும நிருவாகத்தினர், திணைக்களங்கள் தமிழ் மொழி விடயத்தில் அசமந்தப் போக்கிலேயே செயற்படுகின்றன."– என்று அவர் குற்றஞ்சாட்டினார்.

"பெரும்பாலான பொலிஸ் நிலையங்களில் தமிழ் மொழி புறக்கணிக்கப்பட்டு சிங்கள மொழியிலேயே முறைப்பாடுகள் பதியப்படுகின்றன. பயங்கரவாத குற்றத் தடுப்பு குற்ற ஒப்புதல் வாக்கு மூலம் கூட சிங்கள மொழில் பதியப்படுவதால் ஒரு நிரபராதிகூட எதிரியாக மாறுகின்ற சூழ்நிலை ஏற்படுகின்றது.

கௌரவ முதலமைச்சர் பொலிஸ் திணைக்களத்துடன் சம்பந்தப்பட்டிருப்பதால் இதில் கூடிய கவனம் எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கின்றேன்."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"தென்னமரவாடி தொடக்கம் வெருகல் வரை காணிப் பிரச்சினை குவிந்து கிடக்கின்றது. அதற்காக மத்திய காணி அமைச்சர் மாகாண காணி அமைச்சரும் இணைந்து விசேட செயலணியொன்றை உருவாக்கி இதற்கான தீர்வை இந்த அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் உள்வாங்கி நிரந்தரத் தீர்வைப் பெற்றுத்தர முதலமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும்."– என்றும் அவர் கோரிக்கை விடுத் தார்.(ற)

## டெங்கு பரவும் சூழல்: 40 பேருக்கு அபராதம்

யாழ்ப்பாணம்,ஏப். 4
டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய முறையில் தமது சுற்றுப்புறத்தை வைத்திருந்தார்கள்என்ற குற்றச் சாட்டில் நாற்பது பேருக்கு எதிராக யாழ். பொலிஸாரால் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவர்களுக்கெதிராக நேற்று யாழ். நீதிவான் நீதிமன்றில் குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. ஒவ்வொருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்த நீதிமன்றம் சுற்றுச்சூழலை சுத்தமாக வைத்திருக்குமாறு எச்சரித்தது.

டெங்கு ஒழிப்பு வாரம் நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் டெங்கு நுளம்புகளை ஒழிக்கும் பணியில் பொலிஸார் தீவிர கவனம் எடுத்து வருகின்றனர். கோப்பாய் மற்றும் யாழ்ப்பாண பொலிஸாரின் சுற்றுச்சூழல் பிரிவினரால் டெங்கு நுளம்புகள் பரவக்கூடிய வகையில் சூழலை வைத்திருந்த இருநூறுக்கும் அதிகமானோருக்கு எதிராக கடந்த இருமாதங்களில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ற–103)

## நாச்சிமார் கோயில் பிள்ளையார் சிலை திருட்டு

யாழ்ப்பாணம்,ஏப்.4
கோப்பாய் வடக்கு தரவையில் உள்ள நாச்சிமார் கோயிலின் பிள்ளையார் விக்கிரகத்தை திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

கடந்த திங்கட்கிழமை இரவு ஆலய முன்பக்க கதவை உடைத்து உள்ளே சென்ற திருடர்கள் பிள்ளையார் விக்கிரகத்தை புரட்டி எடுத்துச் சென்றுள்ளனர். அதனைவிட குத்து விளக்கு, பஞ்சாரத்தி, குடம் உட்பட மற்றும் சில பித்தளை பொருள்களையும் களவாடியுள்ளனர். வயல் சூழ்ந்த தரவை பகுதியில் அமைந்துள்ள இந்த ஆலயம் அண்மையிலேயே புனர்நிர்மாணம் செய்யப்பட்டிருந்தது.

கோப்பாய், நீர்வேலி பிரதேசங்களில் தற்போது திருடர்களின் கைவரிசைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன. திருடர்களின் தொல்லையால் மக்கள் பீதியடைந்தும் காணப்படுகின்றனர். தற்போது இந்தப் பிரதேசங்களில் ஏற்பட்டிருக்கும் திருட்டு சம்பவங்களை முறியடிக்கும் வகையில் இரவில் பொலிஸாரின் ரோந்து அதிகரிக்கப்பட்டுள்ளது. (17)

## யாழ்.நகர கடைகளில் நள்ளிரவில் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப்ரல் 4
யாழ்.போதனா வைத்தியசாலை வீதி, சத்திரச் சந்தியில் உள்ள 3 பல சரக்குக் கடைகள் உடைக்கப்பட்டு பணம், பொருள்கள் திருடப்பட்டுள்ளன. அவற்றில் ஒரு கடையில் 3ஆவது தடவையாகத் திருட்டு நடந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். கடை உரிமையாளர்கள் நேற்றுமுன்தினம் இரவு 8.30 அளவில் கடைகளைப் பூட்டிவிட்டுச் சென்றிருந்த நிலையில் 'சீற்' றால் அமைந்த கூரையைத் பிரித்து உள்நுழைந்த திருடர் உள்ளே அமைக்கப்பட்டிருந்த 'லெவல் சீற்' உடைத்து கடைக்குள் புகுந்துள்ளனர்.

ஒரு கடையில் 50 ஆயிரம் ரூபா பணமும், மீள் நிரப்பு அட்டைகளும், மற்றைய கடைகளில் பொருள்களும் சிறுதொகைப் பணமும் திருடப்பட்டுள்ளன. அது தொடர்பில் யாழ்.பொலிஸில் நேற்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.நகர் உட்பட பல இடங்களிலும் கடைகள் திருடப்படுவது தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது. யாழ்.கஸ்தூரியார் வீதியில் உள்ள கடை ஒன்றில் சில வாரங்களுக்கு முன்னர் திருட்டு இடம்பெற்றிருந்தது. (ற–4)



ரிஷி தொண்டுநாதர் சுவாமிகளின் மனிதநேய பணித்திட்டத்தின் ஒரு பகுதியாக முல்லைத்தீவு மாவட்டத்தில், புதுக்குடியிருப்பு கோம்பாவில் கிராமத்தில், தெரிவு செய்யப்பட்ட நூறு குடும்பங்களுக்கு நேற்று தென்னங்கன்றுகள் வழங்கப்பட்டன. கோம்பாவில் விக்கினேஸ்வரா விளையாட்டுக்கழக மைதானத்தில், மனிதநேயம் அமைப்பின் பணியாள்ர் சுதர்சன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. ஒரு குடும்பத்திற்கு ஐந்து கன்றுகள் அடிப்படையில் வழங்கப்பட்டன. இவற்றை ரிஷி தொண்டு நாதர் சுவாமிகள் வழங்கினார். (ற–21)

## சிறுமி துஷ்பிரயோகம்: மத போதகர் மறியலில்

வவுனியா, ஏப்.4
தாய், தந்தை அற்ற சிறுமி ஒருவரை 5 ஆண்டுகளாக துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்று குற்றஞ்சாட்டப்பட்ட மத போதகர் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை எதிர்வரும் 9 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என்று செட்டிகுளம் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் உள்ள சிறுவர் இல்லம் ஒன்றைச் சேர்ந்த சிறுமி ஒருவரை வளர்ப்பதாக அழைத்துச் சென்ற மத போதகர் ஒருவர் குறித்த சிறுமியை 2010ஆம் ஆண்டு முதல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தினார் என்று கடந்த ஞாயிற்றுக் கிழமை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அதையடுத்து குறித்த மத போதகர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார் என்றும், கடந்த புதன்கிழமை அவர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்போது மதபோதகரை எதிர்வரும் 9ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது என்றும் அவர்கள் மேலும் தெரிவித்தனர். (ற)

## காணிகளை வழங்கும்போது மாகாண சபையிடம் அனுமதி

### நடைமுறைமுறையைப் பின்பற்றப் பணிக்குமாறு ஜனாதிபதிக்கு வடக்கு அவைத் தலைவர் கடிதம்

யாழ்ப்பாணம், ஏப். 04
வடக்கு மாகாணத்திலுள்ள அரச காணிகளை தனியாருக்கோ அல்லது வேறு அமைப்புகளுக்குகோ வழங்கும்போது அரசமைப்பின் ஏற்பாடுகளுக்கமைய மாகாண சபையின் அனுமதி பெறப்பட வேண்டும். மத்திய காணி ஆணையாளரை இந்த விடயத்தைப் பின்பற்ற, பணிக்க வேண்டும்– இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

வடக்கு மாகாண சபையில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதிய அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் குறித்த கடிதம், ஜனாதிபதி மைத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பண்டா – செல்வா ஒப்பந்தம், டட்லி – செல்வா ஒப்பந்தம், இந்திய – இலங்கை உடன்படிக்கை, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் முன்மொழிவுகள் மற்றும் அரசமைப்பின் 13 ஆவது திருத்தம் ஆகியவற்றை மேற்கோள்காட்டி, அரச காணி மாகாணத்துக்கு உரித்தான விடயம் என்பதையும் சுட்டிக் காட்டியே குறித்த கடிதம் அவைத் தலைவரால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.



**வடக்கு மாகாண சபையில் கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 9 ஆம் திகதிய அமர்வில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் குறித்த கடிதம், ஜனாதிபதி மைத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.**

கோளுக்கு அமைய, மத்திய காணி ஆணையாளருக்கு, மேற்கண்டவாறு பணிப்புரை விடுத்தல் நல்லிணக்க நடவடிக்கைகளின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும், பிரதமர் ரணில் விக்கிமரசிங்கவுக்கும் அனுப்பி



புனித வியாழன் திருப்பலி நேற்றுமுன்தினம் மாலை மன்னார் செபஸ்தியார் பேராலயத்தில் நடைபெற்றது. அதில் மன்னார் மறைமாவட்ட ஆயர் தலைமையில் திருப்பலியும், அத்திருப்பலியில் பாதம் கழுவும் திருசடங்கும் ஆயர் இராயப்பு ஜோசப் ஆண்டகையால் நிறைவேற்றப்பட்டது. (ற)

# மனைவி இறந்ததை அறிந்து உயிரை விட முயன்ற கணவன்

## போத்தலை உடைத்து தன்னைத் தானே குத்தியவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில்

வலி.வடக்கு, ஏப்.4
மனைவி தற்கொலை செய்து கொண்டார் என்பதைக் கேள்வியுற்றதும் பொலிஸ் காவலில் இருந்த கணவர் அங்கிருந்த போத்தலை உடைத்து தன்னைத் தானே குத்தி உயிரை மாய்க்க முயற்சித்தார். இந்தச் சம்பவம் இளவாலை பொலிஸ் நிலையத்தில் நடத்துள்ளது.

சிவபாதம் சுபாகரன் (வயது–23) என்பரே தன்னைத் தானே போத்தலால் குத்தியவராவார். அவரது மனைவி சுதாகரன் சுமதியே (வயது–24) தூக்கிட்டு உயிரை மாய்த்தவராவார்.

எட்டு மாதங்களுக்கு முன்னர் பண்டத்தரிப்பு, பிரான்பற்றைச் சேர்ந்த சுமதிக்கும், வவுனியா, நெளுக்குளத்தைச் சேர்ந்த சுதாகரனுக்கும் திருமணம் நடந்தது. அவர்கள் இளவாலையில் வாழ்க்கையை ஆரம்பித்தனர்.

இந்தநிலையில் சுமதியின் நகையை வாங்கிய அவரது தாயார் அதனைத் திருப்பிக் கொடுக்காதது தொடர்பில் சுதாகரனுக்கும் மாமியாருக்கும் இடையே பிணக்கு ஏற்பட்டுள்ளது. மாமியார் அது குறித்து இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். முறைப்பாட்டின்படி சுதாகரன் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

நேற்றுக் காலை சுமதி தூக்கிட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார். இந்தத் தகவல் பொலிஸ் காவலில் உள்ள சுதாகரனுக்குத் தெரிய வந்ததையடுத்து அவர் அங்கிருந்த போத்தலை உடைத்துத் தன்னைத் தானே கழுத்தில் குத்திக் கொண்டார்.

உடனடியாக அவர் தெல்லிப்பழை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். ஆபத்தான நிலையில் உள்ள அவருக்கு அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை வழங்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த சுமதியின் உடல் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை இளவாலைப் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.(ற–86,4,36)

# போர் முடிந்த பின்னரும்கூட காணிகள் இராணுவத்திடம்

## மீட்டுத் தருமாறு ஜெயபுரம் விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.4
போர் முடிவுற்ற போதும் தம்முடைய 548 ஏக்கர் விவசாய நிலங்கள் இன்னமும் இராணுவத்தினர் வசமுள்ளன. அதனால் கடந்த 5 ஆண்டுகளாக விவசாயம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது– இவ்வாறு ஜெயபுரம் கிராம மக்கள் தெரிவித்தனர்.

"கிளிநொச்சி, வன்னேரிக்குளத்துக்கும், ஜெயபுரம் பன்றிவெட்டி குளத்துக்கும் இடையே உள்ள தேவன் குளத்தை அண்டிய பகுதியில் உள்ள 548 ஏக்கர் விவசாய நிலங்கள் போர் முடிவடைந்த போதும் இன்று வரை எங்களிடம் கையளிக்கவில்லை. இதனால் எமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது."– அந்தக் கிராம மக்கள் மேலும் தெரிவித்தனர்.

"1990ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜெயபுரத்தில் குடியமர்த்தப்பட்ட பொது மக்களுக்காக அப்போதைய அரசால் ஒரு குடும்பத்தினருக்கு ஒரு ஏக்கர் வீதம் அந்த காணிகள் பகிந்து அளிக்கப்பட்டன. அதை வைத்துக் கொண்டுதான் நாங்கள் கடந்த காலங்களில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டோம். ஆனால் தற்போது அந்த காணிகளுக்குள் மிதிவெடிகள் இருப்பதாக கூறி வனவள அபிவிருத்தி துறையினர், இராணுவத்தினர் எங்களை அங்கே போக வேண்டாம் என்று கூறுகின்றார்கள்." – என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

"மிதிவெடிகள் அகற்றப்பட்டும் கூட எங்களால் எங்கள் வயல்களில் விவசாயம் செய்யமுடியாத நிலையில் உள்ளோம். காலபோகம் மட்டும் மேற்கொள்ளும் எங்களுடைய காணிகளை மீட்டுத் தருவதற்கு உரியவர்கள் நடவடிக்கை எடக்கவேண்டும்."– என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

(ற–21)

# தபாலகத்தில் கொள்ளையடித்த நபருக்கு மறியல்

யாழ்ப்பாணம், ஏப்.4
வேலணை மண்கும்பான் தபால் நிலையத்தில் பணிபுரிந்த பெண்ணின் சங்கிலி மற்றும் கைத்தொலைபேசியைக் கொள்ளையடித்துச் சென்றவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மண்கும்பான் 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த மொஹமட் என்பவரே கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். சில வாரங்களுக்கு முன்னர் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

அலுவலக நேரத்தில் அங்கு சென்ற குறித்த நபர் அங்கு பணியிலிருந்த பெண்ணிடம் கொள்ளையடித்திருந்தார். அது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடுசெய்யப்பட்டதனை அடுத்து விசாரணை மேற் கொண்ட பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்தனர். அவரிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்ட சங்கிலி, கைத்தொலைபேசி என்பன மீட்கப்பட்டுள்ளன. ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட அவரை ஒருவாரம் விளக்க மறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (ற–4,101)

# வடக்கு முஸ்லிம்களின் காணி பிரச்சினை குறித்து அறிக்கை

## ஒரு மாதத்திற்குள் சமர்ப்பிக்குமாறு காணி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவு



கொழும்பு, ஏப்.4
வடக்கு மாகாண முஸ்லிம்களின் காணிப் பிரச்சினைகள் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால நேற்று உத்தரவிட்டார். அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரிசாத் பதியுதீனின் வேண்டுகோளுக்கு அமைவாக வடக்கு மாகாண முஸ்லிம்களின்பிரச்சினைகள்தொடர்பில் ஆராயும் விசேட கூட்டமொன்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. அதிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு உத்தரவிட்டார்.

இந்த விசேட கூட்டத்தின்போது வடக்கு மாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தின் இன்றைய நிலை தொடர்பில் அமைச்சர் ரிசாத் ஜனாதிபதிக்கு விளக்கமளித்தார். அத்துடன் வடக்கு மாகாண முஸ்லிம்களை மீளக் குடியேற்றும்போது காணிப் பிரச்சனையே பிரதானமாக உள்ளது எனவும் ஜனாதிபதிக்கு சுட்டிக்காட்டி அது தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

அதையடுத்து வடமாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தில் உள்ள காணிப் பிரச்சனை தொடர்பில் அடுத்த ஒரு மாத காலப்பகுதிக்குள் அறிக்கை சமர்ப்பிக்குமாறு காணி அமைச்சின் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி உத்தரவிட்டுள்ளார். சமர்ப்பிக்கப்படும் அறிக்கையினைத்தொடர்ந்து வடமாகாண முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.(ற–10)

# இ.போ.ச. பஸ் மீது கல்வீச்சு

யாழ்ப்பாணம், ஏப்.4
இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலைக்குச் சொந்தமான பஸ் மீது மாலுசந்திப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக நெல்லியடி பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலில் பஸ்ஸின் பின்பக்க கண்ணாடிகள் சேதமடைந்தன. யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கிச் சென்ற பஸ் மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதல் தொடர்பில் பஸ் சாரதி செய்த முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ற)



# விலகினார் மேரிகமலா அவரிடத்துக்கு நடராஜ்

யாழ்ப்பாணம், ஏப். 04
வடக்கு மாகாண சபையின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நியமன உறுப்பினர் திருமதி மேரிகமலா குணசீலன் பதவி விலகியுள்ளார். அதற்குப் பதிலாக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பி.நடராஜ் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் எதிர்வரும் செவ்வாய்க் கிழமை இடம்பெறவுள்ள மாகாணசபைக் கூட்டத் தொடரில் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இரண்டுபோனஸ்ஆசனங்கள்கிடைக்கப் பெற்றன. இதில் ஓர் ஆசனம், நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் அஸ்மினுக்கு வழங்கப்பட்டது. மற்றைய ஆசனம், சுழற்சி முறையில் ஒவ்வொரு ஆண்டும் ஒவ்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில் முதலாவது வருடம், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு வழங்கப்பட்டது. அதற்கமைய முல்லைத் தீவைப் பிரதிநிதித்துவப்படுத்திய திருமதி மேரிகமலா குணசீலன் மாகாண சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார். ஒரு வருடம் கடந்த நிலையிலும், சுழற்சி முறையில் அடுத்த உறுப்பினர் நியமனம் வழங்கப்படாத நிலைமை நீடித்திருந்தது.

இந்த நிலையில், புதிய உறுப்பினராக வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பி.நடராஜ், இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் பத்திரம் தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவால் வெளியிடப்பட்

# இதுவரை விடுவிக்கப்பட்ட பகுதிகளில் விரைவான புனரமைப்புக்கு நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 04
வலி.வடக்கு மற்றும் வலி.கிழக்கில் இதுவரை விடுவிக்கப்பட்ட பகுதிகளின் புனரமைப்பு பணிகளை உடனடியாக மேற்கொள்வுதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த பகுதிகளில் வந்து குடியமர்ந்துள்ள குடும்பங்களுக்கு தற்காலிக வீடுகள் வழங்குவதற்குரிய ஏற்பாடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை, யாழ்.மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் மீள்குடியமர்வு தொடர்பான கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் ஏற்கனவே விடுவிக்கப்பட்ட இடங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டது.

வலி.கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வளலாய் கிராம சேவையாளர் பிரிவு மற்றும் வலி. வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வயாவிளான் கிழக்கு மற்றும் பலாலி தெற்கைச் சேர்ந்த பகுதிகள் ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளன. குறித்த பகுதிகள் மக்களினால் துப்புரவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறானதொரு நிலையில், விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் நிரந்தரமாகக் குடியமர்வதற்கு முதலில் தற்காலிக கூடாரங்களை அமைத்துக் கொடுப்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது. யு.என்.எச்.சி.ஆர் மற்றும் ஐ.ஓ.எம். நிறுவனப் பிரதிநிதிகள், குறித்த விடயம் தொடர்பில் கவனம் செலுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளனர். மேலும், தற்காலிக கூடாரங்கள் வழங்கப்பட்டாலும், நிரந்தர மலசலகூட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு, வீதி அபிவிருத்தி அதிகார சபையினர், வீதி அபிவிருத்தித் திணைக்களத்தினர், இலங்கை மின்சார சபையினர் மற்றும் ஏனைய திணைக்களத்தினர் நேரடியாகச் சென்று பார்வையிட்டு, மதிப்பீடுகளை மேற்கொண்டு உடனடியாக அந்தப் பிரதேச புனரமைத் தொடர்பில் கவனம் எடுக்குமாறு அரச அதிபர் பணித்துள்ளார். (ற–5)

## ஆலயங்களை புனரமைக்க நிதி ஒதுக்கீடு

இந்து சமய கலாசாரத் திணைக்களத்தால் வவுனியா பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 19 ஆலயங்களுக்கு நிதி உதவி ஒதுக்கிடப்பட்டுள்ளது என்று வவுனியா பிரதேச செயலாளர் கா.உதயராசா தெரிவித்தார்.

குள்ளிக்குளம் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயம், கூமாங்குளம் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம், மகிழங்குளம் ஆதிமுத்து மாரியம்மன் ஆலயம், உக்குளாம்குளம் ஸ்ரீசித்திவிநாயகர் ஆலயம், குருமன்காடு ஸ்ரீவிநாயகர் ஆலயம், நெளுக்குளம் வேம்படிஆலயம், தாண்டிக்குளம் ஸ்ரீகந்தசாமி ஆலயம், தாண்டிக்குளம் ஸ்ரீஜயனார் ஆலயம், நாகர் இலுப்பைக்குளம் ஸ்ரீசித்தி விநாயகர் ஆலயம், பூம்புகார் ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலயம், பொன்னாவரசங்குளம் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், ஆச்சிபுரம் ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலயம், ஸ்ரீராமபுரம் ஸ்ரீஜயப்பன் ஆலயம், பட்டக்காடு ஸ்ரீராமர் ஆலயம், மணிபுரம் ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆலயம், பறநட்டகல் ஸ்ரீவிநாயகர் ஆலயம், ஓயார் சின்னக்குளம் தில்லையம்பலப் பிள்ளையார் ஆலயம், நொச்சிமோட்டை ஸ்ரீமுருகன் ஆலயம் ஆகிய ஆலயங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வவுனியா சிந்தாமணி விநாயகர் ஆலய புனரமைப்புக்கு ரூபா 10 லட்சம் ஒதுக்கிடப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-402)

## தாக்குதலுக்கு இலக்காகி மூவர் மருத்துவமனையில்

வீடுகளுக்குள் அத்துமீறி நுழைந்தவர்கள் வீடுகளில் இருந்தோரை வாளால் வெட்டியதுடன் தாக்குதலும் நடத்தியுள்ளனர். அதில் காயமடைந்த இரண்டு பெண்கள் உட்பட மூன்று பேர் சாவகச்சேரி ஆதார மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனர்.

இந்தச் சம்பவங்கள் நேற்றுமுன்தினம் இரவு வெவ்வேறு இடங்களில் நடந்துள்ளன.

சாவகச்சேரி சண்முகம் வீதியில் இரவு 11.30 மணியளவில் சந்தேகத்துக்கு இடமான நிலையில் சிலர் நடமாடு வதை அவதானித்த வீட்டுக்காரர் கூக்குரலிடவே அவரது வாயைப் பொத்தி, கையில் வைத்திருந்த வாளால் வெட்டியுள்ளனர். அந்த நிலையிலும் அவர்களுடன் போராடி ஒருவரிடமிருந்து வாளைப் பறித்து அவர்களை வெட்ட முயற்சித்தபோது வந்தவர்கள் தப்பியோடியுள்ளனர்.

அதில்வெட்டுக்காயத்துக்குஇலக்கான நிலையில் சாவகச்சேரி சண்முகம் வீதியைச் சேர்ந்த ஆண்டி நாகலிங்கம் (வயது – 66) என்பவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மீசாலை மேற்கில் வளவுக்குள் நுழைந்தவர்களைக் கண்டு கூக்குரலிட்ட மூதாட்டியை தாக்கியதில் அவரது கை எலும்பில் பாதிப்பு ஏற்பட்டது. கணபதிப்பிள்ளை கமலாம்மா (வயது – 60) என்பவரே பாதிக்கப்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

அதேவேளை, பாலாவிப் பகுதியில் வளவினுள் அத்துமீறி நுழைந்த நபர் அங்கிருந்தகுடும்பப்பெண்ணை மோசமாகத் தாக்கியுள்ளார். தாக்குதலுக்கு இலக்கான இதே இடத்தைச் சேர்ந்த சிவகுமார் விமலேஸ்வரி (வயது – 47) என்பவர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ற-9)



புனித வெள்ளி தினமாகிய நேற்று அனைத்து கத்தோலிக்க, கிறிஸ்தவ ஆலயங்களிலும் கிறிஸ்து இயேசுவின் இறப்பை நினைவுகூரும் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. காலையில் நடைபெற்ற சிலுவைப்பாதை தியானத்தில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். அத்துடன் பல்வேறு ஆலயங்களுக்கும் சென்று நற்கருணை ஆண்டவரைப் பிரார்த்தித்து தமது வேண்டுதல்களை நிறைவேற்றுவதிலும் மக்கள் ஈடுபட்டனர். (ஒ – 135)

## மாந்தை மேற்கு கிராமங்களில் காட்டு யானைகள் அட்டகாசம்

### பிரதேச செயலாளர் நடவடிக்கை எடுக்கவில்லை என மக்கள் விசனம்

மன்னார், ஏப்.4

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல கிராமங்களில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது என்று தெரிவித்துள்ள கிராம மக்கள், காட்டு யானைகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த அதிகாரிகள் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்வதில்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

போர் காரணமாக இடம்பெயர்ந்திருந்த மக்கள் தற்போது அங்கு மீண்டும் மீள்குடியமர்ந்துள்ளனர். அவர்கள் விவசாயம் மற்றும் தோட்டச் செய்கை மூலம் தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்தி வருகின்றனர். எனினும் காட்டு யானைகளால் அவர்களது விவசாய நடவடிக்கைகள் கடும் பாதிப்பை எதிர்நோக்கியுள்ளன.

தற்போது காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது என்றும்– அவை விவசாயச் செய்கைகளை சேதப்படுத்துவதோடு வீடுகளில் உள்ள தென்னை,வாழை போன்ற மரங்களையும் நாசப்படுத்துவதாக அந்தக் கிராமங்களின் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

யானைகளால் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து மாந்தை மேற்கு பிரதேச செயலாளரிடம் பல தடவைகள் தெரியப்படுத்தியும், அவர் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என்றும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ற-56)

# ஓய்வுநிலை ஆசிரியர்களின் கொடுப்பனவுக்கு முன்னுரிமை

### வழங்க வேண்டும் என ஆசிரியர் சங்கம் வலியுறுத்து

அச்சுவேலி, ஏப். 4

மூத்த பிரஜைகளான ஓய்வுநிலை ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கு முன்னுரிமை அடிப்படையில் வடக்கு மாகாண கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஓய்வுநிலை ஆசிரியர் – அதிபர்களுக்கு புதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் கிடைக்கக் கூடிய ஓய்வூதிய அதிகரிப்பு மற்றும் நிலுவைகளை கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யாமல் காலம் கடத்துவது மனிதாபிமானத்துக்கு முரணான செயற்பாடாகும். – இவ்வாறு தெரிவித்துள்ளது இலங்கை ஆசிரியர் சங்கம்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த அந்தச் சங்கத்தின் செயலாளர் யோசப் ஸ்ராலின், இது தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சரிடம் தெரியப்படுத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

"இலங்கை ஆசிரியர் சேவை, அதிபர் சேவை ஆகியவற்றுக்கு அறிமுகம் செய்யப்பட்டுள்ளபுதிய சேவைப் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் 2008 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் திகதிக்கு பின்னர் ஓய்வு பெற்ற ஆசிரியர், அதிபர்களுக்கும் சம்பளஉயர்வுகிடைக்கின்றது. அதன் மூலம் அவர்களின் ஓய்வூதிய கொடுப்பனவு அதிகரிக்கின்றது. அந்தவகையில் 2011 ஆம் ஆண்டு ஜனவரியில் இருந்து நிலுவையும் கிடைக்கின்றது.

ஓய்வு நிலையில் உள்ளவர்களின் கோவைகள் வலயக்கல்வி அலுவலகங்களால் பூர்த்தி செய்யப்பட்டு, ஓய்வூதியத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கும்போது ஓய்வூதியத்திணைக்களம் கொடுப்பனவை வழங்குவதற்கு தயாராக உள்ளது. ஆனால் வடக்கு மாகாணத்தில் உள்ள கல்வி வலயங்கள் ஓய்வூதிய நிலையில் உள்ளவர்களின் கோவைகளை முன்னுரிமை அடிப்படையில் பூர்த்தி செய்யாமல் காலம் கடத்தி வருகின்றன."– என்றும் அவர் குறிப்பிட்டார்.

"ஓய்வுநிலையில் உள்ள மூத்த பிரஜைகளின் கொடுப்பனவை முன்னுரிமை அடிப்படையில் கிடைக்கச் செய்ய வேண்டும். இது அடிப்படைக் கோட்பாடாகும். அதில் தாமதம் செய்வது மனிதாபிமானத்துக்கு முர ணான செயலாகும். இந்தக் கொடுப்பனவு உரிய வேளையில் கிடைக்கச் செய்யாவிடில் சிலருக்கு மரணத்துக்குப் பிந்திய கொடுப்பனவாக அமையலாம். ஓய்வு நிலை ஆசிரியர், அதிபர்களின் கொடுப்பனவுகளை முன்னுரிமை அடிப்படையில் செய்யுமாறு வடக்கு மாகாண கல்வி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவந்த போதிலும், இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று முறையிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச்சரின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளோம்."– என்றும் தெரிவித்துள்ளார். (ற-11)

## அம்புலன்ஸை மோதிய யுவதிகள் அதிலேயே மருத்துவமனைக்கு

யாழ்ப்பாணம், ஏப்.4

கவனவீனமாக மோட்டார் சைக்கிள் ஓட்டிச் சென்ற யுவதிகள் அம்புலன்ஸுடன் மோதி விபத்துக்குள்ளாகி உள்ளனர்.

அவர்களை அதே அம்புலன்ஸ் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்த்துவிட்டுச் சென்றது.

கோப்பாயில் நேற்று முற்பகல் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. காயமடைந்தவர்களில் ஒருவர் யாழ். பல்கலைக் கழகத்திலிருந்து வெளியேறியவர். அவரும் மற்றொரு யுவதியும் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது விபத்து இடம்பெற்றது.

அவர்கள் கவனவீனமாக மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றதனாலேயே விபத்து இடம்பெற்றதாகக் கூறப்படுகிறது.

பருத்தித்துறையிலிருந்து நோயாளி ஒருவரை ஏற்றிச் சென்று யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்து விட்டு அம்புலன்ஸ் திரும்பிச் சென்றுகொண்டிருந்த போதே, குறித்த யுவதிகள் அம்புலன்ஸின் பின்புறமாகச் சென்று மோதியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ற-4)



நெடுங்கேணி பிரதேசத்தில் அண்மையில் 3 கடைகளின் நடைபெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் நெடுங்கேணிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நெடுங்கேணி பொலிஸ் நிலையத்தில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் இந்தத் திருட்டுச் சம் பவங்கள் இடம்பெற்றன என்று ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன. அதையடுத்து நெடுங்கேணி பொலிஸ் பொறுப்பதிகாரியின் ஒழுங்குபடுத்தலுக்கமைவாக நடத்தப்பட்ட விசாரணைகளில் முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் உன்ன தேவிபுரம் கிராமத்தைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். திருடப்பட்ட பொருள் களும் மீட்கப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்டவர்கள் விரைவில் வவுனியா நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ற)

## காரைநகர்- ஊர்காவற்றுறை கடற்பாதைச் சேவை ஆரம்பம்

காரைநகருக்கும் – ஊர்காவற்றுறைக்குமான கடற்பாதை சேவை மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. குறித்த கடற் பாதையில் கேபிள் அறுந்ததால் அந்தச் சேவை பாதிக் கப்பட்டிருந்தது. ஆயினும் தற்பொழுது கேபிள் இன்றி இந்தச் சேவை மக்கள் தேவை கருதி இடம்பெற்று வருகின்றது.

இந்த கடற்பாதைக்கான கேபிள் அடுத்த வாரத்துக்குள் கொழும்பில் இருந்து எடுத்து வருவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தற்போது காரைநருக்கும் – ஊர்காவற்றுறைக்கும் இடையில் நாள் ஒன்றுக்கு பதினொரு இருவழிச்சேவை இடம்பெற்று வருகின்றன. (ற-17)

## கைக்குண்டுகள் மீட்பு

மானிப்பாய் கட்டுடை இடிகுண்டுப் பகுதியில் 2 கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். அதே இடத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுமுன்தினம் தனது வயலுக்குச்சென்றிருந்தநிலையில் அங்குள்ள மரம் ஒன்றின் கீழ் குறித்த கைக்குண்டுகள் இருந்துள்ளதை அவதானித்துள்ளார். அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டது.

அங்கு சென்ற பொலிஸார் குண்டு செயலிழக்க வைக்கும் படையினரை அழைத்து, அவற்றை அழித்தனர். கைக்குண்டுகள் பாவிக்க முடியாதளவுக்கு பழுதடைந்திருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-4)

உதயன்

## அரச அதிகாரிகளுக்கு அரசியல் வேண்டாம்

**நல்லாட்சி என்ற சொல்லுக்கு ஏற்ப அவர்கள் செயற்படவேண்டும் என்கிறார் வினோ எம்.பி**

மன்னார், ஏப் 04

அரச அதிகாரிகள் அரசியல் செயற்பாடுகளை மேற்கொள்ளாமல் புதிய அரசின் நல்லாட்சி என்ற சொல்லுக்கேற்ப செயற்படவேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ நோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

மாந்தை கிழக்கு துணுக்காய் பிரதேச சபைகளின் தவிசாளர்கள், உபதவிசாளர்கள் மற்றும் பிரதேச செயலர், திட்டமிடல் பிரிவு அதிகாரிகளுடன் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

அரசின் நூறு நாள் வேலை திட்டத்தின் கீழ் கிராமம் ஒன்றுக்கு தலா 10 இலட்சம் ரூபா வேலைத்திட்டத்திற்கான முன்மொழிவுகளை இறுதிப்படுத்தும் கூட்டங்கள் வடக்கில் சகல பிரதேச செயலக பிரிவுகளிலும் நடைபெறுகின்றன.

இந்தத் திட்டங்கள் தொடர்பில் உள்ளூர் கிராம மக்கள் பிரதிநிதிகள் மற்றும் மக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளாமல் ஒரு சிலரிடம் மாத்திரம் முன்மொழிவுகள் பெறப்பட்டு பிரதேச செயலகங்களில் அவற்றை இறுதி செய்யும் கூட்டம் நடத்தப்பட்டுள்ளன.

அரச அதிகாரிகளின் இது போன்ற நடவடிக்கைகளினால் மக்கள் பெரும் அதிருப்தியடைந்துள்ளனர். அத்துடன் மேற்குறிப்பிட்ட கூட்டங்களில் கட்சிப் பிரமுகர்களை அறிமுகப்படுத்தும் வேலைகளும் இடம்பெற்றுள்ளன.


முன்னர் ரிசாத் பதியுதீனின் இணைப்பாளராக இருந்தவரை தற்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப்பாளர் எனவும், மக்களினால் தெரிவு செய்யப்படாதவர்களை முன்னிலைப்படுத்தும் நிகழ்வுகளும் இடம்பெற்றுள்ளன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பயணத்துக்குக் காரணமாக இருந்த கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கூட அழைக்காத நிலையில் அழையா விருந்தாளிகளாகச் செல்லும் நிலைமை மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் பிரதேசங்களில் இடம்பெற்றுள் ளன.

திட்டங்களை மக்களிடம் திணிக்காமல் அவர்களின் கருத்துக்களுக்கேற்ப செயற்படுத்தப்பட வேண்டும்–என்றார். (த)

# கட்சியைப் பலப்படுத்தவே வடக்குக்கு வந்தார் பிரதமர்

## முதலமைச்சர் விக்கி, பிரதமர் ரணில் மீது கடும் தாக்கு



யாழ்ப்பாணம், ஏப். 4

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய தேசியக் கட்சியை வடக்கில் பலப்படுத்துவதற்காகவே கடந்த வாரம் பயணம் மேற்கொண்டிருந்தார். வரப் போகும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற முடியுமா என்ற பயத்திலேயே பிரதமர் வடக்கில் கால் ஊன்ற நினைக்கின்றார். பிரதமரின் அரசியல் ரீதியிலான பயணம் என்பதாலேயே அதில் நான் பங்கெடுக்கவில்லை என்று குறிப்பிட்ட முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன், தேர்தலின்போது தேசியக் கட்சிகள் என்று அடையாளப் படுத்தி வருவோருக்கு வாக்களிக்க வேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டார்.

முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையின் சத்திர சிகிச்சை விடுதித் தொகுதி மற்றும் இரத்த வங்கி திறப்பு விழா நிகழ்வு நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. இதில் இணைப் பிரதமர விருந்தினர்களாக, வடக்கு முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் கொழும்பு அரசின் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்னவும் கலந்து கொண்டிருந்தனர். இங்கு உரையாற்றுகையிலேயே முதலமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

***ஓய்வுக்கு எப்போதும் தயார்***

புதிய அரசின் பிரதமருடன் எனக்கேன் வீண் விவாதம் என்று நினைக்கக்கூடும். மக்களான நீங்களும் நினைக்கக்கூடும். வருமுன் காப்பவனே புத்திசாலி. வருவதை அறிந்து நாங்கள் உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் அது எம்மையே வருத்தும். நான் இப்போதும் ஓய்வு பெற்று வீடு சென்று வாழும் மனநிலையில் தான் இருக்கின்றேன். எனக்கு எதுவும் தேவையில்லை. ஆனால் பொறுப்புக்கள் தரப்பாட்டால் அவற்றைத் தட்டிக் கழிக்க நான் தயாரில்லை. பிரதமரின் பயண அழைப்பிதழ் கிடைத்தது. அதை அனுப்பியவர் திருமதி றோசி சேனாநாயக்க. என்னைப் பிரதமரின் உத்தியோகபூர்வ அலுவலகம் அழைக்கவில்லை. பிரதமர் தனது வடக்குப் பயணம் பற்றி எம்முடன் கலந்தாலோசிக்கவுமில்லை. அவர் சார்பான அழைப்பை விடுத்தது அவரின் கட்சியின் பிரமுகர் ஒருவர்.

***கட்சிக்காகவே பிரதமர் வந்தார்***

கட்சியின் இன்னொருவரின் அழைப்பின் பேரிலேயே பிரதமர் இங்கு வருகை தந்தார். ஆக மொத்தம் இதன் அர்த்தம் என்ன? பிரதமரது கட்சியை இங்கு நிலைநாட்ட, அலுவலகங்களைத் திறந்து வைக்க, நேரடியாக மத்தியில் இருந்து மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுக் கொடுத்து, இவரிடம் சென்றால் உங்களுக்கு நாங்கள் சகல உதவிகளையும் பெற்றுக் கொடுப்போம் என்று கட்சி முறையாகக் கூறவே பிரதமர் இங்கு வருகை தந்தார்.

இது முற்றிலும் ஓர் அரசியல் ரீதியான பயணம். எனவே நான் மக்களின் பிரதிநிதி என்ற முறையில் பிரதம மந்திரியின் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லையே என்ற குற்றச்சாட்டு அர்த்தமற்றது. அவர் தமது கட்சியை வளர்க்க வந்தார். வளர்த்து விட்டுப் போகட்டும். அதற்கும் எமக்கும் எந்தச் சம்பந்தமுமில்லை.

***தேர்தல் பயம்***

225 மக்கள் பிரதிநிதிகள் கொண்ட நாடாளுமன்றத்தில் இன்று 45 பிரதிநிதிகளை மட்டுமே கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிப் பலம் பெற்று ஆண்டு வருகின்றது. அடுத்த பொதுத் தேர்தலில் தமக்கு என்ன கிடைக்குமோ என்ற பயம் உள்ளூரப் பிரதமரை வருத்திக் கொண்டு தான் இருக்கும். அதனால்தான் வடமாகாணத்தில் எப்படியாவது காலடி ஊன்ற அவர் பல நடவடிக்கைகளில் இறங்கியுள்ளார்.

ஒரு பிரதமரை அண்டினால் பல நன்மைகள் பெறலாம் என்பது தெரிந்த விடயந்தான். ஆனால் அடுத்த பொதுத் தேர்தலில் என்ன நடக்கப் போகின்றது என்பதை அறியாது, வடக்கு மாகாணத்தில் மக்களின் செல்வாக்கைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த அவர் முனையும் போது அதனை மக்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதும் எனது கடப்பாடுதான்.

***அரசியல் லாபம் தேடும் பிரதமர்***

வடமாகாணத்தில் தமது கட்சியை நிலைநாட்ட பிரதமர் முயற்சிக்கையில், நாங்கள் எங்கள் மக்களுக்கு விசுவாசமாக நடந்து கொள்வது எந்தக் காலத்திலும் பிழையெனக் கொள்ள முடியாது. நான் என் சொந்த நன்மை கருதியோ, சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு இடம் கொடுத்தோ முரண் நடவடிக்கைளில் ஈடுபடவில்லை.

வலி. வடக்கில் உறுதியளித்த ஆயிரம் ஏக்கர்களில் 400 ஏக்கரை மட்டும் விடுவித்து விட்டு, அரசியல் ரீதியாகத் தமக்கு இலாபம் தேடும் பிரதமருடன் நான் எவ்வாறு கைகுலுக்கி மகிழ்ச்சியைத் தெரிவிப்பது? எமது மக்கள் எங்களை மாகாண ஆட்சிபீடம் ஏற்றியது சில காரணங்களை முன்வைத்து. அவை எமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகத் தரப்பட்டுள்ளன.

இராணுவம் வெளியேற வேண்டும் இராணுவத்தினரை வெளியேற்ற வேண்டும் என்பது மக்களின் எதிர்பார்ப்பு. போர் முடிந்த பின்னர் அவர்களுக்கு வடமாகாணத்தில் எந்த வேலையும் இல்லை. வேண்டுமெனில் பொலிசாரின் தொகையைக் கூட்டட்டும். ஆனால் இராணுவத்தினர் மக்களின் காணிகளை மீளளித்து மக்கள் மத்தியில் இருந்து வெளியேற வேண்டும். இவ்வாறான முக்கிய விடயங்களை அறுதியிறுதியாகப் பேசித் தீர்த்துக் கொள்ளாவிடில் பாதிக்கப்படப்போவது நாங்களே.

பிரதமரின் செயலால் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் வடமாகாண சபைக்கிருக்கும் மிக நலிந்த – மெலிந்த அதிகாரங்கள் பற்றிய உண்மைகள் வெளிவரத் தொடங்கியுள்ளன. மத்தியால் எந்த அளவுக்கு மாகாணத்தைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை எமக்குணர்த்தி வருகின்றார் பிரதமர்.

***மத்தியின் மயாஜாலத்தில் வீழ்ந்துள்ளனர்***

இதை அறியாமல் மத்தியின் மயாஜாலங்களுக்கு முன் மண்டியிட எம்முள் சிலர் முன்வந்துள்ளனர். எமது மக்களின் உரித்துக்கள் இதில் அடங்கியுள்ளன. இவ்வாறான செயல்களை வெறும் மனித உறவுகளின் வெளிப்பாடு என்று கூறமுடியாது. ஆழமாக அமைந்திருக்கும் பக்கச் சார்பான எண்ணங்களின் வெளிப்பாடுகள் என்றே கொள்ள வேண்டும்.

மத்தியின் அரசு தரும் அனைத்து நன்மைகளையும் இருகரம் நீட்டி வாங்கிக் கொள்ளுங்கள். அவர்கள் அழைக்கும் கூட்டங்களுக்குப் போய் என்ன சொல்கின்றார்கள் என்பதைக் கேட்டுக் கொள்ளுங்கள். ஆனால் தேர்தல் காலம் வந்ததும் ஒரு வாக்கையாவது தேசியக் கட்சிகள் என்று தம்மை அடையாளப்படுத்தி வரும் கட்சிகளுக்குக் கொடுக்காதீர்கள்.

***எதுவும் நடக்கவில்லை***

மத்தி எமக்கு நட்ட ஈடாகத் தர வேண்டிய கோடிகளில் மிக்க் குறைந்த ஓர் அளவையே எமக்கு தரப்பார்க்கின்றனர். எமது காணிகள் விடுபடவில்லை. போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. பாரம்பரிய தொழில்களைச் செய்ய அனுமதி கிட்டவில்லை. போர்க்காலத்தில் வெளியில் இருந்து வந்தோர் வியாபாரங்களை விட்டுச் செல்லவில்லை. இராணுவத்தினர் தெற்கிலிருந்து மக்களைக் கொண்டுவந்து குடியேற்றும் நிலை நிறுத்தப்படவில்லை.

எனவே இவற்றை எடுத்துக் கூற, எமது நிலையறிந்த மக்கள் பிரதிநிதிகளே மத்தியிலும் – மாகாணத்திலும் அவசியம் என்பதை மறந்து விடாதீர்கள். ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னரே அரசின், 100 நாள் திட்டத்துடன் சேர்ந்து எவ்வாறு எமக்கு உதவி செய்யலாம் என்பது பற்றி உரிய ஆவணங்களை மூன்று தலைவர்களுக்கும் அனுப்பி வைத்திருந்தோம். எமது கோரிக்கைகளில் ஆளுநர், பிரதம செயலாளர், ஆகியோரை மாற்றியதைவிட அது தொடர்பாக வேறு எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை – என்றார். (த–5)

# ‘சம்பந்தன்’ என்பது ‘சம்பிக்க’ ஆனால் எமக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி

மட்டக்களப்பு, ஏப் 04

நாடாளுமன்ற நடைமுறையை இனவாதமாக்க முனைகிறது. இதுதான் இலங்கை நாட்டின் சிறப்பம்சம். சம்பந்தன் என்ற பெயர் சம்பிக்க என இருக்குமானால் சிலவேளைகளில் இனவாதிகள் அவரை எதிர்க் கட்சித் தலைவராக ஏற்றுக்கொண்டிருப்பர் என மட்டக்களப்பு மாவட்டத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மேற்கு வலய பாவற்கொடிச்சேனை விநாயகர் வித்தியாலய மெய்வல்லுநர் திறனாய்வு விளையாட்டு விழா அதிபர் சு.ரவி முதன்மை அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நாடாளுமன்றத்தில் தற்போது தேசிய அரசு அமைந்துள்ளதாக ஒருசாரார் கூறுகின்றனர். இன்னுமொரு சாரார் நல்லாட்சி இடம்பெறுவதாகக் கூறுகின்றனர்

என்னைப் பொறுத்தமட்டில் இந்த இரண்டு ஆட்சிகளும் இங்கில்லை தேசிய அரசெனில் எதிர்க் கட்சித் தலைவர் என்ற பதவி இருக்கத் தேவையில்லை நல்லாட்சியெனில் கடந்த அரசில் ஊழல்செய்ததாகச் சந்தேகிக்கப்பட்ட பேர்வழியில் எவ்வாறு நல்லாட்சி என்று கருதமுடியும்.

நாடாளுமன்றத்தில் ஏற்கனவே எதிர்க்கட்சியாக இருந்த பொதுசன ஐக்கிய முன்னணியின் சிறிலங்கா சுதந்திர கட்சிஉறுப்பினர்கள் சுமார் 28 பேருக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்ட நிலையில் அடுத்த எதிர்க் கட்சியில் இருப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தான். அவ்வாறாகின் எதிர்க் கட்சித் தலைவர் பதவி சம்பந்தன் ஐயாவுக்கே தார்மீக ரீதியாக சபாநாயகரால் அறிவிக்கப்பட வேண்டும் .

ஆனால்சம்பந்தன்என்ற பெயர் சம்பிக்க என இருக்குமானால் சில என்பதால் எதிர்க் கட்சித் தலைவர் பதவியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழங்கவிடாமல் தடுப்பதற்காக இப்போது நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப் பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் கையொப்பத்தை இனவாத நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச உட்பட பலர் சபாநாயகரிடம் கொடுத்துள்ளனர். இவ்வாறான செயல் நாடாளுமன்ற நடைமுறைக்கு முற்றிலும் முரணான செயல். எதிர்க்கட்சித் தலைவர் என்பது நாடாளுமன்றத்தில் ஆளும்கட்சியில் பல கட்சிகளை எந்தக் கட்சி வைத்துள்ளதோ அது எதிர்க் கட்சி அந்தஸ்தைத் தானாகப் பெறும். அவ்வாறு தற்போது இருப்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டுமே. அது 13 ஆசனங்களைக் கொண்ட கட்சியாகும். ஓர் எதிர்க்கட்சித் தலைவர் பதவியைத் தமிழருக்கு வழங்கக்கூடாது எனத் தடுக்கும் பேரினவாதம் எப்படி வடக்கு–கிழக்குக்கு அரசியல் தீர்வு வழங்க முன் வருவார்கள் என்பதை தமிழ் மக்களாகிய நாம் சிந்தித்து தமிழரின்அரசியல் பலத்தை உறுதி செய்ய எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்புக்கு வாக்களித்து ஒன்றி



# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** நிர்ப்பந்தத்தின் பேரில் மனதுக்கு பிடிக்காத வேலை செய்ய வேண்டி இருக்கலாம். தொழில் வியாபாரத்தில் விழிப்புடன் இருப்பது நன்மைதரும். எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும்.

**இடபம்:** அரச தொடர்புடைய முக்கிய நபர்களின் அறிமுகம் அவர்களால் உதவியும் கிடைக்கப் பெறுவீர்கள். உங்கள் பேச்சை சரியாகப் புரிந்து கொள்ளாமல் எதிர்ப்புத் தெரிவிப்பார்கள். அனுசரித்துச் செல்வது நல்லது

**மிதுனம்:** புதிய காரியங்களில் ஈடுபடுவதை தள்ளிப் போடுவது நல்லது. எந்த வாக்குறுதியும் அளிக்காமல் இருப்பது நல்லது. உத்தியோகத்தில் உயர்வு பெற தேவையான உதவிகள் கிடைக்கும்.

**கடகம்:** உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகள் கொடுத்த பணியினை முடிப்பதில் தாமதம் உண்டாகலாம். அடுத்தவர் செய்கை கோபத்தைத் தூண்டுவதாக இருக்கும். கவனம் தேவை.

**சிங்கம்:** மருத்துவ செலவு ஏற்படக்கூடும். வாழ்க்கைத் துணையுடன் விவாதம் உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வீண் அலைச்சலையும் காரிய தாமதத்தையும் சந்திக்க வேண்டி இருக்கும்.

**கன்னி:** குடும்பத்தில் இருந்த குழப்பம் நீங்கும். வெளியூர் பயணங்களின்போது கவனம் தேவை. அடுத்தவர்களுக்காக பொறுப்புகளை ஏற்கும்போது ஒரு முறைக்கு பலமுறை யோசித்து முடிவு எடுப்பது நல்லது.

**துலாம்:** புதிய நபர்களிடம் எச்சரிக்கை தேவை. பெரியோர்களின் உதவி கிடைக்கும். மனதில் தைரியம் தன்னம்பிக்கை உண்டாகும். துணிச்சலுடன் எந்தக் காரியத்திலும் ஈடுபட்டு சாதகமாக செய்து முடிப்பீர்கள்.

**விருச்சிகம்:** தொழில் வியாபாரம் திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் வருமானம் அதிகம் கிடைக்கப் பெறுவீர்கள். வராது என்று எண்ணிய பணம் வந்து சேரும்.

**தனுசு:** சகோதர வழியில் வேண்டிய உதவி கிடைக்கும். பிள்ளைகள் மகிழ்ச்சியுடன் காணப்படுவார்கள். மன தைரியம்கூடும். துணிச்சலுடன் எந்தக் காரியத்திலும் ஈடுபட்டு சாதகமாகச் செய்து முடிப்பீர்கள்.

**மகரம்:** சமூகத்தில் மரியாதை உயரும். வாக்கு வன்மையால் புகழ் கூடும். புதிய நபர்களை நம்பி எதையும் செய்யும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலைச்சலைச் சந்திக்க வேண்டி இருக்கும்.

**கும்பம்:** வெளியூர், வெளிநாட்டு பயணம் திட்டமிட்டபடி அமையும். உறவினர்களுடன் சுமுகமான போக்கு காணப்படும். அவர்களால் நன்மையும் உண்டாகும். நீண்ட தூர தகவல்கள் நல்ல தகவல் தரும்.

**மீனம்:** உங்களது செயல்களை மற்றவர்கள் பாராட்டுவார்கள். மரியாதையும் அந்தஸ்தும் அதிகரிக்கும். மனதில் தைரியமும் புதிய உற்சாகமும் உண்டாகும். புதிய முயற்சிகளில் இழுபறியான நிலை காணப்படும்.

# விசைப்பலகை இல்லா மடிக்கணினி



விசைப் பலகை இல்லாமல் முழுவதும் தொடுதிரையிலான மடிக்கணினி பயன்பாட்டுக்கு வரவுள்ளது. தேவைக்கேற்ப தொடுதிரை விசைப் பலகை மூலம் மடிக்கணினியாகப் பயன்படுத்தலாம். புத்தகம் படிக்க வேண்டும் என்றால் கிண்டில் போல பயன்படுத்தலாம்.
செய்தித்தாள் படிக்க வேண்டும் என்றால் செய்தித்தாளின் முழுமையான பக்கத்தையும் இரண்டு பக்க ஸ்கீரினிலும் பார்க்க முடியும். பில் என்கிற டிசைன் நிறுவனம் இந்த வகை மடிக்கணினியை வடிவமைத்துள்ளது.




# ரிலாக்ஸா வாசியுங்க...

பெண் படத்தில பாக்குறது ஓரளவுக்கு இருந்தாலும் பையனோட எதிர்பார்ப்புகள் ஏதோ, 'திரிஷா மாதிரி இல்லை என்றாலும், அட்லீஸ்ட் நமீதா மாதிரி' என்ற வகையில் இருப்பதால் அவனுக்கு இதில் அவ்வளவாக நாட்டமில்லை. போய் பார்த்து விட்டு வந்து விடலாம் என்ற சொந்தக்காரர்களின் குடைச்சல் தாங்க முடியாததால், அவர்களுடனே பெண் பார்க்க கிளம்பிப் போனான்.

மாப்பிள்ளைக்கு இருக்கும் ஒரே கெட்ட பழக்கம் அவன் ஒரு 'காப்பி பிரியன்'. இதை ஏற்கனவே சொந்தக்காரர்கள் மூலம் அறிந்து கொண்ட பெண் வீட்டார், பெண் அவள் கையால் போட்ட காப்பி என்று சொல்லி அவள் கையாலே காபியை பறிமாற வைத்து விட்டார்கள். சிறிது பதற்றத்தில் இருந்த நம்ம மாப்பிளை, பெண்ணை சரியா கூட பார்க்காம காப்பிய எடுத்து குடிக்க ஆரம்பித்து விட்டான்.

அப்படி ஒரு காப்பியை அவன் இதுவரை குடித்ததே இல்லை. அவ்வளவு சுவை, அவன் மெய் மறந்து குடித்து கொண்டிருக்கும் போது, 'என்ன மாப்பிள்ளை காப்பி பிடிச்சிருக்கா ?' என்று பெண்ணின் தகப்பனார் கேட்க, அதே நேரத்தில் 'என்ன தம்பி பெண் பிடிச்சிருக்கா' என்று பையனின் சித்தப்பா கேட்க, 'ரொம்ப பிடிச்சிருக்கு..! சான்சே இல்ல..!' என்று நம்ம மாப்பிள்ளை பெண்ணின் தகப்பனாருக்கு பதில் சொல்ல,

அப்புறம் என்ன, 'பையனே பெண் ரொம்ப பிடிச்சிருக்குன்னு சொல்லிட்டான்' என்று சொல்லி சித்தப்பா தட்டை மாற்றிவிட்டார்.

இருந்தாலும், இந்த காப்பி ஒன்றே போதும். அவளுடன் ஆவலுடன் வாழ, கலக்கிட்டடி காப்பி என்று மாப்பிள்ளையும் மனதுக்குள் கவிதை கிறுக்க ஆரம்பித்து விட்டான்.

கல்யாணமும் முடிந்து விட்டது. முதலிரவில், நம்ம மாப்பிள்ளை தன் மனைவியின் கையை பிடித்துக் கொண்டு, எனக்கு சுவையான காப்பியை போட்டுத்தந்த இந்தக் கைக்கு அன்றைக்கே முத்தம் கொடுக்கனும் என்று நினைச்சன், ஆனால் உங்கள் அப்பா திட்டுவாருன்னு பேசாமல் போயிட்டன்.

கூறினாளாம்..!!)

நீங்கள் அன்றைக்கே முத்தம் கொடுத்திருந்தாலும் அப்பா ஒன்றும் சொல்லி இருக்க மாட்டாரு.. ஏன்னா அந்தக் காப்பிய போட்டதே எங்க அப்பா தான்..!!

அதனால் தான் காபி எப்படி இருக்கு மாப்பிள்ளை என்று ரொம்ப ஆர்வமா உங்களிட்ட கேட்டாரு..!!

மாப்பிள்ளைக்கு கோபம் தலைக்கேற, 'அப்புறம் எதுக்கு நீ போட்டதுன்னு உங்க அம்மா பொய் சொன்னாங்க..??'

மனைவியும் பயங்கர கோபத்துடன், 'அந்த பொய்யைச் சொல்ல சொன்னதே, உங்க அம்மாவும் உங்க சித்தியும் தான்..! எனக்கு பொய் சொல்ல தெரியாது.. எனக்கு அடுப்பு கூட எரிக்கத் தெரியாதுன்னு அப்பவே அவங்களிடம் உண்மைய சொல்லிட்டேன்..!!'

நீதி: திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதில்லை, சொந்தகாரர்களால் நிச்சயிக்கப்படுகிறது...!!

# எலியில் நடிகை சதா



முன்னணி நடிகை சதா நகைச்சுவை நடிகர் வடிவேலு ஜோடியாக எலி படத்தில் நடிக்கிறார். தெனாலிராமன் படத்தை இயக்கிய யுவராஜ் தயாளன் இயக்குகிறார். 1960 ஆம் ஆண்டுகளின் பின்னணியில் உருவாகும் திரைப்படத்தின், படப்பிடிப்பு நடந்து வருகின் றது. இதற்காக ஜொலிக்கும் வீடு, பழமையான வீடு, வில்லனின் ரகசிய இருப்பிடம் என 15 க்கும் மேற்பட்ட அரங்குகளை தோட்டா தரணி அமைத்திருக்கிறார்.

இதில் 15 நாட்களுக்கும் மேலாக மும்பை நடன கலைஞர்கள், நடன இயக்குநர் தாராவின் நடன அமைப்பில் பங்கேற்ற பாடல் காட்சி படமாக்கப்பட்டது.

வடிவேலுவுடன் ஜோடியாக நடிப்பது பற்றி சதாவிடம் கேட்ட போது, படத்தின் கதையும், புதுவிதமான எனது கதாபாத்திரமும் கவர்ந்ததால் இதில் நடிக்க சம்மதித்தேன், என்றார்.

ஏப்ரலில் இதன் படப்பிடிப்பு முடிந்து மே மாதத்தில் படம் திரைக்கு வர உள்ளது.

## பொன்.செல்வராசா எம்.பியின் வாகனம் விபத்து: ஒருவர் சாவு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பொன்.செல்வ ராசா பயணித்த வாகனமும் மோட்டார் சைக்கிளொன்றும் மோதுண்டு விபத்துக்குள்ளான தில் மோட்டார் சைக்கிளில் பய ணித்தவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் கடந்த புதன் கிழமை இடம்பெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் மட் டக்களப்பில் இருந்து கல்முனை நோக்கிப் பயணித்த வாகனம், கல் லடி சிவானந்தா வித்தியாலயத் துக்கு அருகே முன்னே சென்று கொண் டிருந்த மோட் டார் சைக்கிளை மோதி யது என்று தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் வாகரையைச் சேர்ந்த நல்லதம்பிகணேசலிங்கம்(வயது–62) என்பவரே உயிரிழந்தவராவார்.

விபத்தில் நாடாளுமன்ற உறுப்பின ருக்கும், அவரது பாதுகாவலர் களுக் கும் காயம் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்துக் குறித்த விசாரணைகளை காத்தான்குடிப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

விபத்துக்குள்ளான வாகனத்தில் நாடாளுமன்ற உறுப்பினரும், பாது காப்பு உத்தியோகத்தர்கள் மூவ ரும், சாரதியும் பயணித்தனர் என் றும் தெரிவிக்கப்பட்டது. (ற–10)

## தேர்தல் முறைமையில் திருத்தம் திங்கள் கட்சித் தலைவர்களுக்கு

கொழும்பு, ஏப்.

தேர்தல் முறைமையில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் அடங் கிய யோசனை நாளை மறுதினம் வரும் திங்கட்கிழமை கட்சித் தலை வர்களுக்கு வழங்கப்ப டவுள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெறவுள்ள கட்சித் தலை வர்களின் கூட் டத்தின் போதே, மேற்படி யோசனை முன் வைக்கப்படவுள்ளது. இதன் போது, மேற்படி விடயம் குறித்து கட்சிகள் தமது நிலைப்பாடுகளை தெளிவு படுத்தவுள்ளன.

தேர்தல் முறைமையில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் தொடர் பில் ஆராய்வதற்கு ஆணைக்குழு அமைக்காமல் இருக்கவும் தீர்மானிக் கப்பட்டுள்ளது. கால தாமதத்தைக் கருத்திற் கொண்டே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

எனவே, அரசமைப்பின் திருத்தம் ஒன்றை கொண்டு வந்து இதை நிறை வேற்றிக் கொள் வதற்கு நேற்று முன்தினம் நடைபெற்ற தேசிய நிறை வேற்றுச் சபைக் கூட்டத்திலும் இணக் கம் காணப்பட்டதாக அறியமுடிகிறது. விருப்பு வாக்குமுறை நீக்கம், தொகுதிக்கு ஓர் உறுப் பினர் உள்ளிட்ட விடயங்கள் இதில் உள்ளடங் கும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (வ)

## கும்பாபிஷேகம்

வலி.வடக்கு, ஏப்.4

கீரிமலை அருள்மிகு விசாலாட்சி அம்பாள் சமேத காசி விஸ்வநாதர் கோவில் ஜீர்ணோத் தாரண அஷ்ட பந்தன மஹா கும்பாபிஷேக திருக் குட நன்னீராட்டும் பெருஞ் சாந்திப் பெருவிழா நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 8.40 மணிமுதல் நடை பெறவுள்ளது.

எண் ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இன்று சனிக்கிழமை அதிகாலை 5.30 மணிமுதல் மாலை 6.30 மணி வரை நடை பெறவுள்ளது. (வ–86)


சிவமயம்



அளவெட்டி

**அருள்மிகு ஸ்ரீ நரசிம்ம வைரவர் ஆலய புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம்**

வைரவ அடியார்களே!

**கும்பாபிஷேக கிரியாகால விவரம்**

- ★நேற்று (03.04.2015) வெள்ளிக்கிழமை காலை 6.30மணிக்கு கிரியாரம்பம்
- ★04.04.2015 காலை 9.00 மணிமுதல் 05.04.2015 மாலை 4.00 மணிவரை எண்ணெய்க் காப்பு பக்தர்களால் சாத்துதல்.
- ★06.04.2015 காலை 9.15 மணிக்கு ஸ்தூபிகள் அபிஷேகம் தொடர்ந்து மஹா கும்பாபிஷேகம் மு.ப. 10.20 மணிக்குள்

அனைவரும் வருக இறையருள் பெறுக

திருப்பணிச்சபையினர்.


## வடக்கு ஆளுநரைச் சந்திக்கும் அரச பொது ஊழியர் சங்கம்

### உள்ளூராட்சிமன்ற ஊழியரின் பிரச்சினை தொடர்பில்

அம்பாறை, ஏப் 4

அகில இலங்கை அரச பொது ஊழி யர் சங்கத்தின் உயர்மட்டக் குழு ஒன்று வடமாகாண் சபை யின் கீழ் கடமையாற்றும் திணைக்களம் சார்ந்த ஊழியர்கள் மற்றும் உள் ளூராட்சி மன்றங்களின் ஊழியர் கள் எதிர் நோக்கும் பிரச்சினை கள் தொடர்பில் வடமாகாண ஆளு நரைச் சந்தித்து கலந்துரையாட வுள்ளது.

எதிர்வரும் 7ஆம் திகதி செவ் வாய்க் கிழமை வடக்கு ஆளுநர் அலுவல கத்தில் இந்தச்சந்திப்பு இடம்பெற வுள்ளதாக அகில இலங்கை பொது ஊழியர் சங்கத் தலைவர் எஸ்.லோக நாதன் தெரி வித்துள்ளார்.

வடமாகாண ஆளுநருடன் இடம் பெறவிருக்கும் இந்தச்சந்திப்பில் எஸ். லோகநாதன் தலைமையில் சங்க வடமாகாண இணைப்பாளர் எம்.மகேஸ்வரன், மாவட்டக் கிளைச் செயலாளர் மு.சிவ சண்முகராசா, ஆலோசகர் எஸ்.ஜெய்சங்கர் உட் பட சங்க முக்கியஸ்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

அகில இலங்கை அரச பொது ஊழி யர் சங்கம் பத்து அம்சக் கோரிக் கைகளை முன்வைத்து 2013 இல் வடமாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவுடன் நடத்திய பேச்சின் போது எட்டப்பட்ட முடிவுகளின் படியான தீர்மானங்கள் நடைமுறைப்படுத் தப்படாததால் வடக்கு அரச ஊழி யர்கள் எதிர்நோக்கி வரும் பிரச் சினைகள் குறித்து மேற்படி சந்திப் பில் சங்கம் வலியுறுத்தி ஆளுநரின் கவனத்துக்குக்கொண்டுவரவுள்ளது.

இதேவேளை வடமாகாண சபை, திணைக்களம் சார்ந்த ஊழியர்கள் உள்ளூராட்சி மன்றங்களின் ஊழி யர்கள் தமது பொதுவான பிரச்சி னைகள் குறித்து சங்கத்தின் கவ னத்துக்கு உடன் தெரியப்படுத்து மாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் சங்க வடமாகாண இணைப் பாளர் எம்.மகேஸ்வரனுடன் தொடர்பு கொண்டு தகவல்களைத் தெரியப் படுத்தலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள் ளது. (வ–30)

## ஒளிபெற்றதுபன்றித்தலைச்சி அம்மன் ஆலய வளாகம்

தென்மராட்சி, ஏப். 4

மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம் பாள் ஆலய வளாகத்தில் சாவகச்சேரி பிர தேச சபையினர் 2 வீதி விளக்குகளை அண் மையில் பொருத் தியுள்ளனர்.

ஆலய வீதிகளைச் சுற்றி மின் விளக்குகள் ஆலய நிர்வாகத் தினரால் பொருத்தப்பட் டுள்ள போதிலும் அவை ஆலய உற்சவ காலத் தில் மட்டும் பயன்படுத்து வதால் நிரந்தர வீதி விளக்கு பொருத்துமாறு அப்பகுதி மக்களும், அடியார்களும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பிரதேச சபையினர் சபை நிதியிலிருந்து கொள் வனவு செய்யப்பட்ட வீதி விளக்குகளை ஆலயத்தின் முகப்பிலும், ஆலயத்தின் அரு கில் உள்ள மட்டுவில்–புத்தூர் வீதியிலும் பொருத்தியுள்ளனர்.

இரவு வேளையில் ஆலய விளக்குகள் மட் டும் ஒளிர்வதால் வீதி யில் வாகனங்களில் செல் வோர் ஆலயம் இருப்பதை தெரியா மல் செல்வதாகவும் முறைப்பாடுசெய்துள்ள தாகத் தெரிவிக்கப்பட் டது. (வ–9)

## 19 ஆவது திருத்தச் சட்டவியாக்கியானம் திங்கள் நாடாளுமன்றுக்கு அனுப்பப்படும்

கொழும்பு, ஏப் 4

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டம் தொடர் பான உயர்நீதிமன்றத்தின் சட்ட வியாக்கியானம் அடுத்த வாரம் நாடாளுமன்றத்துக்கு அனுப்பப் படவுள்ளது. 19 ஆவது திருத்தச் சட்டம் குறித்து சட்டமா அதி பரின் அபிப்பிராயத்தை அடுத்த திங்கட்கிழமை பெற்றதன் பின்னரே உயர் நீதிமன்றின் சட்ட வியாக்கியானம் அனுப்பி வைக்கப்படவுள்ளது.

19 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் தாக்கல் செய்யப் பட்டிருந்த மனுக்கள் மீதான விசார ணைகள் அனைத்தும் நேற்று முன்தினம் முடி வடைந்த நிலையில், எதிர்வரும் திங்கட் கிழமை சட்டமா அதிபரின் அபிப் பிராயத்தைக் கோர வுள்ளதாக பிரதம நீதியரசர் கே.ஸ்ரீபவன் நேற்று முன்தினம் அறிவித்தார். இதற்கமைய அடுத்த திங்கட்கிழமை ஒரு மணி நேரம் சட்டமா அதிபரின் அபிப்பிராயம் கோரப்படும் என்றும் பிரதம நீதியரசர் தெரிவித்தார்.

19 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டிருந்த 19 மனுக்கள் மற்றும் 5 இடை யீட்டு மனுக்கள் மீதான விசாரணைகள் கடந்த இரு தினங்களாக பிரதம நீதிய ரசர் கே.ஸ்ரீபவன் தலைமையில் சந்ரா ஏக்கநாயக்க, ப்ரியசாத் டெப் நீதியரசர்களைக் கொண்ட மூவரடங்கிய குழு முன்னிலையில் உயர் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

மேற்படி மனுக்கள் மீதான விசாரணை நேற்று முன் தினம் மாலையுடன் நிறைவடைந்ததை அடுத்தே சட்டமா அதிபரின் அபிப்பிராயம் கோரப்பட வுள்ளதாக பிரதம நீதியரசர் அறிவித்தார்.

9 ஆவது திருத்தச் சட்டத்தை சர்வஜன வாக்கெடுப் பின் ஊடாக நிறைவேற்ற வேண்டும் என்ற தரப் பினர் சார்பாகவும் சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்லத் தேவையில்லை, நாடாளுமன்றின் மூன்றி லிரண்டு பெரும்பான்மை பலத்தினூடாக இதை நிறைவேற்றலாம் என்ற தரப்பினர் சார்பாக முன்னி லையான சட்டத்தரணிகள்கடந்த 2 தினங்களாக சூடான வாதப்பிரதி வாதங்களில் ஈடுபட்டனர்.

புதன்கிழமை காலை 10 மணிமுதல் நேற்று முன் தினம் மா லை 5 மணிவரை அனைத்து மனுக்கள் மீதான விசாரணைகளும் இடம்பெற்றன. விசா ரணை நடவடிக்கைகள் தாமதமாக முடிவடைந்த தால், சட்டமா அதிபரின் அபிப்பிராயத்தை திங்கட் கிழமை கோரவுள் ளதாக பிரதம நீதியரசர் அறி வித்தார்.

**3 மனுக்கள் நிராகரிப்பு**

இதேவேளை, 19 ஆவது திருத்தச் சட்டம் தொடர் பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த 3 மனுக்கள் நிரா கரிக்கப்பட்டன. மனுக்களைச் சமர்ப்பித்திருந்த மற்றும் மனு தாரர்கள் சார்பில் முன்னிலையான சட்டத்தர ணிகள் நேரத்துக்கு சமுகமளிக் காததை அடுத்தே மனுக்கள் நிராகரிக்கப்பட்டன. (வ)

## ஒளிர மறுக்கும் மின் விளக்குகள்

சாவகச்சேரி நகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதி களில் மக்கள் பங்களிப்புடன் மின் விளக்கு திட்டத்தின் கீழ் பொருத்தப்பட்ட மின் விளக் குகள் ஒளிர்வதில்லை என்று பொதுமக்களால் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது. அதனை அடுத்து பழுது காரண மாக ஒளிராமல் உள்ள மக்கள் பங் களிப்புடனான மின் விளக்குத் திட்டத்தில் பொருத் தப் பட்ட மின் விளக்குகள் தொடர் பாக நகர சபை யில் எழுத்து மூலமாக முறையிடுமாறும் அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும். (வ–9)


TECOSL

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

# அதியுயர் ஊடக விருதுகள் 2014

**சிறந்த ஊடகவியலாளர்களைக் கௌரவிக்கும் 16 ஆவது வருட விருது வழங்கல் நிகழ்ச்சி**

அதியுயர் ஊடக விருது வழங்குவதற்காக இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கமும் இலங்கை பத்திரிகை ஸ்தாபனமும் பின்வரும் விருதுகளுக்கான விண்ணப்பங்களை அச்சு ஊடகத்துறை ஊடகவியலாளர்களிடமிருந்து கோருகின்றது.

- ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் சில்வா டி ஞாபகார்த்த விருது
- ஆண்டின் சிறந்த தனித்துவ செய்திக்கான விருது
- ஆண்டின் சிறந்த புலனாய்வுக்கான விருது
- ஆண்டின் சிறந்த சூழலியல் செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது
- ஆண்டின் சிறந்த விளையாட்டுச் செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கான டென்சில் பீரிஸ் விருது (26 வயதுக்குக் கீழ்)
- ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது
- ஆண்டின் சிறந்த வணிக செய்தியாளருக்கான விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த விவரண கட்டுரையாளருக்கான உப்பாலி விஜேவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது
- ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ.சிரிவர்தன விருது (மும்மொழிகளிலும்)
- நெருக்கடி சூழலில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி ஞாபகார்த்த விருது

ஊடகத்துறைச் சேர்ந்த சிறந்த அனுபவம் வாய்ந்த நடுவர் குழுவின் மூலம் விருதுகளுக்குத் தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இதற்கான விண்ணப்பங்களையும் அறிவுறுத்தல் கையேட்டையும் இல: 96,பேனார்ட் சோய்சா மாவத்தை, (கிருல வீதி), கொழும்பு - 05 என்ற முகவரியில் அமைந்துள்ள இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தில் இலவசமாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

அல்லது www.slpi.lk, www.pccsl.lk என்ற இணையத்தளத்தினூடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி 10 ஏப்ரல் 2015 ஆகும்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**புவனேஸ்வரி திருஞானசம்பந்தர்**

மண்ணில் 04.10.1932

விண்ணில் 16.03.2014

திதி: பங்குனிப் பௌர்ணமி

ஆண்டொன்று சென்று விட்டது– அம்மா
காலக்கண்ணாடி கணக்குப் போட்டது– அம்மா
விழியிரண்டும் நீர் வற்றவில்லை என்றது– அம்மா
விம்மித் ததும்பியே மனம் நோகுது– அம்மா
பூவுலகில் பிறந்து ஊழ்வினை முடித்தாய்– அம்மா
பூப் போன்ற பிள்ளைகளை விட்டுச் சென்றாய்– அம்மா
பாசப்பிணைப்பால் அன்பைப் பெருக்கினோம்– அம்மா
பாசக்கயிறு வந்து பிணைப்பை அறுத்தது– அம்மா
இறைவன் பாதாரவிந்தமே இறுதியானது– அம்மா
இறைவனிடம் உங்கள் ஆன்மா சரணடையப் பிரார்த்திக்கிறோம்– அம்மா

22, சிவன் கோவில் வீதி,
திருநெல்வேலி.

பிள்ளைகள், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

(48425)(4.3.6)

## 7ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு: 19 . 10 . 1958



உதிர்வு: 04 . 04 . 2008

**அமரர் சதாசிவம் இரட்ணபாலா**

அன்பினில் எம்மை சீராட்டி நாளும் வழிகாட்டிய எம்
தந்தையே பிரிவினில் உம் மறைவினில் நாளும்
வாடுகின்றோம் கண்ணீரில்

மீண்டும் எங்களிடம் வருவீர்களா? என்று ஏங்கித் தவித்து
நிற்கின்றோமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆண்டுகள் ஏழு போனாலும் - எங்கள்
மனக்கவலை தீரவில்லை ஐயா!
ஏழு ஆண்டுகள் ஆனால் என்ன எம் உள்ளம் உங்களையே
நினைத்து நிற்கும் கண் முன்னே நிற்பது போல் இனிய
தோற்றம் காணாது தவிக்கின்றோம் எங்கள் அப்பா!

கண்மூடி விழிப்பதற்குள் கணப்பொழுதில்
சென்றது ஏன்? கலங்குகின்றோம், எண்ணவில்லை
நடந்தவைகள் நிஜம் தானா என்று நினைக்கும் முன்னே
மறைந்து விட்டீர்கள் அப்பா!

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,
திருமதி J. இரட்ணபாலா

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரன்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் **பேரம்பலம் பாலசுப்பிரமணியம் (BATA பாலா)**

(நுகேகொட பிரபல வர்த்தகர் கோபிநாத் D.S.I. ஏஜென்சி (வவுனியா)



வையகத்துள் அறிமுகம்
21.06.1953

தெய்வத்துள் சங்கமம்
06.03.2015

"அன்பின் உருவமாய்
ஆற்றலின் தோற்றமாய்
பண்பின் உறைவிடமாய்
பணிவின் சிகரமாய்த் திகழ்ந்து"

காரைநகர், களபூமியைப் பிறப்பிடமாகவும், ஹம்டன்லேன் வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவுச் செய்தியைக் கேட்டு, அவரது பிரிவுத்துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி மடல் வெளியிட்டோருக்கும், மலர் வளையங்களை வைத்து அஞ்சலி செலுத்திய அஞ்சலி உரை நிகழ்த்திய அன்பு உள்ளங்களுக்கும் உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் சிவபதப்பேறு குறித்த வீட்டுக் கிருத்தியம் நாளை (05.04.2015) ஞாயிற்றுக்கிழமை வீட்டிலும் (06.04.2015) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்திலும் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வுகளிலும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய திக்கரை முருகனை வேண்டி நிற்கின்றோம்.

[இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்]

83/1, ஹம்டன்லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு-06

குடும்பத்தினர்.

(58359)(4.3.6)

## எட்டாம் நாளில் நெஞ்சுருகி நிற்கின்றோம்

அன்புடன் 16 . 05 . 1931



பிரிவுடன் 28 . 03 . 2015

**ம. அன்பு**

உரிமையாளர்- சாள்ஸ் மீசாலை

(மேடை அமைப்பு, மேடை அலங்காரம், ஒப்பனை அலங்காரம் ஒலி-ஒளி)


தந்தையே! எமக்காக நீங்கள் செய்த வேண்டுதல்கள், திருப்பலிகள் எல்லாவற்றுக்கும் நன்றி கூறி...
உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

"சாள்ஸ்"
பங்களா வீதி, மீசாலை.
077 747 0832, 077 959 1101

குடும்பத்தினர்.

(58374)(4.3)

## விட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



தோற்றம் 13 . 09 . 1925

மறைவு 05 . 03 . 2015

அமரர் **பொன்னையா செல்லத்துரை**

கடந்த (05.03.2015) வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வம் பொன்னையா செல்லத்துரை அவர்களின் வீட்டுக் கிருத்திய நிகழ்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் இன்று (04.04.2015) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.


நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.

குடும்பத்தினர்.

(58376)(4.7.3)

## நீங்கா நினைவில் 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

செல்வன் **நிர்மலன் நிர்மலதாஸ்**



அன்னை மடியில்
11★03★1977

ஆண்டவன் அடியில்
04★04★2007

திதி: 06.04.2015

ஒரு நாளும் மாறாது- எம் சொந்தம்
எங்கள் உயிரோடு உயிர் சேர்ந்தது
உன்- பந்தம்
எட்டு ஆண்டுகள் சென்றாலும் - எம்
மனங்களில் நிறைந்திருக்கிறாய்-அண்ணா
காலங்கள் கடந்து போனாலும் இன்னும்
கண்ணீர் மட்டும் ஓயவில்லை- அண்ணா
ஆனாலும் இன்றும் நீ- எம்மோடு வாழ்ந்து
கொண்டே இருக்கின்றாய்
என்றும் நீங்காத சோகம்
எம் நெஞ்சங்களோடு
உன் ஆத்மா சாந்தியடைய
இறைவனை என்றென்றும்
பிரார்த்திக்கிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

மல்லாகம்.

குடும்பத்தினர்.

(58355)(7.4.3)

## ஜி.சீ.ஈ சாதாரண தர பெறுபேறுகள்

*ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சை முடிவுகள் அண்மையில் வெளியாகியிருந்தன. பாடசாலைகளால் எமக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த பரீட்சை முடிவுகள் வருமாறு:-*

**யா/கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்**

ஞா.அபிராம்–5ஏபிசி2எஸ், இ.மகிந்தன்–5ஏபிசி2எஸ், க.மோகனேஸ்வரன்–4ஏ3பிசிஎஸ், ஸ்ரீ.கம்சன்–4ஏபி2சி2எஸ், ச.விதுஷன்–3ஏ4பிசி, இ.மதுரதி–3ஏபி3சி2எஸ், மோ.அபிசாந்–3ஏ2பி2சி2எஸ், ச.சங்கவி–2ஏ்4பி3சி, நிதுஜன்– ஏ3பி3சிஎஸ், கோ.லக்ஷன்–2ஏ2பி2சி2எஸ், கே.ஜீவகன்–2ஏ2பி3எஸ், க.அபிஷன்–ஏ2பி3சி2எஸ், ச.வினோதினி–ஏ2பி3சிஎஸ், ம.டிலக்ஷன்–4பி2சிஎஸ், மு.ரஜிசங்கர்–5சி3எஸ், சி.யனுஸன்–3சி4எஸ்.

**யா/அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலை, அச்சுவேலி**

த.நிலாவண்ணன்–3ஏ4பிசி, தி.கிரு சாந்–3ஏ3பி2சி, க.கோபிநாத்–3ஏ4சிஎஸ், பா.தர்சன்–3ஏ3சிஎஸ், சி.பவதாரணி–ஏ3பி3சிஎஸ், சி.சியானி–ஏ3பி3சி, சி.தேவயானி–ஏ3பி2சிஎஸ், சி.இலக்சனா–ஏ2பி3சி2எஸ், செ.பிறேமிளா–ஏபி4சிஎஸ், சு.கீர்த்தனன்–2பி4சி2எஸ், கு.சாருஜன்–ஏபி3சி2எஸ், யோ.சிவதர்சிகா–பி4சிஎஸ், தா.கலைச் செல்வன்–4சி2எஸ்

**யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்–நீர்வேலி**

க.யானு–6ஏ3பி, இ.பிருந்தா–6ஏ2பிசி, ப.நவன்யா–5ஏ2பிசிஎஸ், ஜெ.சிவவேந்தன்–5ஏ2பிசிஎஸ், ச.நிந்துஜன்–4ஏ2பி2எஸ், ப.வஜீபன்–4ஏ2சி2எஸ், த.குமரேஸ்–4ஏ3சிஎஸ், ஸ்ரீ.லக்சன்–3ஏ2பி2சிஎஸ், த.தனிஸ்வரன்–3ஏ2பி2சிஎஸ், உ.சியா–2ஏ2பி2சி3எஸ், த.லக்சனா–2ஏ2பிசி3எஸ், க.பவிதா–ஏ3பிசி3எஸ், ஸ்ரீ.தனிஸ்ரா–ஏ3பி2சி3எஸ், கு.கரன்–ஏ2பி3சிஎஸ், ஜெ.றிசன்–ஏபிசி5எஸ்,

**கிளி/ஐயனார்புரம் அ.த.க. பாடசாலை**

வ.நிரோனியா – 5ஏ, பி, 2சி, கு.சுகிர்தா – ஏ, 2பி, 2எஸ்., இ.துஷாந்தன் – பி, 3சி, 3எஸ்.

## சா/த பரீட்சையில் அதிசிறப்பு சித்தி

தென்மராட்சி, ஏப். 4

2008ஆம் ஆண்டுதரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் தேசிய நிலையில் முதலிடம் பெற்ற மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாணவன் தர்மலிங்கம் பாசுபதன் வெளியான ஜி.சீ.ஈ சாதாரணதரப் பரீட்சையில் ஒன்பது பாடங்களிலும் அதி சிறப்பு சித்தி (ஏ) பெற்றுள்ளார்.

அதேவேளை இதே கல்லூரியைச் சேர்ந்த தர்மலிங்கம் லக்ஸிகா என்னும் மாணவியும் 9 பாடங்களிலும் அதி சிறப்பு சித்தி (ஏ) பெற்றுள்ளார்.

தென்மராட்சி கல்வி வலயத்தின் கீழ் 2014 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் 11 பேர் 9 பாடங்களிலும் அதி சிறப்புச்சித்திபெற்றுள்ளனர். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் எட்டு மாணவர்களும் மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியில் இரண்டு மாணவர்களும் விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயத்தில் ஒரு மாணவனும் ஒன்பது பாடங்களிலும் அதி சிறப்பு சித்தி பெற்றுள்ளார்கள். (வ-9)

# இன்றும் நாளையும் மின் தடை

யாழ்ப்பாணம், ஏப்.4
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநி யோக மார்க் கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்றும் நாளை யும் கீழ்க் குறிப்பிட்ட பகுதிகளில் இடம்பெற வுள்ளதாக மின்சார இலங்கை மின்சார சபை யின் மின் பொறியியலாளர் அலுவலகம் அறி வித்துள்ளது.

இன்று சனிக்கிழமை காலை 08.30 மணியிலி ருந்து மாலை 05.30 மணிவரை யாழ் பிரதே சத்தில் மாசார், சோரன்பற்று, மாமுனை, செம்பியன்பற்று, மருதங்கேணி, தாழையடி, வத்திராயன், உடுத்துறை, தொடுக்குமாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக் காடு, கேவில், போக் கறுப்பு, முள்ளியான், நாவற்குழி, மறவன்புலோ, தனங்களப்பு, கோவிலாக்கண்டி, கைதடி, நுணாவில், மட்டு வில், வாகையடி, சாவகச்சேரி நகரம், கச்சாய், அரசடி, மீசாலை, அல்லாரை, வெள்ளம்பொக் கட்டி, பாலாவி, வேம்பிராய், மந்துவில், கொடி காமம், வரணி, கெற்பெலி, குடமியன், கரம் பைக் குறிச்சி, தெல்லிப்பழைச் சந்தி, புதுத் தோட்டம், சாவகச்சேரி ஆதார மருத்துவ மனை, சாவகச்சேரி நீதிமன்றக் கட்டடத் தொகுதி, தெல்லிப் பழை புற்றுநோய் மருத்து வமனை, தெல்லிப்பழை மாவட்ட மருத்துவ மனை ஆகிய இடங்களிலும்–

கிளிநொச்சி பிரதேசத்தில் கனகபுரம், அம்பாள் குளம், ஜெயந்திநகர், செல்வாநகர், புதுமுறிப்பு, உருத்திரபுரம், உருத்திரபுரம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், சிவநகர், இரத்தினபுரம், வட்டக்கச்சி, உடைச்சுகண்டி, மாயவனூர், கோவிந்தன்கடைச் சந்தி, இராமநாதபுரம், பன்னங்கண்டி, முல்லைத்தீவு நகரம், விசிரி முல்லைத்தீவு, முல்லைத்தீவு மாவட்டச் செய லகம், உன்னாப் புலவு, வட்டுவாகலின் ஒரு பகுதி, மல்லாவி, துணுக்காய், தெனியங்குளம், வட்டக்கச்சி பாம், கிளிநொச்சி விமானப்படை முகாம் –1, கிளிநொச்சி விமானப்படை முகாம் –2, வற்றாப்பளை கூல்மென் ஐஸ் தொழிற் சாலை ஆகிய இடங்களிலும்–

வவுனியா பிரதேசத்தில் மாமடு விலிருந்து மகாகச்சக்கொடியவரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமல்கம, பிரப் பன்மடு, மகா மயிலங்குளம், குடாகச்சக்கொடிய, துட்டு வாகை, குடாகச்சக்கொடிய கல் உடைக்கும் ஆலை, சி.ஈ.சி கல் உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும்–

நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி யிலிருந்து மாலை 5.30 மணிவரை கிளிநொச் சிப் பிரதேசத்தில் சாந்தபுரம், இரணைமடு, திரு வையாறு, இந்துபுரம், முறி கண்டியின் ஒரு பகுதி, அக்கராயன், அறிவியல்நகர், விடியல் அறிவி யல்நகர், வெள்ளாங்குளம், மல்லாவி, துணுக் காய், தெனி யங்குளம், கிளிநொச்சி நகரம், பரந்தனின் ஒருபகுதி, பூநகரி, உமையாள்புரம், ஓவசியர் கடைச்சந்தி, தாணிகுடியிருப்பு, நீவில், முற்கொம்பன், நல்லூர், தம்பிராய், 4 ஆம் கட்டை, ஆனையிறவு, இரணைமடு விசேட இராணுவ தலைமையகம், யுனிசெஃபா, பொறி யியல் பீடம், விவசாய பீடம், கார்கில்ஸ் பி.எல்.சி, 651 ஆவது படைப்பிரிவு, 652 ஆவது படைப்பிரிவு, நாச்சிக்குடா கடற்படை முகாம், இராணுவ பாசறை, இராணுவ பாசறை –01, இராணுவ பாசறை –02, 2ம் கொமாண்டோ படை முகாம், இயாஸ் மொகமட் ஐஸ் தொழிற் சாலை, மாவட் டச் செயலகம் கிளிநொச்சி, கிளிநொச்சி மக்கள் வங்கி, கிளிநொச்சி நீர்ப் பாசனசபை, பூட்சிற்றி, பரந்தன் இலங் கைத் தொடர்பு நிலையம், சுகந்தன் அரிசி ஆலை, ஆனையிறவு உப்பளம் ஆகிய இடங்களிலும்–

வவுனியா பிரதேசத்தில் ஈரற் பெரிய குளம், கல்குண்டமடு, அழகல்ல, தீவிர கம, மாமடு விலிருந்து மகாகச்சக் கொடிய வரை, பொகவஸ்வேவ, சளலிங்கம, நமல்கம, பிரப்பன்மடு, கவ்லுமு ஆடைத் தொழிற் சாலை, பூ ஓயா, ஈரற் பெரிய குளம் இராணுவமுகாம், மூன்று முறிப் பின் ஒரு பகுதி, கீழ் அளுத்வத்த, வேரகம, குருந்து பிட்டிய, எஸ்.எல்.பி.சி. ஈரப் பெரியகுளம் ஈரப்பெரியகுளம் இரா ணுவ முகாம், ஜோசப் முகாம், கீ.ஈ.சீ. உடைக்கும் ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் வெட்டு இடம்பெறும். (வ)

## கலந்துரையாடல்

கொழும்பு, ஏப்.4
யாழ்ப்பாண வர்த்தக தொழிற்றுறை மன்றத்தின் ஏற்பாட்டில் வட மாகாண நிர்மாணத்துறையினர் மற்றும் கட்டட ஒப்பந் தக்காரர் ஆகியோருக்கான கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிறீன் கிறாஸ் விடுதி யில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் எதிர்கால வேலைத்திட்டங்கள் மற்றும் வட மாகாண அபிவி ருத்தியில் நிர்மாணத்துறையின் பங்களிப்பு போன்ற விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளன. (வ–10)

## வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய் தடுப்பூசி

வரணிப் பிரதேச வளர்ப்பு நாய் களுக் கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி மருந்து இன்று சனிக் கிழமை தொடக்கம் கிராம அலுவலர் பிரிவு ரீதியாக ஏற்றப்பட வுள்ளது. இன்றுவரணி வடக்கு கிராம அலு வலர் பிரிவில் ஒலி பெருக்கி மூலம் அறி விக்கப்படும் நிலை யங்களில் தடுப்பூசி ஏற்றப்படும் என்றும் வளர்ப்பு நாய்களை அருகில் உள்ள நிலை யத்திற்கு கொண்டு வருமாறு சுகாதாரப் பகுதியினர் அறி வித் துள்ளனர். எதிர்வரும் திங்கட்கிழமை தொடக் கம் ஏனைய பிரிவு களில் வளர்ப்பு நாய் களுக்குதடுப்புமருந்து ஏற்றப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள் ளது. (வ–9)


**ஸ்ரீ மதுநிவாஸ் திருமணசேவை மணமகன் தேவை**

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1982 ஆம் ஆண்டு விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு, விவாகரத்து ஆன அல்லது ஆகாத மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
பதிவு இலவசம் : இணுவில்
தொடர்புகளுக்கு: 077 321 8675 (58385) (9.3)

**மணமகள் தேவை**

1980 ஆம் ஆண்டு யாழ் இந்து கௌரவ குடும்பத்தில் 12 இல் செவ்வாய் உள்ள வைத்தியருக்குப் பொருத்தமான மணமகள் தேவை.
தொடர்புகளுக்கு: 077 074 0351 (57059) (9.3)

**மணமகள்கள் தேவை**

* 78 இல் பிறந்த 7இல் சூரியனும் செவ்வாயும் 28½ பாவமுடைய ஜேர்மனி பிரஜா உரிமைபெற்று வந்துள்ள Phd இஞ்சினியர் மணமகனுக்கு பட்ட தாரி மணமகள் தேவை.(சீதனம் எதிர்பார்க்கப்பட மாட் டாது)
* 80 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 9½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமைபெற்ற சைவ போசன மணமகனுக்கு சைவபோசன மணமகள் தேவை.
* 80 இல் பிறந்த 8 இல் சூரியனும் செவ்வாயும் 56 பாவமுடைய சுவிஸ் பிரஜா உரிமைபெற்ற மண மகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 77 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 39 ¾ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமைபெற்ற BBA MBA முடித்த மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 81 இல் பிறந்த 11 இல் சூரியனும் செவ்வாயும் 15 ½ பாவமுடைய லண்டன் பிரஜா உரிமைபெற்ற MBA முடித்த மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.
* 82 இல் பிறந்த செவ்வாய் பாவமில்லாமல் 17 பாவமுடைய கனடா பிரஜா உரிமைபெற்ற மண மகனுக்கு படித்த மணமகள் தேவை. (சீதனம் எதிர் பார்க்கப்படமாட்டாது)

காலக்கண்ணன் திருமணசேவை
இல.62, இராமலிங்கம் வீதி,
நுங்கனிச் சோலையடி, முடமாவடி.
தொ.பே. 077 607 0862

**காணி விற்பனைக்கு**

கச்சேரி நல்லூர் வீதியில் 4 பரப்பு 3.95 குழி காணி விற்பனைக்குண்டு. (58388) (4.3.7)
Tp:- 077 006 1651

**கடை வாடகைக்கு**

சாவகச்சேரி நகரத்தின் மத்தியில், டிறிபேக் கல்லூரிக்கு அருகே, டச்சு வீதியில் அமைந்துள்ள 50அடி நீளமும், 15அடி அகலமும், கொண்ட முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட கடை வாடகைக்கு உண்டு. (நிறுவனங்களுக்கும் உகந்தது) (51943) (9.3)
உடன் தொடர்புகளுக்கு: 077 248 7170

**ஆள்கள் தேவை**

எமது ஐஸ்கிறீம் மற்றும் சிற்றுண்டி விற் பனை நிலையத்திற்கு அனுபவமுள்ள, உணவு பரிமாறுவோர், சிற்றுண்டி தயாரிப் பாளர், பில்கிளாக் ஆகிய வெற்றி டங்கள் உள்ளன. தகுதியானோர் தொடர்பு கொள் ளவும்.
SYLO ICE CREAM
இல.442, ஆஸ்பத்திரி வீதி. யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 771 0785 (58387) (9.3)

**ஷைலோ ஐஸ் கிறீம்**

மிகக் குறுகிய காலத்தில் யாழ். மக்களின் நன்மதிப்பைப் பெற்ற
Sylo Food and Bavareges Pvt Ltd
நிறுவனத்தினராகிய நாம்
பால், தேன், பிஸ்தா, பாதாம், முந்திரி, பேரீட்சை, திராட்சை போன்ற இயற்கையான ஆரோக்கியமான சுவையான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த உயர் தொழில்நுட்ப முறையில் தயாரிக்கப்படும். Sylo Ice Cream தயாரிப்புக்களின் விற்பனை நிலையத்தை யாழ். நகரத்தில் பஸ் நிலையம் முன்புறம் ஆரம்பித்துள்ளோம். என்பதை அனைவருக்கும் அறியத் தருவதோடு அன்புடன் அழைக்கின்றோம்.
ஷைலோ ஐஸ்கிறீம்
இல. 442, வைத்தியசாலை வீதி,
(வாகனத்தரிப்பிடம் எதிரில்) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 221 7885

**மாபெரும் சைக்கிள் ஓட்டப்போட்டி**

யாழ். கிறீன் கிங்ஸ் சனசமூக நிலையம் தன்து பொன்விழாவையொட்டி மாபெரும் 50 Km சைக்கிள் ஓட்டப்போட்டி ஒன்றை நடத்த வுள்ளது. இதில் பங்குகொள்ள விரும்பும் வீரர்கள் கீழே குறிப்பிட்டுள்ள தொலைபேசி இலக்கத்து டன் தொடர்புகொள்ளவும்.
இடம்: மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்,
காலம்: 06.04.2015
தொடர்பு: 077 003 4497, 077 613 9784, 077 978 8746. (58330) (9.3)


**மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்- தேசிய விலைக்கேள்வி அறிவித்தல்**

**பற்றைக்காடுகள், இடிபாடுகள் மற்றும் மண் அணைகளை அகற்றுதலுக்காக கனரக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் - 2015**

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்ட செயலகம், யாழ்ப் பாணம் அவர்களினால் வலி வடக்கு, தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட புதிதாக விடுவிக்கப்பட்ட பகுதிகளில் காணப்படும் பற்றைக்காடுகள், இடிபாடுகள் மற்றும் மண் அணைகளை அகற்றுதலுக்கான பின்வரும் கனரக வாகனங் களை வாடகைக்கு அமர்த்துதலுக்காக குறியீடு செய்யப் பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

01. Dozer 02. Excavator
03. JCB 04. Motor grater

தகைமையுடைய விலைக்கேள்வியாளர்கள் **மாவட்டத்திட்ட மிடல் செயலகம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்** என்னும் முகவரி யில் 06.04.2015 தொடக்கம் 09.04.2015 வரையான நாள்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணிவரை விலைக் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். மேலும் இதனை மாவட்டச் செயலகத்தின் **www.jaffna.dist.gov.lk** என்ற இணையத்தள முகவரியிலிருந்தும் இலவசமாக பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

குறியீடு செய்து பொறியிடப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் இரு பிரதிகளில் **தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கு 10.04.2015 திகதியன்று பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் அனுப்பிவைக்கப் படல் வேண்டும். விலைக்கேள்விகள் யாவும் 10.04.2015 பி.ப 3.00 மணிக்கு திறக்கப்படும்.

விலைக்கேள்வி தொடர்பான நிபந்தனைகள் மற்றும் மேலதிக தகவல்கள் கேள்வி ஆவணங்களில் குறிப்பிடப் பட்டுள்ளது.

**நா.வேதநாயகன்**
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.


**Room நாள் வாடகைக்கு**

600/=, 800/=, 1200/=, 2500/=, 3950/=, A/C,TV
இணைந்த குளியலறையுடன்
Hotel Villa,
422, Galle Road, Wellawatte. (இராமகிருஷ்ண வீதிக்கு அருகில்)
072 255 2222 (சி.15309) (9.3)

**வாடகைக்குண்டு**

யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள இல.68 உடைய புதிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0775823346 (58330) (45.3)

**வீடு வாடகைக்குண்டு**

இல.5, சோமசுந்தரம் அவெனியூ, சுண்டுக்குளியில் உள்ள மாடிவீடு வாடகைக்கு உண்டு. அலுவல கங்கள், அதிகாரிகளின் வாசஸ்தலங்களுக்கு உகந்தது.
தொடர்பு: 077 476 7119 (58366) (45.3)

**தேவை**

யாழ்ப்பாணம், கச்சேரியடிக்கு கிட்ட உள்ள சுற்றுலா விடுதிக்கு சிங்களம் பேசக்கூடிய, 50 வயதுக்கு மேற்பட்ட, தங்கியிருந்து பராமரிக் கக் கூடியவர் உடன்தேவை. குடும்பம் விரும் பத்தக்கது. தங்குமிடம் உண்டு.
தொடர்பு: 075 048 4074,021 222 5471. (58363) (45.3)

**PERSONAL CLASS**

Accounting
By. A.Kalaichelvan
ஆறுமுகம் ஒழுங்கை, கல்வியங்காடு
A/L - 2017 புதிய பிரிவு
A/L - 2016 வரையறுக்கப்பட்ட அனுமதி உண்டு.
குறிப்பு: பெற்றோர் ஊடாக மட்டும் தொடர்பு கொள்ளவும். 077 694 4543 (58354)(45.3)

**வீடு வாடகைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி, விதானையார் வீதியில், சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு. அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு - 077 614 6434

**ஆங்கில வகுப்புகள்**

ஆங்கில வகுப்புகள் அடிப்படையிலிருந்து சொல்லிக்கொடுக்கப்படும்.
மேலதிக விவரங்களுக்கு:
076 627 1771/ 021 321 9181
"why fear, we are here?"

**கொழும்புத்துறையில் வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை, சுவாமி யார் வீதியில் 2 பரப்பு 11 ¼ குழியுடன் கூடிய சகலவசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
(55066) (12.3.7) தொடர்பு: 077 614 6434

**கார் விற்பனைக்கு**

KG - XXXX இலக்கமுடைய Suzuki Wagon R கார் உரிமையாளர் வெளிநாடு போக இருப்பதால் உடனடியாக விற்பனைக்கு உண்டு.
T.P: 077 443 8624 (51944) (9.3)

**Majestic Cineplex Jaffna**
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021-2227712
www.facebook.com/CeylonTheatres www.ceylontheatres.com

## மரண அறிவித்தல்

### தவச்செல்வம் சதீஸ்குமார்



யாழ்.சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட தவச்செல்வம் சதீஸ்குமார் 31.03.2015 செவ்வாய்க் கிழமை லண்டனில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம்- சின்னத்தங்கம் தம்பதியரின் பாசமிகு பேரனும், தவச்செல்வம், விஜயமாலா தம்பதியரின் அன்பு மகனும், பாலசுப்பிரமணியம், சாந்தகுமாரி தம்பதியரின் பாசமிகு பெறாமகனும், இளவரசி, ஸ்கந்தராஜா, கணேஷானந்தன், கோபாலகிருஷ்ணன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செவ்வேள் கிருஷ்ணரங்கா, யாழினி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2015) ஞாயிற்றுக் கிழமை லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சுழிபுரம் — பாலசுப்பிரமணியம் (பாலையா மாஸ்டர்)
077 759 2666 (58460)(4.3.7)

## மரண அறிவித்தல்கள்

### பொன்னுத்துரை - இரகுநாதன்

(Retd.Draughtman Forest Dept.Col )



பிறப்பு 11.07.1947 — இறப்பு 01.04.2015

உடுவில் கிழக்கு கற்பகப் பிள்ளையாரடியைப் பிறப்பிடமாகவும், இணுவில் சிவன்கோயிலடியை வசிப்பிடமாகவும், 18/4, 1/1 யூனியன் கார்டின் தெகிவளையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இரகுநாதன் 01/04/2015 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை - இராசம்மா தம்பதியரின் ஏகபுத்திரனும், காலஞ்சென்ற சரவணமுத்து - கமலாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், சறோஜினியின் அன்புக் கணவரும், தாருகா ஜினி(லண்டன்), பிரகலாதன், லம்போதரா ஆகியோரின் அன்புத் தந்தையும், பிரதீப் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரின் சிவன் கோயிலடி, இணுவில் கிழக்கு இல்லத்தில் 05/04/2015 ஞாயிறு மதியம் 12.00 மணிக்கு இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமாரலிங்கம் வீதி,
இணுவில் கிழக்கு. (58375)(45.3)
தகவல்: குடும்பத்தினர்.
தொ.பே. 077 953 5644

### சபாபதி செல்வரட்ணம்

(முன்னாள் கொள்வனவு அலுவலர் = நீர்வேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் )



கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் கனடா Brampton ஐ வதிவிடமாகவும் கொண்ட சபாபதி செல்வரட்ணம் 30.03.2015 திங்கட் கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதி- கண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ் சென்றவர்களான பரமு- தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், சிவகணேசன் (சிவா), கிசோகுமார் (கிசோ), குமணதாஸன் (குமணன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வரதலட்சுமி (வாணி), சிவசக்தி (சக்தி), வனஜரூபிணி (வனஜா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சுப்பிரமணியம் (ராசா- லண்டன்), நேசமணி (பிரான்ஸ்), யோகமணி (கனடா), புஸ்பராணி, மகாலிங்கம் (பிரான்ஸ்), திலகவதி (பிரான்ஸ்), வசந்தகுமாரி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், திலக்ஸி, கீர்த்திகா, நவீனா, சஜீனா, கேதாரன், சாணுஜா ஆகியோரின் அன்பு அப்பப்பாவுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2015) ஞாயிற்றுக் கிழமை மு.ப 10.00 மணியளவில் Chapel Ridge Funeral Home 8911 Woodbine Ave Markham ON L 3R 5GI Canada வில் நடைபெற்று, Elgin Mills Cemetery 1591 Elgin Mills Rd East Richmond Hill ON L4S 1M9 Canada இல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி புஸ்பராணி சின்னத்துரை (சகோதரி), கோப்பாய் வடக்கு. 077 283 7892
செ.சிவபாக்கியம் (மனைவி) + 190 54875960 +141695300448
(C/1732)(4.3.7)

## மரண அறிவித்தல்



பிறப்பு 14.09.1927 — இறப்பு 31.03.2015

### திருமதி சின்னம்மா மார்க்கண்டு

யாழ். வண்ணார்பண்ணை பெரியதம்பிரான் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் 96/9, பத்திகாளிகோயிலடி வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகவும்,கொழும்பு வெள்ளவத்தையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சின்னம்மா மார்க்கண்டு 31.03.2015 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - தெய்வானை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், மார்க்கண்டு அவர்களின் அன்பு மனைவியும், அருமைத்துரை (கொழும்பு), குகதாசன் (லண்டன்), சண்முகதாசன் (யாழ்ப்பாணம்), புஸ்பரஞ்சனி (பிரான்ஸ்), தவரஞ்சனி (கொழும்பு), தவமணி (யாழ்ப்பாணம்), முருகதாஸ் (சவுதிஅரேபியா) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்றவர்களான தங்கமுத்து, கந்தையா, கனகலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிவகங்கை, செல்வரஞ்சனி, செல்வதேவி, சிவாநந்தமூர்த்தி, பஞ்சாட்சரசிவம், வீரகத்திப்பிள்ளை, கயல்விழி ஆகியோரின் பாசமிகு மாமியும், சுபாகரன், தாரணி, அஸ்வந், அஸ்வினி, நிஷாந்தன், நிவேஜன், நிகிந்தா, நிஷானுகா, சிவந்தினி, யோகராஜ், பவதாரணி, பவகௌரி, கஜநிதன், கஜபவன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அருண்முகேஷ், கிருத்திகேஷ், கரிபூரணி, லக்ஷனா, அவிஸ்னா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.04.2015) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் முற்பகல் 10 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வீட்டு முகவரி:*
96/9, பத்திரகாளி கோயிலடி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் (58391) (45.3)

தகவல்:
குடும்பத்தினர்.
077 057 3684

## மரண அறிவித்தல்

### சிவப்பிரகாசம் இரத்தினசிங்கம்

(இளைப்பாறிய குடிசன மதிப்பீட்டு ஆணையாளர்)



பிறப்பு 03.04.1933 — இறப்பு 30.03.2015

யாழ். கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட சிவப்பிரகாசம் இரத்தினசிங்கம் 30.03.2015 திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம்- சொர்ணம்மா தம்பதியரின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்றவர்களான பூபாலசிங்கம்- இரத்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், விக்கினேஸ்வரியின் (தேவி) அன்புக் கணவரும், விமலினி, சர்வானந்தன், நித்தியானந்தன், பிரமானந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்தமூர்த்தி (கனடா), காலஞ்சென்றவர்களான செல்வநாயகம், திருநாவுக்கரசு, அருளம்மா, நடராசா, சிவசுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுதர்சன், சோபனா, கார்த்தியாயினி, ஞானரூபா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்றவர்களான விக்கினேஸ்வரன், ராசபூபதி மற்றும் சிவசுப்ரமணியம், ஜெகதீஸ்வரி, விமலேஸ்வரி, ராஜேந்திரா, சிவநேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், டயானந், டனுஷ், நவீன், பிரவீன், நிலானி, புவிஷா, அபினா, ரிஷிகேஷ், கிஷான் ஆகி யோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 08.04.2015 புதன்கிழமை பி.ப. 3.00 மணிக்கு லண்டனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
விக்கினேஸ்வரி (மனைவி)- பிரித்தானியா
தொலைபேசி: +442085497052
விமலினி- பிரித்தானியா
செல்லிடப்பேசி: +447507599948
சர்வா- பிரித்தானியா
செல்லிடப்பேசி: +447885792015
நித்தி- பிரித்தானியா
தொலைபேசி: +442089425227
பிரபா- பிரித்தானியா
செல்லிடப்பேசி: +447449069947
ஆனந்தமூர்த்தி- கனடா
தொலைபேசி: +19052769682 (58377)(4.3.7)

தகவல்:
குடும்பத்தினர்.

### கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ் முகாமையாளர் சம்மேளனம், இலங்கை பொறியியலாளர் சங்கம்–வடபிராந்தியம் ஆகியன இணைந்து 'இலங்கையின் குடிவரவியல் போக்கு' என்னும் கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளன.

இந்தக் கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யூரோவில் மாநாட்டு மண்டபத்தில்நடைபெறவுள்ளது. நிகழ்வில் மருத்துவ கலாநிதி முரளி வல்லிபுரநாதன் வளவாளராகக் கலந்து கொள்ளவுள்ளார். (வ–10)

### மணவாளக்கோல திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.4

யாழ்.வண். வடகிழக்கு கலட்டி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய மணவாளக்கோலத் திருவிழா நாளைஞாயிற்றுக்கிழமைகாலை 7.30 மணிக்கு நடைபெறும். பின்னர் 1008 சங்காபிஷேகமும் விசேட பூசையும் மாலை 6.30 மணிக்கு மூல மூர்த்தி பூஜையும் 7 மணிக்கு திரு வூஞ்சலும் நடைபெற்று விநாயகப் பெருமான் உள்வீதி, வெளிவீதி வலம் வருவார். (வ)

### உயிர்ப்பு ஞாயிறு தினத்தன்று கிரிக்கெட் போட்டிகள்

கொழும்புத்துறை, ஏப். 4

உயிர்ப்பு ஞாயிறு தினமாகிய நாளை கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலய வளாகத்தில் விளையாட்டுப் போட்டிகள், இளைஞர்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டிகள் நடை பெறவுள்ளன.

காலை 9.30 மணிக்கு மரதன் ஓட்டப்போட்டி மற்றும் உள்ளக விளையாட்டுப் போட்டிகளும் பி.ப. 2 மணிக்கு இளைஞர்களுக்கிடையிலான மென்பந்து கிரிக்கெட் போட்டியும் நடைபெறவுள்ளது. போட்டிகளை பங்குத்தந்தை அருட் திரு அன்ரன் மத்தாயஸ் அடிகள்ஆரம்பித்துவைப்பார். ஈஸ்ரர் தினத்தையொட்டி 1963 ஆம்ஆண்டு ஆரம்பிக் கப்பட்ட இளைஞர்களுக்கிடையிலான கிரிக்கெட் போட்டி 52 ஆவது வருடமாக தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (வ–135)

### திருமுறை முற்றோதல்

யாழ்ப்பாணம், ஏப்.4

பண்ணாகம் ஒற்றைக்கால் ஞானவைரவர் ஆலயத்தில் பன்னிரு திருமுறை, கந்த புராணம், திருப்புகழ் முற்றோதல் பெருவிழா கடந்த 22 ஆம் திகதி ஆரம்பமாகி தினமும் 9 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெற்று வருகின்றது. நாளைஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைய வுள்ளது. (வ)

### அலங்காரத்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப் 4

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்றுசனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி பிற்பகல் 4 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் 5 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (வ)




## கார்களின் வேகத்தை கட்டுப்படுத்தும் புதிய தொழில்நுட்பம்

வீதியிலுள்ள வேக வரையறைகளை உணர்ந்து சுயமாகவே கார்களின் வேகத்தை குறைக்கும் தொழில்நுட்பம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.


Intelligent SpeedLimiter இத்தொழில்நுட்பத்தினை Ford கார் நிறுவனம் முதன் முறையாக அறிமுகம் செய்துள்ளது.

இது காரின் திசைமாற்றி மற்றும் வேகமுடுக்கி என்பவற்றைக் கட்டுப்படுத்தும் ஆற்றலைக் கொண்டுள்ளது.

எனினும் இத்தொழில்நுட்பமானது சடுதியாக செயற்படுவதனால் சாரதிகளுக்கு சில பாதகங்களை ஏற்படுத்தும் என நியூட்டன் எனும் நிபுணர் எச்சரித்துள்ளார்.

## இதய நோய்களைக் காட்டிக் கொடுக்கும் டுவிட்டர்

பிரபல சமூக வலைத்தளமான டுவிட்டரின் உதவியுடன் இருதயம் தொடர்பான நோய்கள் உடையவர்களைக் கண்டறிய முடியும் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.



பென்சில்வேனியா பல்கலைக்கழகம், அமெரிக்காவிலுள்ள Northwestern பல்கலைக்கழகம், மற்றும் Melbourne பல்கலைக்கழகம் என்பனவற்றின் ஆய்விலே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அதாவது டுவிட்டர் தளத்தில் பகிரப்படும் தகவல்கள், படங்கள் என்பவற்றைக் கொண்டு ஒவ்வொருவரினதும் மனநிலைகள், மன அழுத்தங்கள் போன்றவற்றை அறிவதன் ஊடாக இத்தகவலைப் பெற்றுக் கொள்ள முடியும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த ஆய்விற்காக சுமார் ஒரு வருட காலப்பகுதியில் 148 மில்லியன் வரையான டுவிட்களை அவதானித்து வந்துள்ளனர்.

## அநாவசியமான சொற்களை தவிர்க்கும் புதிய மென்பொருள்

Edbooks எனப்படும் இலத்திரனியல் புத்தகங்களை வாசிப்பதற்கு பல்வேறு application காணப்படுகின்றன. எனினும் குறித்த இலத்திரனியல் புத்தகங்களில் காணப்படும் அநாவசியமான சொற்களை தவிர்ப்பதற்கான வழிமுறைகள் அந்த Applicationகளில் காணப்படுவதில்லை. ஆனால் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள க்ளீன் ரீடர் எனும் மென்பொருளில் இந்த வசதி தரப்பட்டுள்ளது.

தமது மகளின் வேண்டுகோளுக்கு இணங்க Jare- மற்றும் Kirsten Maughan தம்பதிகளின் கூட்டு முயற்சியால் இந்த அப்பிளிக்கேஷன் உருவாக்கப்பட்டுள்ளது.

ஐ ஓ எஸ்.மற்றும் அன்ரோயிட்- சாதனங்களில் இந்த மென்பொருளைப் பயன்படுத்த முடியும்.

உதாரணமாக கோப்பு ஒன்றினை வாசிப்பதற்கு ஐ ரியூன் தளத்தில் அக்கோப்பினை பதிவேற்றம் செய்த பின்னர் குறித்த Application னில் திறக்க முடியும்.

இதில் அநாவசியமான சொற்களை தவிர்ப்பதற்கு 3 வடிகட்டும் முறைகள் காணப்படுகின்றன.

இதில் சில அநாகரிகமான சொற்களை அவற்றிற்கு நிகரான நாகரிகமான சொற்களாகவும் மாற்றித்தரும் வசதியும் காணப்படுகின்றது.

மகாகவி பாரதி: வீழ்வோம் என நினைத்தாயோ..... சித்திரையில் ஆரம்பம்




/அணிக்கு 5 பேர். பதிலாளிகள் இருவர் மட்டும். / காலணி உட்பட சீரான உடை கட்டாயம்./
/ அனுமதிக் கட்டணம் 250/= / அணிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப மாவட்ட மட்டத்தில் ஆட்டங்கள்./

30 அகவையில் உதயன்

விண்ணப்பங்களையும் போட்டி விதிகளையும் உதயன் பத்திரிகையின் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.



இத்தாலியின் தெற்குப் பகுதியில் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தை முன்னிட்டு இடம்பெற்ற புனித ஊர்வலத்தின் காட்சி இது.

# யேமனிலிருந்து இந்தியர்கள் மீட்பு துரிதம்



டில்லி,ஏப்.4

யேமனிலிருந்து ஏற்கனவே 350 இந்தியர்கள் நாடு திரும்பியுள்ள நிலையில், அடுத்த கட்டமாக கடற்படையின் கப்பல் மூலம் மேலும் 400 பேரை மீட்பதற்கான முயற்சிகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யேமனின் தென்மேற்குப் பகுதியிலுள்ள அல் ஹொடெய்டா துறைமுகத்தைக் கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் கிளர்ச்சியாளர்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர். அந்தத் துறைமுக நகரில் தற்போதுள்ள 400 இந்தியர்களையும் பாதுகாப்பாக மீட்டு அழைத்து வர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மீட்கப்படும் 400 இந்தியர்களும் ஐ.என். எஸ். சுமித்ரா கடற்படைக் கப்பல் மூலம் ட்ஜிபவ்ட்டி நகருக்கு கொண்டு செல்லப்படவுள்ளனர்.

அதற்காக யேமன் கடற்பகுதியில் தற்போது நிலை நிறுத்தப்பட்டிருக்கும் சுமித்ரா கப்பல், துறைமுக அதிகாரிகளின் அனுமதிக்காகக் காத்திருக்கிறது.

அந்த நாட்டில் தங்கியுள்ள இந்தியர்கள் வெளியேற விரும்பினால் உடனடியாக அல் ஹொடெய்டா துறைமுகத்துக்கு விரைந்து செல்லுமாறு யேமனிலுள்ள இந்தியத் தூதரகம் அறிவுறுத்தியுள்ளது. அங்கிருந்து வெளியேற விரும்பும் அனைவரும் 12 மணி நேரத்தில் பாதுகாப்பாக ட்ஜிபவ்ட்டி நகருக்கு கொண்டு செல்லப்படுவார்கள் என்றும், பின்னர் 2 இந்திய விமானப்படை விமானங்கள் மூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் எனவும் தூதரகம் தெரிவித்துள்ளது.

இதுவரை மத்திய அரசு மேற்கொண்ட தீவிர முயற்சிகள் காரணமாக அந்த நாட்டில் சிக்கியுள்ள 4000 இந்தியர்களில் 750 பேர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (14)

## வளைகுடா நாடுகளில் மணல் புயல்

சவூதி அரேபியா,கட்டார், அமீரகம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் கடும் புழுதிக் காற்று வீசி வருவதால் பல்வேறு நகரங்களில் மணல் சூழ்ந்து பனி மூட்டம் போன்று வெளிச்சம் குறைவாகக் காணப் படுகிறது. அதனால் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

மேலும் மக்களின் அன்றாட வேலைகள் பாதிக்கப்பட்டதோடு கட்டடப் பணிகள், வீதித் திருத்தப் பணிகள் உள்ளிட்டவைகளைத் தொடர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. புழுதிக் காற்றால் எதிரே வரும் வாகனங்கள் பார்வைக்கு தெளிவாகத் தெரியாததால் வாகனச் சாரதிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் வாகனங்களை ஓட்டுமாறு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது. ஏராளமான விமானங்கள் புறப்படுவதிலும், தரை இறங்குவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளன. (14)

## உலகில் அதிக வயதானவர் யார்?

தாஷ்கண்ட், ஏப்.4

பிரான்ஸ் நாட்டில் பிறந்து 122 வயதில் இறந்த ஜீயன்னே கால்மெண்ட் என்பவர் உலகின் மிக வயதான பெண்மணியாக கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றுள்ள நிலையில், தங்கள் நாட்டை சேர்ந்தவர் தான் உண்மையில் மிக வயதான பெண்மணி என்று உஸ்பெகிஸ்தான் உரிமை கொண்டாடியுள்ளது.

அந்த நாட்டில் கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி உயிரிழந்த டுட்டி யுசுபோவா, 1880 ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிறந்தவர் என்றும், உயிரிழந்தபோது அவருக்கு வயது 135 எனவும், யுசுபோவாவின் நண்பர்கள் தெரிவித்துள்ளனர். தங்களிடம் உள்ள ஆதாரங்கள் மூலம் அதை நிரூபிக்க முடியும் எனக் கூறியுள்ள அவர்கள், யுசுபோவாவின் கடவுச்சீட்டின் நகலை வெளியிட்டுள்ளனர். அதில் அவர் 1880 ஆம் ஆண்டு பிறந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. கின்னஸ் சாதனைப் புத்தகம் யுசுபோவாவை உலகின் மிக வயதான பெண்மணியாக பதிவு செய்து கொள்ளவேண்டும் என அவரது நண்பர்கள் கோரிக்கை வைத்துள்ளனர். ஏற்கனவே உலகின் மிக வயதான பெண்மணியான அறிவிக்கப்பட்ட கால்மெண்ட் கடந்த 1997 ஆம் ஆண்டு உயிரிழந்தார். (14)

## உயிர் பிரியும் தருணத்தில் மோடிக்கு கடிதம்

டில்லி,ஏப்.4

புற்றுநோயால் பாதிப்புற்று தனது உயிர் பிரியும் தருணத்தில் இருந்த பெண்ணொருவர் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தனது கோரிக்கைகளை முன்வைத்து உருக்கமான கடிதமொன்றை எழுதியுள்ளார்.

சுனிதா தோமர் என்ற அந்தப் பெண்ணின் வாழ்வின் கடைசித் தருணத்தில் எழுதப்பட்ட அந்தக் கடிதம் இணையத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

இந்திய தேசத்தின் வளர்ச்சிக்காக நீங்கள் எடுத்துவரும் நடவடிக்கைகளை நான் வரவேற்கின்றேன். சுனிதா தோமர், என்ற நான் ஒரு புற்றுநோயாளி. இரண்டு வருடங்களுக்கு முன்னர் எனக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. அப்போது எனக்கு வயது 26. அந்த அறுவைச் சிகிச்சை எனது உயிரைக் காப்பாற்றினாலும், எனது வாழ்வு உருக்குலைந்துவிட்டது. அறுவைச் சிகிச்சைக்குப் பின்னர் எனது முகத்தோற்றம் முற்றிலும் மாறிவிட்டது. என்னைச் சந்திக்கவோ, என்னிடம் சகஜமாகப் பேசவோ பலரும் தயங்கினர். புகையிலை பயன்பாட்டின் மிகக் கொடூரமான விளைவை நான் சந்தித்திருக்கின்றேன். உடல்,உள, பொருளாதார, சமூக ரீதியாக நான் பல்வேறு துன்பங்களைச் சந்தித்து வருகிறேன். வாழ்க்கையை வேதனையுடன் நகர்த்துகிறேன். புகையிலை மிக எளிதாகக் கிடைக்கிறது. இளம் பிள்ளைகள் புகையிலை பயன்படுத்துவதை பார்க்கும்போது நான் மிகவும் வேதனைப்படுகிறேன். யாராவது புகையிலை பயன்படுத்துவதைப் பார்த்தால் எனக்குப் பயமாக இருக்கிறது. எனவே புகையிலை விற்பனையை தடை செய்ய வேண்டியது அவசியம். ஆனால், அதற்கு முன்னதாக புகையிலை விற்பனையை ஒழுங்கு செய்யும் சட்டம் இருந்தும் அது சரிவர நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பது இன்னும் வேதனையளிக்கும் செயல். பெரிய அளவிலான புகைப்பட எச்சரிக்கையை அச்சிடுவது புகையிலை பயன்படுத்தும் படிப்பறிவற்றவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும். இந்தியப் பிரதமர்களில் நீங்கள் ஒருவரே உங்கள் எண்ணங்கள் மக்களைச் சென்றடைவதை உறுதி செய்வது மட்டுமல்லாமல், மக்கள் கருத்துகளுக்கு மதிப்பு அளிக்கிறீர்கள். அதன் காரணமாகவே, நான் உங்களுக்கு இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன். மேலும், புகையிலைப் பொருள்களின் பைக்கற்றுக்கள் மீது புற்றுநோய் அபாயம் குறித்து எச்சரிக்கையைப் பெரியளவிலான படங்களாக அச்சிடும் சட்டப்பிரிவுக்கு நீங்கள் ஒப்புதல் வழங்குவீர்கள் என நான் எதிர்ப்பார்க்கிறேன். இந்தத் தேசத்தை புகையிலை அற்ற தேசமாக மாற்றுவீர்கள் என நம்புகிறேன்.

இவ்வாறு அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார். (14)

## ஆபத்தான பாதையில் பயணிக்கும் மாணவர்கள்

ஜகார்த்தா, ஏப்.4

கல்வி கற்பதே சவாலான விடயம் என இன்றைய மாணவர்கள் சிந்திக்கும் நிலையில், இந்தோனேசியாவில் பாடசாலைக்குச் செல்லும் பாதையே சவாலாக இருப்பது தற்போது வெளியுலகுக்குத் தெரிய வந்துள்ளது.

அந்த நாட்டிலுள்ள ஜாவா காடுகளில் 100 அடி நீளத்தில் தொங்கு பாலமொன்றுள்ளது. அந்தப் பாலத்தைக் கடந்து தான் அந்தப்பகுதியில் உள்ள மாணவர்கள் தங்கள் பாடசாலைக்குச் செல்லவேண்டும். தினமும் இரு வேளைகளில் தங்கள் உயிரைப் பணயம் வைத்தே அந்த மாணவர்கள் பாலத்தைக் கடந்து சென்று கல்வி கற்று வருகின்றனர். அந்தப் பாலம் தொங்கு பாலமாக இருப்பதால் ஆபத்து அதிகமாக இருந்தாலும் துணிச்சலுடன் பயணிக்கும் மாணவர்கள் பாலத்தைக்கடந்து சென்று தினமும் கல்வி பயின்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (14)

## பனிச்சரிவால் மூவர் உயிரிழப்பு



பாரிஸ்,ஏப்.4

பிரான்ஸின் அல்ப்ஸ் மலையில் ஏற்பட்ட திடீர்ப் பனிச்சரிவில் சிக்கிய 3 வெளிநாட்டவர்கள் பரிதாபமாக உயிரிழந்துள்ளதுடன் 7 பேர் காணாமல் போயுள்ளனர்.

பிரான்ஸின் பெல்வோக்ஸ் பகுதியில் உள்ள ஹாவுட்ஸ் பனி மலையில், ஆஸ்திரேலியா மற்றும் இத்தாலி நாடுகளைச் சேர்ந்த 11 பேர் நேற்று முன்தினம் பனிச்சறுக்கல் விளையாட்டுக்காகச் சென்றிருந்தனர்.

அந்த மலைப்பகுதியில் அவர்கள் பனிச்சறுக்கில் ஈடுபட்டிருந்த போது திடீரென பனிச்சரிவு ஏற்பட்டுள்ளது. சுமார் 10 ஆயிரத்து 500 அடி உயரத்திலிருந்து ஏற்பட்ட பனிச்சரிவு அந்தப் 11 பேரையும் இழுத்துச் சென்று பனிக்குள் மூழ்கடித்தது.

அதன் போது சம்பவ இடத்திலேயே இத்தாலியர் ஒருவர் உட்பட இரண்டு ஆஸ்திரேலியர்கள் உயிரிழந்துள்ளனர். அதனையடுத்து உயிரிழந்த 3 பேரின் உடல்களையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

ஏனைய 8 பேரில் ஒருவர் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளதுடன், மேலும் 7 பேர் காணாமல் போயுள்ளதாகவும் தற்போது மீட்புப் பணிகள் துரிதப்படுத் தப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (14)

# விமானத்தின் இரண்டாவது கறுப்பு பெட்டியும் மீட்பு

### விபத்தின் இறுதி நேர தகவல்கள் வெளிவரும்



மார்செய்ல், ஏப்.4

பிரான்ஸின் அல்ப்ஸ் மலைத் தொடரில் விபத்துக்குள்ளான பயணிகள் விமானத்தின் இரண்டாவது கறுப்புப் பெட்டி 9 நாள்கள் தேடுதலின் பின்னர் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

ஜேர்மன்விங்ஸ் விமான நிறுவனத்தின் விமானமொன்று கடந்த மாதம் 24 ஆம் திகதி ஜேர்மன் நாட்டுக்குப் புறப்பட்ட போது பிரான்ஸின் அல்ப்ஸ் மலைத்தொடரில் விழுந்து விபத்துக்குள்ளானது. கடந்த 40 வருடங்களில் நடந்த மிக மோசமான விமான விபத்தாக அது அமைந்தது. விபத்து நடந்த பகுதியைச் சென்றடைவது மிகவும் கடினம் எனத் தெரிவிக்கப்பட்ட நிலையில் பிரான்ஸ் பொலிஸார் விபத்து நடந்த அன்றைய தினமே விமானத்தின் முதலாவது கறுப்புப் பெட்டியை மீட்டனர். இந்த நிலையில் 9 நாள்கள் கடந்த நிலையில், விமானத்தின் இரண்டாவது கறுப்புப் பெட்டியையும் பொலிஸார் மீட்டுள்ளனர். அந்தப் பெட்டியில் முக்கிய தொழில்நுட்ப விவரங்கள் பதிவாகியிருக்கும். அதன் மூலமாக விமானம் விபத்துக்குள்ளான கடைசி நிமிடங்களில் என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (14)

# கென்யாவில் பல்கலை மீது தீவிரவாதிகள் தாக்குதல்

## 147 மாணவர்கள் சாவு

நைரோபி,ஏப்.4

கென்யாவிலுள்ள பல்கலைக்கழகம் ஒன்றில் நேற்றுமுன்தினம் அதிகாலை திடீரென புகுந்த தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியதில் 147 மாணவர்கள் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டுள்ளனர்.

ஆபிரிக்க நாடான கென்யாவில், சோமாலியா எல்லையில் உள்ள காரிசா பல்கலைக்கழகத்தில் இந்தத் தாக்குதல் சம்பவம் நடைபெற்றுள்ளது.

முகமூடி அணிந்தவாறு பல்கலைக்கழகத்துக்குள் புகுந்த தீவிரவாதிகள் கையெறி குண்டுகளை வீசி பல்கலைக்கழகத்தின் கதவைத் திறந்துள்ளனர். பின்னர் அங்கு தங்ககத்தில் உறங்கிக் கொண்டிருந்த மாணவர்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிச் சூடுகளை நடத்தியுள்ளனர். தீவிரவாதிகள் தாக்குதல் நடத்துவதை அறிந்ததும் பல மாணவர்கள் அறைகளைப் பூட்டிக் கொண்டதுடன், பலர் தப்பித்தும் சென்றுள்ளனர்.



அந்தத் தாக்குதல் சம்பவத்தின் போது 70 மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக முதற்கட்டத் தகவல்கள் வெளியாகியிருந்த நிலையில், மேலும், உயிரிழந்தவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. தாக்குதல் சம்பவத்தின் போது 147 மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும், 80 இற்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் மாணவர்களில் பலரது நிலைமை மிகவும் கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 550 மாணவர்களைக் காணவில்லை. அவர்கள் தீவிரவாதிகளிடம் பணயக்கைதிகளாக சிக்கியுள்ளதாகக் கருதப்படுகின்றது. தாக்குதல் குறித்த தகவல்கள் அறிந்ததும் பொலிஸாரும், இராணுவத்தினரும் காரிசா பல்கலைக்கழகத்தைச் சுற்றி வளைத்தனர். அங்கு 12 மணி நேரமாக பதுங்கி இருந்த தீவிரவாதிகள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தியுள்ளனர். அந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது 4 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

சம்பவத்தின்போது, "பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள மசூதியில் தொழுகை நடந்ததாகவும், அதில் பெரும்பாலான மாணவர்கள் கலந்து கொண்டிருந்ததால், தீவிரவாதிகள் தாக்குதலில் இருந்து அவர்கள் தப்பியுள்ளதாகவும் அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் தாக்குதல் சம்பவத்துக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. அதே வேளை கடந்த 2013 ஆம் ஆண்டு அல் ஷபாப் தீவிரவாத இயக்கம் நைரோபி ஷாப்பிங் மாளிகையில் நடத்திய கொடூரத் தாக்குதல் சம்பவத்தின் போது 67 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையே அந்தப் பல்கலைக்கழகத் தாக்குதல் சம்பவத்தின் முக்கிய குற்றவாளியான முகமேத் முகமதுவை கைது செய்வதற்கு தேவையான தகவல் கொடுப்பவர்களுக்கு 2 லட்சத்து 15 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் பரிசாக வழங்கப்படும் என்று - அந்த நாட்டு இராணுவம் அறிவித்துள்ளது. (14)

# எண்ணெய்க் கிணற்றில் தீ

## மெக்ஸிக்கோவில் பெரும் விபத்து



மெக்ஸிகோ சிட்டி, ஏப்.4

மெக்ஸிக்கோ நகரில் உள்ள எண்ணெய்க் கிணறொன்றில் நேற்று அதிகாலை நடைபெற்ற தீவிபத்தில் 4 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும் 16 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். மெக்ஸிக்கோ நாட்டின் மெக்ஸிக்கோ நகரில் எண்ணெய் கிணறுகள் அதிகளவிலுள்ளன. அங்குள்ள எண்ணெய்க் கிணறொன்றில் எண்ணெய் எடுக்கும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டிருந்த போது அந்த எண்ணெய்க் கிணற்றில் திடீரென தீப்பிடித்துள்ளது.

தகவலறிந்து தீயணைப்புப் படையினர் விரைந்து வந்து மீட்புப் பணியில் ஈடுபட்டனர். அந்தத் தீ விபத்தில் 4 பேர் அதே இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். 300 இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் அந்த இடத்திலிருந்து பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர். அந்த விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடைபெற்று வருகிறது.

மெக்ஸிக்கோவில் எண்ணெய்க் கிணறுகளில் இதுபோன்ற தீ விபத்துகள் அடிக்கடி நடைபெற்று வருகின்றன. எண்ணெய்க் கிணறுகளில் நடக்கும் தீ விபத்துக்களைத் தடுக்க அந்த நாட்டு அரசு தீவிர நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. எண்ணெய் எடுப்பதற்கு தரமான நிறுவனங்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கி வருவதுடன் எண்ணெய் எடுக்கும் போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு குறித்த விதிமுறைகளும் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. (14)

# யேமனின் ஜனாதிபதி மாளிகை கிளர்ச்சியாளர்கள் வசம்

## சிறைக் கைதிகள் 300 பேர் விடுவிப்பு




சனா, ஏப். 4

யேமன் நாட்டில் உள்நாட்டுப் போர் மேலும் தீவிரம் அடைந்துள்ளதுடன், அந்த நாட்டின் ஜனாதிபதியின் மாளிகையையும் கிளர்ச்சியாளர்கள் நேற்றுக் கைப்பற்றியுள்ளனர். அத்துடன் சிறைச்சாலையொன்றையும் தாக்கி அதிலிருந்த 300 கைதிகளையும் அல்குவைதா தீவிரவாதிகள் விடுவித்துள்ளனர்.

யேமனில் உள்நாட்டுப்போர் நாளுக்கு நாள் தீவிரம் அடைந்து வரும் நிலையில் ஜனாதிபதி மாளிகையைக் கைப்பற்றுவதற்காக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தொடர்ச்சியான தாக்குதல்களை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில், ஏடன் நகரில் கடுமையான தாக்குதல்களை நடத்தி, ஜனாதிபதி மாளிகையை கிளர்ச்சியாளர்கள் கைப்பற்றியுள்ளனர். யேமன் பாதுகாப்பு அதிகாரிகள் அதனை உறுதி செய்துள்ளனர். அந்தத் தாக்குதல் சம்பவங்களின் போது 44 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஏடன் நகரில் கிளர்ச்சியாளர்கள் முன்னேறி வந்ததைக் கட்டுப்படுத்துவதற்கு சவுதி கூட்டுப்படைகள் மேற்கொண்ட முயற்சிக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. இதற்கிடையே யேமனின் கடலோர நகரமான அல் முக்கல்லாவில் உள்ள சிறைச்சாலையின் மீது அல்குவைதா தீவிரவாதிகள் திடீர் தாக்குதல்களை நடத்தினர். அந்தச் சிறைச்சாலையில் 4 வருடங்களுக்கு மேலாக சிறைக் கைதிகளாக இருந்த அல்குவைதாவின் மூத்த தலைவர் கலீத் பதார்பி உள்ளிட்ட 300 கைதிகளை கிளர்ச்சியாளர்கள் விடுவித்துள்ளனர். (14)



# கென்யா தாக்குதலுக்கு மோடி கண்டனம்

டில்லி,ஏப்.4

கென்யாவின் பல்கலைக்கழகத்தில் 147 மாணவர்கள் கொல்லப்பட்ட சம்பவத்துக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்துக்குள் திடீரென புகுந்த தீவிரவாதிகள் மாணவர்கள் மீது சரமாரியான துப்பாக்கிப் பிரயோகங்களை மேற்கொண்டனர் அதன் போது நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கொல்லப்பட்டனர்.

அந்தத் தாக்குதல் மிகக்கொடூரமானது. ஒரு பல்கலைக்கழக வளாகம் மீது நடத்தப்பட்ட அந்தத் தாக்குதல் பெரும் வருத்தத்தை அளிக்கிறது. அது முற்றிலும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது எனத் தனது டுவிட்டர் பக்கத்தில் மோடி தனது கருத்தைப் பதிவேற்றியுள்ளார்.

# தற்கொலைப்படைத் தாக்குதல் கிழக்கு ஆப்கனில் 17 பேர் சாவு

காபூல், ஏப்.4

கிழக்கு ஆப்கானிஸ்தானில் ஊழலுக்கு எதிராக நடைபெற்ற போராட்டத்தின்போது தற்கொலைப்படைத் தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவத்தின்போது 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் இராணுவத்துக்கு ஆதரவாக பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பெரும்பாலான வெளிநாட்டுப் படையினர் கடந்த வருடம் விலக்கிக் கொள்ளப்பட்ட பின்னர், அங்கு வன்முறைச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. இந்த நிலையில் பாகிஸ்தானின் எல்லையை ஒட்டிய கோஸ்ட் மாகாணத்தில் நேற்று அந்த நாட்டின் ஊழலுக்கு எதிராகப் போராட்டம் நடைபெற்றது. அதன்போது கூட்டத்துக்குள் புகுந்த தற்கொலைப் படைத் தீவிரவாதியொருவர் தனது உடலில் கட்டியிருந்த வெடிகுண்டை வெடிக்கச் செய்துள்ளார். அந்தத் தாக்குதல் சம்பவத்தின்போது 17 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 50இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (14)

# க்லோகாட் முன்னெடுக்கும் 'வாழ்க்கைக்கான புன்னகை'




சர்வதேச வாய் சுகாதார தினம் வருடாந்தம் மார்ச் மாதம் 20 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. சிறந்த் வாய்ச் சுகாதார பழக்கவழக்கங்களை ஊக்குவிக்கும் வகையில் உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் திட்டமாக இது அமைந்துள்ளது. "இந்த ஆண்டுக்கான தொனிப் பொருளாக 'வாழ்க்கைக்கான புன்னகை' என்பது அறிவிக்கப்பட்டுள்ளதுடன், இதன் மூலம் 'வாழ்நாள் முழுவதுக்குமான புன்னகை' மற்றும் 'வாழ்க்கையை கொண்டாடுவது' என்பது பொருள் படுகிறது.

ஹேமாஸ் மெனுஃபக்சரிங் லிமிடெட் நிறுவனத்தின் முன்னணி பற்பசை வர்த்தக நாமமான க்லோகாட், அண்மையில் நாடு முழுவதும் பற்சிதைவை தடுப்பது தொடர்பில் குடும்பங்கள் மத்தியில் விழிப்புணர்வு செயற்திட்டத்தை முன்னெடுத்திருந்தது. இந்த திட்டத்தின் மூலமாக, பழக்க வழக்க முறையில் மாற்றத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக ஆரோக்கியமான, பற்சிதைவிலிருந்து விடுபட்ட இலங்கையை கட்டியெழுப்புவது நோக்கமாக அமைந்திருந்தது. பற்சிதைவை இல்லாமல் செய்வது தொடர்பிலான தேசிய செயற்திட்டத்துக்கு அமைவாக, க்லோகாட் தற்போது முன்பள்ளி ஆசிரியர்கள் மத்தியில் வாய் சுகாதார பராமரிப்பு விழிப்புணர்வை முன்னெடுத்து வருகிறது. இதன் மூலம் மாணவர்கள் மத்தியில் பற்சிதைவு பற்றி அவர்களின் மூலமாக தெளிவுபடுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கக்கூடியதாக இருக்கும்.

இந்த ஆண்டு உலக வாய்ச்சுகாதார தினத்தை கொண்டாடும் வகையில், க்லோகாட் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் கைகோர்த்து, இலங்கையின் முன்பள்ளி மாணவர்கள் மத்தியில் வாய்ச் சுகாதாரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தது. மார்ச் மாதம் 19ஆம் திகதி, முன்பள்ளி ஆசிரியர்கள் 200 பேர், அத்துருகிரிய பகுதியைச் சேர்ந்த மஹமத்யா வித்தியாலயத்துக்கு வருகை தந்து, அங்கு இடம் பெற்ற 'முன்பள்ளி ஆசிரியர்களுக்கான வாய்ச் சுகாதாரம் தொடர்பான ஊக்குவிப்பு மற்றும் கல்வி' செயற்திட்டத்தில் பங்கேற்றிருந்தனர். சுகாதார அமைச்சின் (பல் சேவைகள்) பிரிவின் பதில் பொது பணிப்பாளர் வைத்தியர் ஜே.எம். டபிள்யூ ஜயசுந்தர பண்டார, மேல் மாகாண சுகாதார சேவைகள் பிரிவின் பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் தீப்தி பெரேரா, கொழும்பு சுகாதார சேவைகள் பதில் பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் பிரகீத் தர்ஷன ஆகியோருடன் சுகாதாரம் மற்றும் கல்வி அமைச்சின் இதர அதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர்.

முன்பள்ளி மாணவர்கள் மத்தியில் வாய்ச் சுகாதாரம் தொடர்பில் கவனம் செலுத்துவது எதிர்கால தலைமுறைக்கு அதிகளவு முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக அமைந்திருக்கும் என க்லோகாட் நம்புகிறது. ஆரோக்கியமான வாய்ச் சுகாதாரத்தைப் பேணுவது தொடர்பில் முன்பள்ளி ஆசிரியர்கள் முக்கிய பங்கை வகிக்கின்றனர். இந்த செயற்திட்டம் தொடர்பில் கொழும்பு பிராந்திய மேலதிக பல் வைத்திய நிபுணர் வைத்தியர் விபுல விக்ரமசிங்க கருத்து தெரிவிக்கையில், 'எமது இலக்கு என்பது, இளம் பிள்ளைகள் மத்தியில் பற்சூத்தை என்பதைக் குறைப்பது என்பதாக அமைந்துள்ளது. அவர்களின் கல்வி செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கும் பற் சூத்தையிலிருந்து விடுபட்ட வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்கவும் இது முக்கியத்துவமாக அமைந்துள்ளது.

சர்வதேச வாய்ச் சுகாதார தின தொனிப் பொருளான 'வாழ்க்கைக்கான புன்னகை' என்பதற்கமைவாக, முன்பள்ளி ஆசிரியர்களுக்கு வாய்ச் சுகாதாரம் தொடர்பான பயிற்சிகளை வழங்க நாம் முன் வந்துள்ளோம். முன்பள்ளி ஆசிரியர்களுக்கு போதியளவு விளக்கங்களை வழங்குவதன் மூலமாக, எமது இளம் தலைமுறையை 'வாழ்க்கைக்கான புன்னகை' உடன் திகழச் செய்ய முடியும்' என்றார்.

ஹேமாஸ் நிறுவனத்தின் நோக்கமான, 'எமது நுகர்வோரின் வாழ்க்கையை வளமூட்டுவது' என்பதற்கமைவாக, இந்நிகழ்வின் வாய்ச் சுகாதார பங்காளராக க்லோகாட் ஒன்றிணைந்திருந்தது.



# புலம்பெயர் நாடுகளில் சைவ நாகரிகம்

மு.ரகுபாலன்
(இயற்கை.ஆர்வலர்)

இலங்கைத் தமிழர்கள் நாட்டின் இனப் பிரச்சினை காரணமாக கடந்த கால் நூற்றாண்டு காலமாக புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சைவ நாகரிகத்தைப் பின்பற்றும் மக்களே அதிகளவில் உள்ளனர். ஆனால் இவர்கள் திட்டமிடப்பட்ட வகையில் மதம் மாற்றப்பட்டு வருகின்றனர். புலம்பெயர்ந்து வெவ்வேறு நாடுகளில் வசிக்கின்ற இலங்கைத் தமிழ் மக்கள் தமது சமய, பண்பாட்டுக் கலாசாரங்களால் ஆன அடையாளங்களைத் தற்போது இழந்து வருகின்றனர்.

மனித உரிமைகள், மத சுதந்திரம் என்று கூறிக்கொள்ளும் ஐரோப்பிய சமூகம் சிறுபான்மையினரான சைவ நாகரிகத்தைப் பின்பற்றும் மக்களை எவ்வாறு நடத்துகின்றது என்பதை இந்த உலகம் ஒரு கணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். இந்த மக்களை மதம் மாற்றுவது மிகவும் கீழ்த்தரமானதொரு செயலாகும். இந்தப் பூமியில் பிறந்த அனைத்து மனிதர்களுக்கும் தாம் விரும்பிய சமயத்தை சுதந்திரமாகப் பின்பற்றக் கூடிய உரிமை உள்ளது. இதுவே மனித உரிமையும் ஆகும். புலம்பெயர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக திட்டமிடப்பட்ட வகையில் மதமாற்றம் செய்து கலாசார, பண்பாட்டுப் படுகொலையை அரங்கேற்றுவதை எந்த வகையிலும் நியாயமானதாகக் கருத முடியாது.

தமிழ் அரசியல் தலைமைகள் இது தொடர்பாகச் சிந்திப்பதாகத் தெரியவில்லை. அவர்களின் அக்கறையின்மை மனக் கவலையையும் ஏற்படுத்தி வருகின்றது. லண்டனில் வசிக்கும் சைவ நாகரிகத்தைப் பின்பற்றும் மாணவர்கள் கிறிஸ்தவ சமய பாடத்தைக் கற்றுப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். மத சுதந்திரம்; மனித உரிமை ஆகியன தொடர்பாக பிதற்றும் பிரித்தானிய அரசு இந்த விடயத்தில் அக்கறை எதுவுமின்றி மெத்தனமாகவே செயற்படுகின்றது. மேலும் எமது அடையாளங்களை இல்லாதொழிப்பதற்கு எம்மவர்களே துணை நிற்பதுவும் வேதனை தருகின்றது.

தமிழீழ தாயகத்தில் திட்டமிட்ட வகையில் பௌத்த விகாரைகளை நிறுவும் சிங்கள அரசு போன்று புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் மத அழிப்பு நடவடிக்கைகளில் சிலர் ஈடுபட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

இந்த நிமிடம் வரை புலம்பெயர்ந்த தமிழர்களை மதமாற்றம் செய்யும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இலங்கையை அந்நியர்கள் ஆக்கிரமித்து நின்றபோது மதமாற்றம் நிகழ்ந்தது போன்று இன்று புலம்பெயர் நாடுகளில் இடம்பெற்று வருவதைக் காண முடிகின்றது. இதைத் தடுப்பதற்கு முழு அளவில் நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

# வீவா வெகுமதித் திட்டம்

க்ளெக்சோஸ்மித் கிளைன் நிறுவனத்தின் புகழ் பெற்ற மோல்ட் சேர்க்கப்பட்ட ஆகாரபான வர்த்தக நாமமான வீவா ஆனது, இலங்கையில் நம்பகமான வீட்டுப் பாவனைப் பொருள்கள் மற்றும் இலத்திரனியல் தீர்வுகளை வழங்கிவரும் சிங்கர் நிறுவனத்துடன் இணைந்து பத்தும் வாசி எனும் நுகர்வோர் ஊக்குவிப்புத் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது.

எதிர்வரும் தமிழ் – சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டங்களை முன்னிட்டு தமது வாடிக்கையாளர்களுக்கு தங்கள் வீட்டின் உட்புறத் தோற்றத்தை புதுப்பொலிவாக்கிக் கொள்ளக்கூடிய வகையில் வீவா பத்தும் வாசி திட்டத்தின் ஊடாக பிரபல வர்த்தகக் குறியீட்டினைக் கொண்ட வீட்டுப் பாவனைப் பொருள்களை வெற்றி கொள்வதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஊக்குவிப்புத் திட்டத்தில் நாடு முழுவதும் உள்ள சிங்கர் காட்சியறைகளில் கொள்வனவில் ஈடுபடும் போது 100 இலட்சம் ரூபா பெறுமதியான வீட்டுப் பாவனை பொருள்கள் மற்றும் நாடு முழுவதுமுள்ள சிங்கரிடமிருந்து விலைக் கழிவுகள் போன்றன வழங்கப்படவுள்ளன.

பெறுமதிவாய்ந்த வீட்டுப் பாவனைப் பொருள்கள் மூலம் உங்கள் இல்லத்தைப் புதுப்பித்துக் கொள்வதானது வாழ்வை சௌகரியமாக்குவதுடன், தமிழ் மற்றும் சிங்கள புத்தாண்டினை மகிழ்ச்சியுடன் வரவேற்பதாகவும் அமையும் என GSK நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பணிப்பாளர் ரவீந்திர டி கூங்கே தெரிவித்தார்.

இந்த திட்டத்தின் ஊடாக அனுகூலங்களை பெறவிரும்பும் வாடிக்கையாளர்கள் 400 கிராம் வீவா புத்தாண்டு ஊக்குவிப்பு பக்கட்டினை கொள்வனவு செய்து, அதனுள் காணப்படும் சுரண்டும் அட்டையிலிருந்து தமக்குரிய அன்பளிப்பு மற்றும் கழிவுகள் பற்றித் தெரிந்து கொள்ளலாம். ஒவ்வொரு சுரண்டும் அட்டையிலும் பெறுமதி வாய்ந்த ரைஸ் குக்கர்கள், குளிர்சாதனப்பெட்டிகள் மற்றும் சிங்கரிடமிருந்து விசேட கழிவுகளும் உள்ளடக்கப்பட்டிருக்கலாம் என மேலும் தெரிவித்தார்.

புது வருட காலப்பகுதி என்பது அனைவருக்கும் அதிகளவு வேலைப்பளு நிறைந்த காலமாகும். இந்த பருவகாலத்தில் அதிகளவு இடம்பெறும் உள்நாட்டு சமூக நடவடிக்கைகளில் பங்குபற்ற இலங்கையருக்கு அதிக ஆற்றல் தேவைப்படலாம். வீவா பத்தும் வாசி திட்டமானது சுவையான ஆற்றல் மிக்க ஒரு கோப்பை வீவாவினை வழங்கும் அதேவேளை வாழ்க்கைக்கு சௌகரியத்தை ஏற்படுத்தல் எனும் அதன் உறுதிமொழிக்கு அமைவாக இந்தப் புத்தாண்டை குதூகலத்துடன் கொண்டாடுவதற்கான வசதியை வாடிக்கையாளருக்கு வழங்கியுள்ளது.

புத்தாண்டு காலத்தில் பெரும்பாலான இலங்கையர்கள் மிகவும் வேலைப்பளு உடையவர்களாக இருப்பதனால், பாரம்பரிய வழிகளில் வீட்டுப் பணிகளை சிறப்பாக மேற்கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர் என ஜி.எஸ்.கே நிறுவனத்தின் ஊட்டச்சத்துப் பிரிவின் முகாமையாளர் தர்ஷன ஜயசிங்க தெரிவித்தார்.

மோல்ட் செறிவு, பாலின் நலச்செழுமை மற்றும் போஷாக்குகளை கொண்டுள்ள வீவா மோல்டட் ஆகாரபானம் என்பது உணவிலிருந்து அவசியமான சக்தியைப் பெற உதவுகிறது. (த)

# வாசகர் திருமுகம்



## எமக்கும் வழங்கப்பட வேண்டும்

அரச ஊழியர்களுக்கு பண்டிகை முற்பணமாக 10ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளதாக அறிகின்றேன். தற்போதைய வாழ்க்கைச் செலவுகளைப் பார்க்கும் போது பண்டிகையைக் கொண்டாட வேண்டுமானால் இந்தத் தொகை கூடப் போதாது என்றுதான் கூற வேண்டும். ஆனால் அரசு இதையாவது வழங்குவது பாராட்டுக்குரியது.

நான் ஒரு தனியார் நிறுவனத்தில் பணி புரிகின்றேன். இடைக்கால வரவு- செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வேதன உயர்வு எமக்கு இதுவரை வழங்கப்படவில்லை. வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. இதேவேளை புதுவருடம் பிறக்கப் போவதால் அதனைக் கொண்டாடுவதற்கு அதிக பணம் தேவைப்படும். உடுபுடைவைகளின் விலை கள் எக்கச்சக்கமாக அதிகரித்துள்ளன.

இந்த நிலையில் தனியார்துறை ஊழியர்களுக்கும் அரச ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போன்று 10 ஆயிரம் ரூபாவை பண்டிகை முற்பணமாக வழங்கினால் பெரிதும் உபயோகமானதாக இருக்கும். எம்மைப் போன்ற வறிய நிலையில் உள்ளவர்களும் பண்டிகையைக் கொண்டாட வேண்டுமானால் இது போன்ற உதவிகள் வழங்கப்படுவது அவசியமானதாகும்.

அத்துடன் எமக்கும் ஓரளவு சம்பள உயர்வை வழங்கினால் எமது குடும்பங்கள் வறுமை நிலையிலிருந்து விடுபட முடியும். லட்சக்கணக்கானவர்களுக்கு தொழில்வாய்ப்பைவழங்கும்தனியார் துறையினர், இந்த ஏழைகள் மீதும் கருணை கொண்டு உதவ வேண்டுமெனத் தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

*பொ.இராமச்சந்திரன்,*
*ஆனைக்கோட்டை.*

## உள்ளக வீதிகளைக் கவனிப்பார்களா?

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் கீழ்வரும் உள்ளக வீதிகள் பலவும் புனரமைக்கப்படாத நிலையில் காணப்படுவதால் மக்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இது தொடர்பாக ஏற்கெனவே சுட்டிக்காட்டப்பட்ட போதிலும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பிரசித்தி பெற்ற சுன்னாகம் ஐயனார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் தற்போது இடம்பெற்று வருகின்றது.ஆனால் கே.கே.எஸ். வீதியிலிருந்து இந்த ஆலயத்துக்குச் செல்லும் சகல உள்ளக வீதிகளும் சேதமடைந்த நிலையிலேயே காணப்படுகின்றன. இந்த நிலையில் ஆலயத்துக்கு முன்பாகவுள்ள வீதி மிகவும் சேதமடைந்து காணப்பட்ட நிலையில் செம்மண் கொண்டு தற்காலிகமாகச் செப்பனிடப்பட்டதை அவதானிக்க முடிகின்றது.

இது தற்போதைய நிலையில் மிகப் பெரிய ஆறுதலை அளிக்கின்றது. ஆனால், மழை பெய்யுமாயின் மண் வெள்ள நீரால் அடித்துச் செல்லப்பட்டு விடும். ஆகவே வலி.தெற்குப் பிரதேச சபையினர் உள்ளக வீதிகளின் புனரமைப்பை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென பொதுமக்கள் சார்பில் வேண்டுகோள் விடுக்கின்றேன்.

*மா.சுரேஸ், சுன்னாகம்.*

**கேலிச் சித்திரம்**

**திரிசங்கு நிலையில் சிறிபால**



நன்றி: மவபிம

# தலையிடியும் - காய்ச்சலும் தனக்கு வந்தால்தான் தெரியும்

வடக்கு மாகாண சபையின் அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றம், தற்காலிகமாக இடைநிறுத்தி பிற்போடப்பட்டுள்ளது. இடமாற்றம் பிற்போடப்பட்டமைக்கான காரணங்கள் இதுவரையில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை. ஆனாலும், செயலாளர்களின் மேன்முறையீட்டுக்கு அமையவே அவை பிற்போடப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வடக்கு மாகாணசபை கடந்த 2013 ஆம் ஆண்டு பதவியேற்றது. அதிலிருந்து மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களின் இடமாற்றங்கள் தொடர்பில் பேசப்பட்டு வந்தது. ஆனாலும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. ஏனெனில், இடமாற்றங்கள் ஆளுநரினால் வழங்கப்பட வேண்டிய ஒன்றாக இருந்து வந்தது. முன்னைய ஆளுநர், மாகாண சபை விரும்பிக் கேட்பதற்கு நேர் எதிர்மாறாக விடயங்களை முன்நகர்த்தி வந்தார். இதனால் ஆளுநர் மாற்றமடையும் வரையில், இடமாற்றங்களும் கிடப்பில் போடப்பட்டிருந்தன.

புதிய ஆளுநர் பதவியேற்றிருந்த சூழ்நிலையில் இடமாற்றங்கள் மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. வடக்கு மாகாண அமைச்சரவையே இந்த இடமாற்றங்கள் தொடர்பில் தீர்மானித்திருந்தது. இதற்கமைய நான்கு அமைச்சுக்களினதும் செயலாளர்களை, உள்ளக ரீதியில் இடமாற்றம் செய்து, ஆளுநருக்கு பரிந்துரைத்தது. அதற்கு ஆளுநரும் சம்மதித்து இடமாற்றத்தை வழங்கியிருந்தார்.

இடமாற்றம் வழங்கப்பட்டு நடைமுறைக்கு வரும் வேளையில், இடமாற்றத்தை எதிர்த்து செயலாளர்கள் ஆளுநரிடம் மேன்முறையீடு செய்துள்ளனர். தமக்குப் போதிய அவகாசம் வழங்கப்படவில்லை, தண்டனை இடமாற்றத்தைப் போன்று உடனடியாக நடைமுறைப்படுத்த எத்தனிக்கின்றார்கள், சேவை நிலையத்தில் குறிப்பிட்ட காலத்தைப் பூர்த்தி செய்யவில்லை என்று ஏகப்பட்ட காரணங்களை செயலாளர்கள் அடுக்கியுள்ளனர்.

இதனை ஏற்றுக் கொண்டு வடக்கின் ஆளுநர் பளிகக்கார, இந்த இடமாற்றத்தை சிறிது காலத்திற்கு ஒத்தி வைத்திருக்கின்றார். சீனாவுக்குச் சென்றுள்ள வடக்கு மாகாண பிரதம செயலாளர் வந்த பின்னர், இது தொடர்பில் ஆரார்யப்பட்ட பின்னர் இடமாற்றம் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேவேளை, ஆளுநரிடம் மேன்முறையீடு செய்த நான்கு செயலாளர்களும், கடந்த காலங்களில் – முன்னைய ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் காலத்தில், இடமாற்ற விடயங்களில் தாங்கள் என்ன செய்தோம் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டியிருக்கின்றது.

முன்னைய ஆளுநர், நினைத்த மாத்திரத்தில் ஒருவரை தனக்குப் பிடிக்கவில்லை என்றால் – தனது விருப்புக்கு ஏற்ப கட்டளைக்குச் செயற்பட மறுத்தால் – அல்லது முன்னைய அரசின் வடக்கு அமைச்சர்களுக்கு இயைபாக நடக்கவில்லை என்றால், உடனடியாக கேட்டுக் கேள்வியின்றி இடமாற்ற உத்தரவைப் பிறப்பிக்க, அதனைப் பூம் பூம் மாடு போன்று தலையாட்டி நடைமுறைப்படுத்தியவர்களே இந்தச் செயலாளர்கள்.

இதில் நிர்வாக ரீதியில் சிக்கல் இருக்கின்றது, குறித்த இடமாற்றத்தை உடனடியாக வழங்க முடியாது, அவர்களுக்கு போதிய அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்றெல்லாம், ஆளுநருக்கு எடுத்துச் சொல்வதற்குப் பதிலாக, எள்ளென்றால் எண்ணையாகி வேலை செய்த விசுவாசிகளே இந்தச் செயலாளர்கள்.

இவ்வாறானதொரு நிலையில் தமக்கு இடமாற்றம் வழங்கப்படும் போது மாத்திரம், உரிய நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்று எப்படி எதிர்பார்க்க முடியும். தலையிடியும் – காய்ச்சலும் தனக்கு வரும் போதுதான் தெரியுமோ ?

எது எப்படியிருப்பினும், வடக்கு மாகாணசபை இடமாற்றங்களை முறையற்ற விதத்தில் செய்ய முற்பட்டிருந்தால் தவறுதான். கடந்த காலங்களில் இழைக்கப்பட்ட தவறுகளை முன்வைத்து, தொடர்ந்தும் தவறு இழைக்கக் கூடாது. ஆனால், இனி மேலாவது செயலாளர்கள் தங்கள் விசுவாசத்தை வேலை மீது மாத்திரம் காட்டட்டும்.

**பத்தி எழுத்து**

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முரண்பாட்டுக்கு விரைவில் முற்றுப்புள்ளி வேண்டும்

இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் இடையிலான முறுகல் கடும் தீவிரமடைந்துள்ளது. மூன்று நாள் பயணமாக வடக்கிலுள்ள மாவட் டங்களுக்கு பிரதமர் வருகை தந்தது, வாக்கு அள்ளும் நோக்கம் கொண்ட வெறும் அரசியல் நடவடிக்கை என்பதாக முதலமைச்சர் கடுமையாக விமர்சித்திருக் கிறார். அதனால்தான் அவரது நிகழ்வுகளில் தான் கலந்து கொள்ளவில்லை என்றும் அவர் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

வடக்கு மாகாண சபையில் 'தமிழ் இனப்படுகொலை' தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதில் இருந்தே இவர்கள் இருவருக்குமான கருத்து மோதல் வெடித்தது. தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றிய முதலமைச்சர், ரணில் விக்கிரமசிங்கவைப் பற்றிக் கடுமையான விமர்சனங்களை முன்வைத்தார். அந்தத் தீர்மானத்துக்கு சில நாள்கள் முன்னதாக யாழ்ப்பாணம் வந்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, வடக்கில் இருந்து எக்காரணம் கொண்டும் இராணுவத்தினரின் எண்ணிக்கை குறைக்கப்படாது என்று தெரிவித்த விடயம், முதலமைச்சரினால் விமர்சனத்திற்கு உள்ளாக்கப்பட்டது. ரணிலின் மருமகனான அவரது கூற்றை விமர்சிக்கப் புறப்பட்ட முதலமைச்சர், மாமனாருக்குத் தெரியாமல் இந்தக் கருத்தை அவர் சொல்லியிருக்க மாட்டார் என்ற விடயத்தையும், அப்படிப்பட்ட ஒரு நிலையில் தெற்குக்கும் வடக்குக்கும் இடையில் இவர்கள் இரட்டை வேடம் போடுகிறார்கள் என்ற விடயத்தையும் தனது உரையில் சுட்டிக்காட்ட முற்பட்டார்.

உரையின் பின்னர் சில நாள்கள் அமைதி காத்த ரணில் விக்கிரமசிங்க பின்னர் முதலமைச்சரைக் கடுமையாக விமர்சித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தார். வடக்குக்குச் செல்லும் போது முதலமைச்சருடன் பேசப்போவதில்லை என்றும் சொல்லி வைத்தார். அதேபோன்று அவர் வடக்குக்கு இரண்டு தடவைகள் வந்த போதும் முதலமைச்சருடன் பேசவோ உறவாடவோ முற்படவில்லை. இரண்டாவது தடவை வந்த போது நடந்த நிகழ்வுகளில் முதலமைச்ச ருக்கு உரிய முக்கியத்துவம், மதிப்பு கொடுக்கப் படவில்லை என்று மாகாண சபையினர் கருதி னர். அதனால் மாகாண அமைச்சர்கள் எவரும் அந்த நிகழ்வுகளில் கலந்துகொள்ளவில்லை. கடைசி நேர அழைப்புக் காரணமாக உறுப்பினர்களும் கலந்துகொள்ளவில்லை.

இந்தப் பின்னணியில் முதலமைச்சரின் தற்போதைய கருத்து இந்தப் பிரச்சினை - இருவருக்கும் இடையிலான முறுகல் நிலை நீடிக்கப் போகின்றது என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. சிறுபிள்ளைத்தனமான மோதல் என்று சக அரசியல்வாதிகளாலேயே சுட்டிக் காட்டப்படும் இந்த முரண்பாடு உடன் முடிவுக்குக் கொண்டு வரப்படுவது அவசியம்.

ஒரே அணியில் இருந்தாலும் அரசியல் ரீதியான விமர் சனங்கள், முரண் கருத்துக்கள் பரிமாறப்படுவது அரசியல் களத்தில் புதிய விடயம் அல்ல. எனினும் அதனை மோதல் நிலை நோக்கி வளர்த்துச் செல்வது அரசியல் நாகரிகமும் அல்ல. பழுத்த அறிவு கொண்ட இரு தலைவர்களுக்கும் இது தெரியாததுமல்ல. எனவே இந்த விடயத்தை மேலும் வளர்த்துச் சென்று அது புதிதாக ஒரு தமிழ் - சிங்கள உறவுச் சிக்கலை உருவாக்கி விடாது பார்த்துக் கொள்வது இரு தலைவர்களுக்கும் இருக்கும் பொறுப்பு.

எமது முதலமைச்சரை சந்திக்க மறுப்பதும் அவருக்கு உரிய மதிப்பு அளிக்காமல் மத்திய அரசின் அதிகா ரத்தை நிலை நிறுத்துவது போன்று அவரைத் தவிர்த்து வடக்கிலே நிகழ்வுகளை நடத்துவதும் கொழும்பு அரசின் நல்லிணக்க முயற்சியாக இருக்க முடியாது என்பதை ரணில் விக்கிரமசிங்கவும்-

நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்ட விடயங்களில் மிகச் சில அடி முன்னேற்றமாவது ஏற்படலாம் என்று தோன்றுகின்ற நிலையில் கொழும்பு அரசுடன் முரண் நிலையைத் தொடர்ந்து வளர்த்துச் செல்வது எந்த விதத்திலும் தமிழ்ச் சமூகத்திற்குப் பயன்தரப்போவ தில்லை என்பதை முதலமைச்சரும் புரிந்து கொண்டு இந்த விடயத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

# சந்திரசிறி வழியில் செல்வாரா பளிகக்கார?

■ சேரலாதன்

வடக்கு மாகாணசபையில் முதலமைச்சருக்கும், ஆளுநருக்குமிடையே தேவையில்லாத பிரச்சினை ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட இடமாற்றங்களை ஆளுநர் இடைநிறுத்தி வைத்துள்ளதால், இந்த நிலை உருவாகியுள்ளது. வழங்கப்பட்ட இடமாற்றங்களை ஏற்றுக் கொண்டு செயற்படுமாறு இடமாற்றம் வழங்கப்பட்டவர்களுக்கு முதலமைச்சர் அறிவித்திருந்த நிலையில் இந்த இடமாற்றங்கள் ஆளுநரால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மேலும் இடமாற்றம் வழங்கப்பட்ட அமைச்சுக்களின் செயலாளர்கள் ஆளுநரிடம் தெரிவித்த மேன்முறையீட்டுக்கு அமைவாகவே ஆளுநர் நடவடிக்கை எடுத்ததாகவும் தெரிய வருகின்றது.

மைத்திரி தலைமையிலான புதிய அரசு பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட பின்னர் வடக்கு மாகாண ஆளுநராக இருந்த முன்னாள் இராணுவ உயர் அதிகாரியான ஜீ.ஏ.சந்திரசிறியை அந்தப் பதவியில் இருந்து அகற்றிவிட்டுச் சிவில் அதிகாரியாகப் பணிபுரிந்த பளிகக்காரவை அந்தப் பதவியில் அமர்த்தியது. அத்துடன் முதலமைச்சரின் உத்தரவுகளைப் புறக்கணித்து வந்த பிரதம செயலாளரும் இடமாற்றம் செய்யப்பட்டார். இந்த நடவடிக்கைகள் மாகாணசபை நிர்வாகம் சுமுகமாக இடம்பெறுவதற்கு உதவுமென எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் தற்போது முதலமைச்சரின் விருப்பத்துக்கு மாறாக அமைச்சின் செயலாளர்கள் சிலரும், ஆளுநரும் செயற்பட்டுள்ளமை, மீண்டும் முரண்பாடுகள் தோன்றுவதற்கான அறிகுறிகளைச் சுட்டி நிற்கின்றன.

மாகாண சபையைப் பொறுத்த அளவில் சகல அதிகாரங்களும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாணசபை நிர்வாகத்திடமே இருத்தல் வேண்டும். ஆளுநர் பதவி என்பது வெறும் சம்பிரதாயபூர்வமானதொரு பதவியாகும். இந்திய மாநிலங்களை நாம் எடுத்துப் பார்த்தால் புதிய அரசு பொறுப்பேற்கும் போதும், அமைச்சர்களின் மாற்றத்தின்போதும், சுதந்திரதினம், குடியரசு தினம் ஆகியவை கொண்டாடப்படும் போதும், மாநில அரசின் கொள்கை விளக்க அறிக்கையை வாசிக்கும்போதும் மட்டுமே ஆளுநருக்கு வேலையிருக்கும். மற்றும் அசாதாரண சூழ்நிலையில் மாநிலத்தின் நிலை தொடர்பாக மத்திய அரசுக்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கும் கடமையும் ஆளுநருக்கு உண்டு. அதிகாரிகளின் சகல விடயங்களையும் மாநில அரசே கவனித்துக் கொள்ளும். ஆளுநர் இதில் தலையிட மாட்டார்.

ஆனால் எமது நாட்டைப் பொறுத்த வரையில் எல்லாமே தலைகீழாகவே நடைபெறுகின்றன. ஏனைய மாகாணங்களில் ஆளுநர்கள் எவ்வாறு நடந்து கொள்கின்றனரோ தெரியவில்லை, வடக்கைப் பொறுத்தவரை யில் சகல அதிகாரங்களையும் ஆளு நரே தம் வசம் கொண்டுள்ளார். மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை நிர்வாகம் புறம் தள்ளப்பட்டு நிற்கின்றது. மக்கள் மாகாண சபை உறுப்பினர்களைத் தெரிவு செய்தது அவர்கள் சும்மா இருப்பதற்காக வல்ல. அவர்கள் மூலமாகத் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் அவர்கள் இன்னமும் உள்ளனர். ஆனால் அவர்களது நம்பிக்கைகள் இன்னமும் நிறைவேற்றப்படாமலேயே உள்ளன. முதலமைச்சரே அந்தப் பதவிக்குரிய அதிகாரங்களைப் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளபோது, சாதாரண மாகாண சபை உறுப் பினர்களால் என்ன செய்ய முடி யும்?

மேலும் அதிகாரிகள் தமது பொறுப்புக்களை உணர்ந்து செயற்படும் போது தான், மாகாண சபை நிர்வாகமும் சீராக இயங்க முடியும். தமது மக்களால் பெரும் நம்பிக்கைக்கு மத்தியில் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபையை மதிப்பதற்கு அவர்கள் முதலில் தெரிந்து கொள்ள வேண்டும். தற்போது வழங்கப்பட்ட இடமாற்றங்கள் மாகாணசபையின் அமைச்சர்களுக்கு இடையேதான் வழங்கப்பட்டுள்ளன. எங்கோ தொலை தூரத்தில் உள்ள இடங்களுக்கு இடமாற்றங்கள் வழங்கப்படவில்லை. மேலும் முதலமைச்சரிடம் எதையும் கூறாது நழுவிய இந்த அதிகாரிகள், ஆளுநரிடம் முறையிட்டும் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளனர். ஆளுநரும் இது தொடர்பாகக் கலந்துரையாடிய பின்னர் ஒரு சுமுகமான முடிவை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவரும் முன்னாள் ஆளுநர் சந்திரசிறியின் வழியிலேயே தன்னிச்சையான முடிவை எடுத்துள்ளார்.


இந்த நிலையில் மாகாணசபை உறுப்பினர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து முதலமைச்சருக்குத் தமது ஏகோபித்த ஆதரவை வழங்க வேண்டும்.

தமது செயற்பாடுகள் மூலமாக ஆளுநரின் தன்னிச்சையான தீர்மானங்களுக்கு முடிவு கட்ட வேண்டும். இதைவிடுத்து முன்னைய நிலையே மீண்டும் தொடருமாயின் மாகாண சபையைக் கடவுளால் கூடக் காப்பாற்ற முடியாது.



**❝ மக்களால் தெரிவு செய்யப்பட்ட மாகாண சபை நிர் வாகம் புறம் தள் ளப்பட்டு நிற்கின்றது. மக்கள் மாகாண சபை உறுப்பினர் களைத் தெரிவு செய்தது அவர்கள் சும்மா இருப்பதற் காகவல்ல. அவர்கள் மூல மாகத் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர்கள் இன்னமும் உள்ளனர். ஆனால் அவர்களின் நம் பிக்கைகள் நிறைவேற்றப் படாமலேயே உள்ளன.**

# மைத்திரியை வளைத்துப் போடும் முயற்சிகளில் சீன அரசு



> சீனாவின் வளர்ச்சி ஒரு வியத்தகு மாற்றம் என்பது உண்மை தான். சீனா எதைச்செய்தாலும் அது அனைத்துலக ரீதியாகப் பாதிப்பைச் சந்திக்கும் என்பதும் உண்மையாகும். இந்தியமாகடல் பிராந்தியமும் பாதிக்கப்படும். இந்தியாவும் இதனால் பாதிக்கப்படும். ஆகவே அனைத்துலக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும் விதமாக உலக ஒழுங்கில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என நாம் கருதுகின்றோம் என டோவல் குறிப்பிட்டிருந்தார்.

சீனா தற்போது மைத்திரிபால சிறிசேனவுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளது. சீனாவுக்கான அவரது பயணத்தைத் தொடர்ந்து, மஹிந்த ராஜபக்ஷவை விட மைத்திரிபால சிறிசேன தனக்கு மிகவும் வேண்டியவர் என்பதைச் சீனா உணர்ந்துள்ளது.

இவ்வாறு, சிலோன் ருடே நாளிதழில், உபுல் ஜோசப் பெர்னாண்டோ எழுதியுள்ள பத்தியில் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வாரம் இலங்கைப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது, சீன நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் கொழும்புத்துறைமுக நகரத் திட்டத்தின் எதிர்காலம் தொடர்பாக கேள்விகள் எழுப்பப்பட்டன.

துறைமுக நகரத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள தடையானது, சீனா மற்றும் இலங்கை ஆகிய இரண்டு நாடுகளுக்கும் இடையிலான சுமுகமான உறவைப் பாதிக்கலாம் என ஊடக ஆசிரியர் ஒருவர் சுட்டிக்காட்டிய போது, இந்திய மாகடலில் கேந்திர முக்கியத்துவம் மிக்க இடத்தில் இலங்கை அமைந்துள்ளதால் எல்லா நாடுகளுடனும் நல்லதொரு உறவைப் பேண வேண்டியது இன்றியமையாத விடயமாகும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளக்கமளித்தார்.

ரணில் இக்கருத்தைத் தெரிவித்த போது, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சீனாவில் தங்கியிருந்தார். சீனாவுக்கு மைத்திரிபால சிறிசேன பயணம் செய்த போது இலங்கையில் சிறுநீரக மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தருவதாக சீனா வாக்குறுதி வழங்கியது. இது சீனர்களின் தந்திரோபாயமாக உள்ளது என்பதை வரலாறு கூறுகிறது.

1970–77 காலப் பகுதியில் இலங்கையை ஆட்சிசெய்த பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கவுக்கு, மறைந்த அவரது கணவரான முன்னாள் பிரதமர் எஸ். டபிள்யூ, ஆர்.டி. பண்டார நாயக்கவின் நினைவாக அமைக்கப்பட்ட, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தை அன்பளிப்பாக வழங்கியது சீன அரசு.

இதேபோன்று இலங்கையின் அதிபராக சந்திரிகா பதவி வகித்த போது, இவரது கணவரான பிரபல நடிகரான மறைந்த விஜய குமாரதுங்கவின் நினைவாக கலாசார அரங்கம் ஒன்றை நிர்மாணித்துத் தருவதற்கான விருப்பத்தை சீனா வெளிப்படுத்தியது.

இது பின்னர் நெலும்பொக்குண என்ற பெயரில் திறந்து வைக்கப்பட்டது. இதனைத் திறப்பதற்கான வாய்ப்பை முன்னாள் அதிபர் மஹிந்த ராஜபக்ஷவே பெற்றிருந்தார்.

மஹிந்தவின் சொந்த இடமான அம்பாந்தோட்டையில் சீனாவால் துறைமுகம் மற்றும் விமானநிலையம் போன்றன நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

தற்போது, நாட்டின் வடமத்திய பகுதியில் சிறுநீரக நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ள மக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் அங்கே இந்த நோயைக் கட்டுப்படுத்தக் கூடிய முழுமையான வசதிகளைக் கொண்ட வைத்தியசாலை ஒன்றை நிர்மாணித்துத் தருவதாக சீனா வாக்குறுதி வழங்கியுள்ளது.

இலங்கைத் தலைவர்களின் தேவைகள் என்ன என்பதைச் சீனா நன்கு அறிந்து வைத்துள்ளது என்பதையே சீனாவின் நகர்வுகள் வெளிப்படுத்துகின்றன.

கடந்த ஜனவரி தேர்தல் பரப்புரையின் போது வடமத்திய மாகாணப் பகுதியில் மிகஎளிதாகப் பாதிக்கப்படும் சிறுநீரக நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாப்பேன் என மைத்திரிபால சிறிசேன வாக்குறுதி வழங்கியிருந்தார்.

ஆகவே சீனா தற்போது மைத்திரிபாலவுக்கு உதவி செய்ய முன்வந்துள்ளது.

மைத்திரிபால சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்டதைத் தொடர்ந்து, மஹிந்தவை விட மைத்திரிபால தனக்கு மிகவும் வேண்டியவர் என்பதைச் சீனா உணர்ந்துள்ளது.

ஏனெனில் மேற்குலகுடனும், இந்தியாவுடனும் மஹிந்த ராஜபக்ஷ விரோதத்தை வளர்த்ததுடன் அவர் சீனாவின் அதிகாரத்தின் கீழ் செயற்பட்டார். தற்போது இந்தியாவுடனும் மேற்குலகுடனும் மைத்திரிபால நல்லுறவைக் கட்டியெழுப்புவதன் காரணமாக, அவரைத் தனது பக்கம் இழுத்தெடுப்பதற்கான முயற்சியில் சீனா இறங்கியுள்ளது.

மைத்திரிபால சீனாவுக்கான தனது பயணத்தை மேற்கொண்ட போது சீனாவில் எவ்வாறான நகர்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை இந்தியா கூர்ந்து அவதானித்தது.

மத்தள விமான நிலையத்தை குத்தகைக்கு எடுப்பதற்கு கட்டார் மன்னர் விருப்பத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

சீனாவைப் போன்று தனது நிதியை அள்ளி வீசுவதற்கு இந்தியா தயாராக இல்லை. இலங்கையில் சீனாவால் மேற்கொள்ளப்படும் திட்டங்களுடன் அமெரிக்காவின் ஊடாகப் போட்டியிடுவதென்பதே இந்தியாவின் திட்டமாகும்.

கட்டார் நாட்டின் மன்னர் அண்மையில் கொழும்பிற்கான தனது பயணத்தை மேற்கொண்டிருந்தமை இதற்கான சிறந்த எடுத்துக்காட்டாகும். மத்தள அனைத்துலக விமான நிலையத்தைக் குத்தகைக்கு எடுப்பதற்கான தனது விருப்பத்தை கட்டார் மன்னர் வெளிப்படுத்தியிருந்தார்.

மத்தள விமான நிலையம் சீனாவால் முன்னெடுக்கப்பட்ட திட்டமாகும். இது தற்போது நட்டத்தில் இயங்குகிறது. இங்கு தற்போது எவ்வித விமானங்களும் பறப்புக்களில் ஈடுபடுவதில்லை. இந்த நட்டத்தை ஈடுசெய்ய முடியாது என்பதன் காரணமாகவே கட்டார் அரசு இதனைக் குத்தகைக்கு எடுப்பதற்கான தனது ஒப்புதலை வழங்கியுள்ளதாகத் தெரிகிறது.

கட்டார் அமெரிக்காவின் மிக நெருங்கிய நட்பு நாடாகும். தனது நாட்டிற்குச் சொந்தமான அல்–உடையிட் விமானத் தளத்தை அமெரிக்க விமானப்படையினர் பயன்படுத்துவதற்கான அனுமதியைக் கட்டார் வழங்கியுள்ளது.

அமெரிக்காவைப் பொறுத்தளவில் ஈராக் மற்றும் ஆப்கானிஸ்தானில் தனது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, கட்டார் விமானத் தளம் மிகவும் பயனுள்ளதாகும்.

அமெரிக்காவின் ஆசியுடனேயே மத்தள விமான நிலையத்தைக் குத்தகைக்கு எடுப்பதற்கான தனது ஒப்புதலை கட்டார் வழங்கியிருக்கலாம்.

மத்தள விமான நிலையத்தை வேறு சில நாடுகள் குத்தகைக்கு எடுக்கத் தீர்மானித்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த விவகாரம் தொடர்பான சீனாவின் எண்ணம் என்ன என்பதைத் துல்லியமாக எதிர்வுகூற முடியவில்லை.

எனினும், சீனாவுக்கான மைத்திரியின்சுற்றுப்பயணத்தைத்தொடர்ந்து, இந்திய மாகடலில் உருவாக்கப்படும் எந்தவொரு சீனத் தளங்களும் இந்தியாவின் பாதுகாப்பு நலன்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் என இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல் வெளிப்படையாக அறிவித்திருந்தார்.

இந்திய மாகடலில் சீனாவின் செல்வாக்கு அதிகரிப்பதானது இந்தியா உட்பட பூகோள மற்றும் பிராந்திய நாடுகளுக்குப் பாதிப்பை உண்டு பண்ணும் என இந்திய பாதுகாப்பு ஆலோசகர் அஜித்குமார் டோவல் குறிப்பிட்டுள்ளார்.

சீனாவின் வளர்ச்சி ஒரு வியத்தகு மாற்றம் என்பது உண்மை தான். சீனா எதைச் செய்தாலும் அது அனைத்துலக ரீதியாகப் பாதிப்பைச் சந்திக்கும் என்பதும் உண்மையாகும். இந்திய மாகடல் பிராந்தியமும் பாதிக்கப்படும். இந்தியாவும் இதனால் பாதிக்கப்படும். ஆகவே அனைத்துலக ரீதியில் ஏற்றுக்கொள்ளப்படும்விதமாக உலக ஒழுங்கில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் என நாம் கருதுகின்றோம் என டோவல் குறிப்பிட்டிருந்தார்.

கடந்த ஆண்டு இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகப் பதவியேற்றதிலிருந்து சீனாவின் வழமைக்கு மாறான வளர்ச்சி தொடர்பாக டோவலால் முன்வைக்கப்பட்டுள்ள முதலாவது வெளிப்படையான உறுதியான கருத்தாக இது நோக்கப்படுகிறது.

இந்திய மாகடலில் சீனாவின் பிரசன்னம் அதிகரிப்பது தொடர்பாக மோடி அரசாங்கத்தின் கீழ் சீனாவுடன் மேற்கொள்ளப்படும் 18வது சுற்று சிறப்பு பிரதிநிதித்துவ மட்ட பேச்சுக்களை டோவல் தற்போது நிறைவு செய்துள்ளார்.

இந்திய மாகடலின் கரையோர பட்டுப்பாதை மூலோபாயம் தொடர்பான சீனாவின் கரையோர முயற்சிகள் தொடர்பாக வினவியபோது, இப்பிராந்தியத்தில் இராணுவத் தளங்களை அமைப்பதன் மூலம் இங்கே மோதல் நிகழ வழியேற்படாது என டோவல் பதிலளித்தார்.

தனது பட்டுப்பாதை மூலோபாயத் திட்டத்தின் முக்கியத்துவத்தை இலங்கை ஜனாதிபதியின் சீனப் பயணத்தின் போது, சீனா வலியுறுத்தியது. அதேவேளை், சீனாவின் மூலோபாயத்தைத் தோற்கடிப்பதற்கு, இந்தியா, அமெரிக்காவைப் பயன்படுத்த முயற்சிப்பது போல் தெரிகிறது.

இந்தநிலையில், இந்தியா, சீனா மற்றும் இலங்கை ஆகிய மூன்றும் இணைந்து ஏன் பணியாற்றக் கூடாது என சீன அதிபர், இலங்கை ஜனாதிபதியிடம் வினவியதாக இலங்கையின் நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்ததாக இந்திய ஊடகம் ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இந்திய மாகடலில் அமெரிக்காவின் பிரசன்னத்தை இந்தியா ஏற்றுக்கொள்ளக் கூடாது என்பதை வலியுறுத்துகின்ற சீனாவின் திட்டமாக இது இருக்கலாம்.

சிலோன் ருடே நாளிதழில்
**உபுல் ஜோசப் பெர்னாண்டோ**

## தவக்காலச் சிந்தனை

# உயிர்ப்பின் சமாதானம் மண்ணில் மலரட்டும்

கோதுமை மணி மண்ணில் வீழ்ந்து மடிந்தாலொழிய மிகுந்த பலன் தரமுடியாது என்று கூறிய இயேசுவை யூதர்கள் சிலுவையில் பலியாக்கி கல்லறையில் வைத்தார்கள். நானே உயிர்தரும் வாழ்வும், உணவும் என்றவருக்கு மரணமா? ஆதவனை இருள் வெற்றி கொள்ளுமா?

ஆம் கல்லறையில் பேரொளியை வைத்து விட்டு அலகை தன் ஆட்சியை நடத்தலாம் என எண்ணியது. அதன் மாயை நிழல், வெற்றி கொள் மாவீரன் இயேசு உயிர்த்ததால் தோற்றுப்போனது, ஏனென்றால் காலங்களையும், யுகங்களையும் கடந்தவரும்,ஆட்சியும், மாட்சியுமான இறை ஒளி மண்ணுக்குள் அடங்கவில்லை. இறை திட்டத்தின்படி மண்ணில் வீழ்ந்த கிறிஸ்து என்னும் விதை கிறிஸ்தவப் பெரு விருட்சமாக முளை கொண்டு எழுச்சி பெற்றது. உயிர்ப்பும் உயிரும் நானே என்றவாறு இயேசு உயிர்த்து உயிருள்ள இறைவன் என்றும் விசுவாசத்தை உறுதிப்படுத்தினார். அநீதியை வென்று சமாதானத்தின் அரசராக கல்வாரிக் களமாடி விடுதலை தந்தார்.

இந்த உயிர்ப்பின் மகிழ்வில், புதுப்பிறப்பின் பாதையில் பங்கு கொள்ள எமது உள்ளங்களில் தோன்றும் புதிய எண்ணங்கள் உயிர்ப்புள்ளதாக இருக்க வேண்டும். பிறரும் உயிர்ப்புடன் வாழ வழி சமைக்க வேண்டும். எமது பழைய பாவங்கள், வாழ்வு முறைகளைக் கல்லறைக்குள் புதைத்து விட்டு இயேசுவோடு உயிர்த் தெழுவோம்.

கிறிஸ்து கொண்டு வந்த அமைதி, சமாதானம், விடுதலை அனைவரோடும் தங்குவதாக அல்லேலூயா! அல்லேலூயா!!

எஸ். யேசுதாஸ்,
கொழும்புத்துறை

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 6 | | | 8 | 4 | |
| 9 | | 6 | | 3 | | 1 | | |
| 1 | 3 | 4 | 2 | | | 6 | | |
| 8 | 4 | | | 9 | | | 3 | 7 |
| | 5 | | | | | | 6 | |
| 2 | 6 | | | 7 | | | 5 | 1 |
| | | 2 | | | 7 | 3 | 1 | 6 |
| | | 8 | | 6 | | 5 | | 2 |
| | 1 | 3 | | | 5 | | | |

**நேற்றைய சுடோக்கின் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 2 | 9 | 5 | 1 | 7 | 4 | 6 | 3 |
| 6 | 5 | 7 | 2 | 4 | 3 | 1 | 9 | 8 |
| 3 | 4 | 1 | 9 | 6 | 8 | 2 | 7 | 5 |
| 5 | 3 | 2 | 6 | 9 | 1 | 8 | 4 | 7 |
| 7 | 9 | 6 | 4 | 8 | 2 | 5 | 3 | 1 |
| 4 | 1 | 8 | 3 | 7 | 5 | 9 | 2 | 6 |
| 1 | 6 | 3 | 8 | 2 | 9 | 7 | 5 | 4 |
| 9 | 8 | 5 | 7 | 3 | 4 | 6 | 1 | 2 |
| 2 | 7 | 4 | 1 | 5 | 6 | 3 | 8 | 9 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நாளை

**பங்குனி-22**
**ஞாயிற்றுக்கிழமை**
**05.04.2015**

திதி: பிரதமை மு.இ.07.28
நட்சத்திரம்: சித்திரை பி.இ.01.45 வரை
சுபநேரம்: 09.09–10.39 வரை
இராகுகாலம்:04.39–06.09 வரை
உயிர்த்த ஞாயிறு

## கடலுணவுகளின் நேற்றைய நிலைவரம்

| | யாழ்ப் பாணம் | கிளிநொச்சி | பருத்தித் துறை | மாதகல் |
|---|---|---|---|---|
| இறால் | 650 | 800 | 700 | 500 |
| நண்டு | 350 | 450 | 250 | 400 |
| கணவாய் | 550 | 650 | 500 | 450 |
| பாரை | 400 | 600 | 550 | 340 |
| சுறா | 500 | 600 | 550 | – |
| சீலா | 450 | 500 | 350 | 250 |
| விளை | 450 | 550 | 350 | 300 |
| முரல் | 350 | 500 | 250 | 250 |
| கும்பிளா | 400 | 550 | 300 | 250 |
| கிழாக்கன் | 350 | 500 | 350 | – |
| ஒரா | 300 | 400 | 300 | – |
| திரளி | 250 | 400 | 250 | – |
| நகரை | 250 | 400 | 100 | – |
| சூடை | 130 | 200 | 100 | 50 |
| ஒட்டி | 180 | 250 | 200 | 150 |
| திருக்கை | 150 | 200 | 200 | 130 |
| பாலை | 300 | 350 | 350 | – |
| வாளை | 180 | 250 | 200 | 200 |
| கொய் | 80 | 80 | 80 | – |
| மதனம் | 300 | 350 | 250 | 200 |

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



# அன்பின் மூலம் ஆனந்தம்

அறிவோடு ஒன்றி விடு. அப்போது தான் பிழைகளை அகற்ற முடியும். அன்பின் மூலமாகச் செய்யும் செயல்கள் அனைத்தும் ஆனந்தத்தைத் தரும்.

உன்னை நேசி. அதுவே வளர்ச்சிக்கான வாசலைத் திறக்கத் துணை புரியும். ஒன்றை இழுத்துக் கொள்ளும் சக்தியைப் போல, விலக்கும் சக்தியும் உன்னிடம் இருக்கிறது.

ஒன்றைப் பெற வேண்டும் என்று நினைத்து விட்டால் இறுதிவரைக்கும் போராடி விடு. விளைவுகளைப் பற்றியோ, அதில் ஏற்படும் தோல்வி பற்றியோ கூடக் கவலைப்படாதே. அன்பின் மூலம் ஆனந்தம் பெறலாம்.

# மரக்கறிகளின் நேற்றைய நிலைவரம்

| | மருதனார் மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல் வேலி | கிளிநொச்சி | மன்னார் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | – | 30 | 30 | 20 | 40 | 30–40 | 30 |
| கத்தரி | 25 | 20 | 30 | 30 | 30–40 | 30 | 50–60 | 40 |
| கரட் | 100 | 110 | 100–120 | 100 | 80–100 | 120 | 100–120 | 90–110 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 50 | 30–40 | 60 | 40–60 | 30 |
| பயிற்றை | 50 | 30 | 40–60 | 40 | 50–60 | 60 | 60–80 | 40 |
| பாகல் | 80 | 80 | 60–100 | 80 | 80–120 | 80 | 80–100 | 60 |
| கருணைக்கிழங்கு | 80 | – | 50 | 40 | 100–120 | – | 60–80 | 60 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 90 | 70 | 90–100 | 100 | 80–90 | 60 |
| சி.வெங்காயம் | 50 | 60 | 40–60 | 60 | 50–90 | 90 | 60–80 | 60 |
| பூசணி | 50 | 30 | 40 | 30 | 30–40 | 60 | 60–80 | 60 |
| தக்காளி | 40 | 60 | 40 | 40 | 40–50 | 60 | 60–80 | 40–70 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 40 | 60–70 | 80 | 60–80 | 30–60 |
| கீரை | 15 | 20 | 25–30 | 10 | 20–30 | 20 | 35–40 | 20 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 20–30 | 30 | 10–15 | 20 |
| பச்சை மிளகாய் | 40 | 40 | 40–50 | 40 | 40–50 | 60 | 40–60 | 50 |
| புடோல் | 40 | 50 | 40 | 40 | 30–40 | 20 | 40–60 | 40 |
| கோவா | 40 | 40 | 40 | 30 | 30–40 | 50 | 40–60 | 30–50 |
| வெண்டி | 50 | 50 | 40 | 40 | 40–50 | 20 | 40–60 | 40 |
| போஞ்சி | 120 | 90 | 100 | 80 | 80 | 100 | 60–80 | 80–110 |
| லீக்ஸ் | 120 | 150 | 120 | 100 | 120–130 | 60 | 120–140 | 130–160 |
| தேங்காய் | 60 | 55 | 60 | 50 | 40–50 | 50–60 | 35–45 | 40–70 |
| உருளைக்கிழங்கு | 90 | 90 | 90–100 | 90 | 90 | 90 | 70–90 | 80–110 |
| தேசிக்காய் | 80 | 50 | 60–80 | 40 | 40–50 | 60 | 40 –60 | 40–70 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 30 | 20 | 15–20 | 20 |
| கறிமிளகாய் | 100 | – | 120 | 80 | 80 | 80 | 80–100 | 80–110 |
| இராசவள்ளி | 120 | – | 120 | 80 | 120 | 120 | 120–160 | 100 |


# இரத்தக்கொதிப்பை குறைக்கும் வழிகள்



இரத்த அழுத்தம் என்பது உடலில் ஓடும் இரத்தம், இரத்தக்குழாய்களின் சுவரில் ஏற்படுத்தும் அழுத்தம் ஆகும். இந்த இரத்த அழுத்தம் சூழ் நிலை, உழைப்பு, நோய் இவற்றிற் கேற்ப மாறுபடும். இந்த இரத்த அழுத்தமானது நரம்பு மண்டலத்தினாலும், நாளமில்லாச் சுரப்பிகளினாலும் சீராக இயக்கப்படுகின்றது. சிலருக்கு பல காலமாகத் தொடர்ந்து இருக்கலாம். தொடர் உயர் இரத்த அழுத்தம், இருதய பாதிப்பு, பக்கவாதம் போன்ற பாதிப்புகளுக்கு காரணமாகின்றது. இன்றைய நாகரிக வாழ்க்கையும் உயர் இரத்த அழுத்தத்திற்கு காரணமாகின்றது. இன்னமும் 40 வயதிற்கு மேல் உள்ளோர் மாதம் ஒருமுறையாவது இரத்த அழுத்தத்தை சோதனை செய்து கொள்வதில்லை என்பதால் அனேகருக்கு இரத்த அழுத்த பாதிப்பு ஆரம்ப காலத்திலேயே கண்டு பிடிக்க முடியாமல் போய்விடுகின்றது. முறையான இரத்த அழுத்தம் இல்லையெனில் உடனடி மருத்துவ சிகிச்சை பெற வேண்டும். ஒருவரது இரத்த அழுத்தம் நிமிடத்திற்கு நிமிடம் மாறுபடும். பகலில் கூடியும், இரவில் குறைந்தும் காணப் படும். இரவில் அதிகம் குறையும். இரத்த அழுத்தம் இருதய நோயோடு சம்பந்தப்பட்டது. வயது, ஆண், பெண் இவைகளும் இரத்த அழுத்த மாறுபாடுகளுக்கு காரணம் வகிக் கின்றது. குழந்தைகளுக்குப் பெரியோரை விட சற்று குறைவாக இருக்கும்.வயது கூடும்பொழுதும், முதியோருக்கும் இரத்த அழுத்தம் மாறுபடும். இரத்த நாளங்களின் முதிர்வே இதற்குக் காரணமாகின்றது. ஒருவரின் உடற் பயிற்சி, தூக்கம், ஜீரணசக்தி, மனநிலை இவையும் இரத்த அழுத்த மாறுபாடுகளுக்கு கார ணம் ஆகின்றது.

**உயர் இரத்த அழுத்தத்தைத் குறைக்கும் வழிகள்:**

அதிக பழம், காய்கறி, கொழுப்பு நீக்கிய பால் உணவுகள் நன்கு உதவும். கொழுப்பு நிறைந்த உணவுகளை அடியோடு தவிர்த்து விட வேண்டும். முழுத் தானிய உணவு, மீன் வித்து வகைகள். இயற்கை வழியில் இரத்த அழுத்தத்தைக் குறைக்க உதவும். அதிக மாமிச உணவு, இனிப்பு உணவு இவற்றைத் தவிர்க்கவும். உடற் பயிற்சி வயதிற்கேற்ப அவசியம். மூச்சுப் பயிற்சி, 'பிராணாயமா' வெகுவாக உயர் இரத்த அழுத்தத்தை குறைக்க உதவு கின்றது என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஆனால், இதனை மருத்துவர் அனுமதி பெற்றே ஆரம்



# சித்திரை மாத ராசி பலன்கள்



## கடகம்

சுவாசிக்கும் காற்று முதல் குடிக்கும் தண்ணீர் வரை அனைத்தையும் ரசித்து ருசிப்பவர்களே! பாலை வனத்திலும் பதியம் போட்டு பசுமையைப் பார்க்கும் கற்பனைவாதிகளே!



கஷ்ட, நட்டங்களெல் லாம் நீங்கும். தடுமாற்றங்கள் விலகும். முடிவெடுக்க முடியாமல் பல விடயங்களில் தர்ம சங்கடத்துடன் இருந்தீர்களே! அந்தநிலை மாறும். இந்த மாதம் முழுமையாக தைரியமாகச் சில முக்கிய காரியங்களில் முடிவெடுப்பீர்கள். அரசால் ஆதாயம் உண்டு. மற்றவர்களை தாக்கிப் பேசவேண்டாம். நெருங்கிய நண்பர்கள், உறவினர்களாக இருந்தாலும் அதிக உரிமை எடுத்துக் கொள்ளாதீர்கள். வரவுக்கு மிஞ்சிய செலவுகள் இருக்கும். பிரச்சினைகளை எதிர்கொள்ளும் தைரியம் வரும். தோல்வி, பயம் நீங்கும்.

கால் வலி, கழுத்து வலி, முதுகு வலி வந்துபோகும். மருத்துவச் செலவுகளும் அதிகமாகும். இலவசமாகச் சில கூடாத பழக்க வழக்கங்கள் உங்களைத் தொற்றிக் கொள்ள வாய்ப்பிருக்கிறது. எனவே உங்களுடைய அடிப்படை நடத்தைக் கோலங்களை மாற்றிக் கொள்ளாதீர்கள். உங்களுடைய தனித்தன்மையை இழந்து விடாதீர்கள்.

### மாணவர்கள்

நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். உயர்கல்வியில் விரும்பிய பாடப் பிரிவில் இடம் கிடைக்கும்.

### பெண்கள்

கோபத்தை குறையுங்கள். நல்லவர்களின் நட்பு கிடைக்கும். திருமணப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் உண்டு. வேலை கிடைக்கும்.

### உத்தியோகத்தர்கள்

உங்களின் தனித்திறமையை நிரூபித்துக்காட்ட நல்ல வாய்ப்புகள் ஏற்படும். உங்களின் உண்மையான போக்கை உயரதிகாரிகள் உணருவார்கள். தடைப் பட்டிருந்த பதவி உயர்வு, சம்பள உயர்வு இப்போது கிடைக்கும். சக ஊழியர்களுடன் இருந்து வந்த ஈகோ பிரச்சினைகள் விலகும்.

### கலைத்துறையினர்

தள்ளிப்போன வாய்ப்புகள் கூடி வரும். புகழ்பெற்ற பழைய கலைஞர்கள் உங்களுக்காகப் பரிந்துரை செய்வார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் அறிமுகமும், ஆளுமைத் திறனும் அதிகரிக்கும் மாதமிது.

# சவால் விடும் பெண்கள்



சில வேலைகள் எல்லாம் செய்ய எங்களை விட்டால் ஆளில்லை, ஆண்கள் அந்த வேலைகளுக்கு எல்லாம் சரிவரமாட்டார்கள் எனச் சவால்விட்டிருக்கின்றனர் பெண்கள். சவால் விட்டது மட்டுமல்லாமல் அதை ஒரு பட்டியலிட்டும் கூறியிருக்கின்றனர். அவை என்னவென்று பார்க்கலாம். சூழ்நிலை சமயங்களுக்கு ஏற்ப தங்களது மனநிலையையும், வேலை செய்யும் முறையையும் மாற்றிக் கொள்ளும் ஆற்றல் உடையவர்கள் பெண்கள். சாமர்த்தியமாகச் செயல்படும் குணம் அவர்களுக்கு மிகுதியாகவுள்ளது. இதன் காரணமாகத் தான் அவர்களே முன்னிலையில் இருக்கின்றனர்.

எந்த இடத்தையும் சுத்தமாக வைத்துக் கொள்ளும் பெண்கள் தான் நமக்கு சமைத்து சோறு போடுகின்றனர். இந்த விஷயத்தில் நூறு சதவீதம் பின்தங்கி இருக்கின்றனர் ஆண்கள்! நேர்முகத்தேர்வுகளில் ஆண்களை விட பெண்கள் தான் சிறப்பாக செயல்படுகின்றனர் எனப் பன்னாட்டு தொழில் நுட்ப நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் கூறுகிறார்கள். ஆம் இருக்கலாம், ஆண்களின் மூன்று நாள் தாடியையும், முழுக்கை சட்டையை முக்கால் கையாக மடித்துவிட்டு செல்லும் செயல்களையும் கண்டு அவர்கள் கடுப்பாகி இவ்வாறு கூறியிருக்கலாம். வாகனம் ஓட்டுவதிலும் ஆண்களை விட, பெண்கள் தான் சிறந்தவர்களாக இருக்கின்றனர். ஆகவே, பாதுகாப்பில் பெண்களே சிறந்தவர்கள் எனக் கூறுகின்றனர்.




# காதலுக்கு முன் தீர யோசிப்பதே சிறந்தது...



பெரும்பாலான பெண்களும், பெண்களது வீட்டாரும் காதல் சரி என்றும் கல்யாணத்துக்கு இல்லை என்று சொல்வதற்கும் காரணமாய் இருப்பது சாதி, மதம். வேறு சாதி, வேறு மதம் எனத் தெரிந்திருந்தும் பின் விரும்பியது எதற்கு? காதலிக்கும் போது வராத சாதி, மதம் திருமணம் என்றவுடன் வருவது ஏன்? பெற்றோர் அவர்களது கௌரவம் பாதிக்கும் என்ற காரணத்தாலேயே கல்யாணத்துக்கு முட்டுக்கட்டை போடுகிறார்கள். இதெல்லாம் ஏனோ காதலிக்கும் முன் பெண்கள் யோசிப்பதே இல்லை. காதல் திருமணம் செய்ய வேண்டும் எனப் பெண்கள் கூறியவுடன் பெற்றோர் கூறும் முதல் வார்த்தை தற்கொலை செய்து கொள்வோம் என்பதைத் தான். தாய், தந்தை குடும்பத்துடன் இறந்துவிடுவோம் என்றும் கூறுகிறார்கள். நமது சந்தோஷத்திற்காக அவர்களை ஏன் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் பெண்கள் மனதில் வருவதால் அவர்கள் திருமணம் என்று வரும்போது ஒதுங்கி விடுகிறார்கள்.

எனக்குப் பின்னர் எனது அக்காவும், தங்கையும் இருக்கின்றனர். நாம் திருமணம் செய்து கொள்வதன் மூலம், அவர்களது திருமண வாழ்க்கை பாதித்துவிடுமோ எனப் பயமாக இருக்கிறது என்று கூறுவார்கள். காதலிக்கும் போது அக்கா, தங்கை எங்கே போனார்கள். இதைப் பெண்கள் காதலிக்கும் முன்பே யோசிக்க மாட்டார்கள்.

கல்யாணத்துக்கு ஒட்டுமொத்த பெண் வீட்டாரும் கூறும் ஒரு மிக பெரிய காரணம் ஜாதகம் சரிவரவில்லை என்பது தான். இதற்காக பத்து பொருத்தம் பார்த்தா, மனம் ஒருவர் மீது காதல்கொள்ளும். காதலில் ஜாதகம் தடையாக வருவது இல்லை. காதலையே தடை செய்யத் தான் ஜாதகம் உட்புகுத்தப்படுகிறது.

# பெண்களுக்கான தற்காப்பு குறிப்புகள்

தாய், மனைவி, அக்கா, தங்கை, தோழி என அனைத்து [illegible]ரிமாணத்திலும் ஆண்களுக்கு ஊக்கமளித்து உறுதுணை[illegible]கத் திகழும் பெண்களின் பாதுகாப்பு இன்னமும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமைகள் அதிகரித்து வருகின்றன. இது குறித்த செ[illegible]திகளை ஊடகங்கள் வாயிலாக தெரிந்துகொள்ளும் [illegible]து, எங்கோ, யாரோ ஒரு பெண்ணுக்கு கொடுமை நடந்தி[illegible]கிறது என அலட்சியமாக இருப்பது தவறு. பெண்கள் தங்[illegible]ளை, பாலியல் வன்கொடுமைகளில் இருந்து தற்காத்துக் கொள்ள சில விஷயங்களைப் பின்பற்றலாம்.

தனியாகப் பயணம் செய்யும்போது, அந்த இடத்தின் சுற்றுபுறத்தில் ஏதாவது தப்பாக இருப்பதுபோல் தெரிந்தால் உடனடியாக அவ்விடத்திலிருந்து வெளியேறுங்கள்.

முடிந்தவரை இரவில் தனியாக பொதுப் போக்குவரத்தில் பயணிப்பதைத் தவிர்த்துவிடுங்கள்.

உங்கள் சொந்த வாகனத்தில் பயணிக்கும்போது, பழக்கப் பட்ட வழியிலேயே செல்லுங்கள், புதிய வழிகளைத் தேர்ந் தெடுக்க வேண்டாம்.

உங்களை எவராவது பின்தொடர்வது போல் தெரிந்தால், உடனடியாக கூச்சலிட்டு உதவிக்கு எவரையாவது அழையுங்கள். பயத்தில் அவசரமாக ஓடும்போது கூட கூச்சலிட மறவாதீர்கள்.

செல்போனில் அவசர தேவைக்காக ஸ்பீட் டயலில் முக்கியமான நண்பர்கள் அல்லது குடும்ப நபர்களின் எண்ணை பதிவு செய்து வையுங்கள்.

தனியாகப் பயணிக்கும்போது செல்போனைக் கையில் வைத்திருக்காதீர்கள், ஒருவேளை எவரிடமாவது சிக்கிக்கொண்டால் முதலில் செல்போனைத் தான் உங்களிடமிருந்து பறிப்பார்கள்.

இவை அனைத்தையும் மீறி, பாலியல் வன்முறையை எதிர் கொள்ள நேரிட்டால்,

உடனடியாக செல்போனில் நீங்கள் கடைசியாகப் பேசியவர்களுக்கு, போனைக் கையில் வைத்தபடியே தொடர்பு கொண்டு நீங்கள் இருக்கும் இடத்தைச் சத்தமிட்டு கூறுங்கள்.

பையில் இருக்கும் குடை, பேனா போன்றவற்றைப் பயன் படுத்தி காமுகர்களைக் காயப்படுத்தித் தப்பிக்கலாம்.



உங்கள் எதிராளியைத் தாக்கும்போது முழு வலுவையும் பயன்படுத்தி முதல் அடியிலேயே அவனை வீழ்த்த முயலுங்கள்.

உங்களைத் தற்காத்துக்கொள்ள எதிராளியின் முன்பக்க கழுத்து பகுதி, மார்பு மற்றும் வயிற்று பகுதிகளில் பலமாகக் குத்துங்கள். எதிராளியை சமாளிக்கும் அளவிற்கு சக்தியில்லை என்றால் சற்றும் யோசிக்காமல் விரல்களினால் அவனின் கண்களைக் குத்திவிட்டு ஓட்டமெடுங்கள்.




## பூச்செடி

அப்பா வாங்கித்தந்த பூச்செடி
புத்தம் புதுப் பூச்செடி
பூவைச் சுமக்கும் பூச்செடி
நட்டு வைத்தேன் நானுமே
நன்றாய் வளர வேண்டுமே
காலையிலே எழுந்த உடன்
நானதற்கு நீர் கொடுப்பேன்
நன்றியோடு முகமலர்ந்து அது
நல்வாசமுள்ள பூ கொடுக்குமே....

## வர்ணம் தீட்டலாம் வாங்க...







## காகம் கூறிய அறிவுரை

ஒரு மரத்தில் ஒரு காக்கை கூடு கட்டி தன் குஞ்சுகளுடன் வாழ்ந்து வந்தது.அதே மரப்பொந்தில் ஒரு ஆந்தை இருந்தது.அது நள்ளிரவில் காக்கை தூங்கி இருக்கும் வேளையில் வந்து அதை விரட்டி அடித்தது.மறு நாள் வேறொரு மரத்தில் காக்கை கூடு கட்டியது.அதையும் தெரிந்து கொண்ட ஆந்தை அங்கேயும் சென்று இரவில் காக்கையை விரட்டியது.அடுத்த நாள் காக்கைஅடுத்த ஊரிலிருந்த தன் தாய்க் காகத்திடம் இதைப் பற்றிக் கூறியது. 'இதிலிருந்து தப்ப வழி என்ன?' என்று கேட்டது.அப்போது தாய்க் காகம்..'ஆந்தைக்குப் பகலில் கண் தெரியாது ஆகவே நீ பகலில் சென்று ஆந்தையை விரட்டு' என்றது.காகம் அதன் படியே செய்ய ...ஆந்தை காகத்தை விட்டு ஓடியது.காகத்தின் புத்திசாலித்தனமும்...தாயார் சொன்ன அறிவுரையும்...அதையும் அதன் குஞ்சுகளையும் காப்பாற்றியது.

## நம்பினால் நம்புங்கள்!

* எந்த நேரத்திலும் ஏறக்குறைய 61 ஆயிரம் மனிதர்கள் வானில் பறந்து கொண்டிருக்கிறார்கள்.
* வலது கண்ணில் இருந்து முதல் கண்ணீர்த் துளி வெளிப்பட்டால் அது ஆனந்தக் கண்ணீர். வலி அல்லது துக்கத்தின்போது முதலில் கண்ணீர் சுரப்பது இடது கண்ணில்!
* இருளில் ஒளிரும் நாய்க்குட்டிகளை குளோனிங் முறையில் விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர்.
* சராசரி அமெரிக்கரை விட, சராசரி கனடா குடிமகன் செல்வந்தராக இருக்கிறார்.
* டிஸ்னிலேண்டில் உள்ள எலிகளைக் கொல்வதற்காக, ஒவ்வொரு இரவும் 200 பூனைகள் பயன்படுத்தப்படுகின்றன.
* உலக மக்களில் 7ல் ஒருவர் பசியோடுதான் உறங்கச் செல்கிறார்.
* சீன மக்கள் ஒட்டுமொத்தமாக ஓராண்டு புகைக்கும் சிகரெட்டுகளின் எண்ணிக்கை 1.7 ட்ரில்லியன்!

## விழித்துக் கொள்வோம்...

ஒரு மனிதனுக்கு மனம்தான் மிகவும் முக்கியம். இதைத்தான் எண்ணத்தைப் போல வாழ்க்கை என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த மனதை எப்படி நன்றாக வைத்துக் கொள்வது? ஒரு மனிதனுக்கு ஒவ்வொரு வயதிலும் ஒவ்வொரு விதமான மனநிலையும் ஒவ்வொரு விதமான எதிர்பார்ப்பும் இருக்கும். அந்த எதிர்பார்ப்புக்கள் நிறைவேறா ததால்தான் பல தவறுகள் நடக்கின்றன. ஒரு தவறு நடந்து விட்டால் தப்பு செய்தவனை மட்டும் குறை கூறவோ பழி போடவோ முடியாது. அதற்குக் காரணமானவர்களையும் யோசிக்க வேண்டும். தெரு ஓரத்தில் தனித்து வளரும் ஒரு செடிக்கு எப்படி நாம் எந்த உத்தரவாதம் கொடுக்க முடியாதோ அப்படித்தான் தனிமைப்படுத்தப்படும் ஒரு குழந்தையும். வேலியில்லாத செடியை ஆடு மேய்வது போல் பலரது வாழ்க்கையும் அழிந்து போகி றது. நம் பிள்ளைகளுக்கு நாமே வேலியாக இருக்க வேண்டும்.




இளமைப் பருவம், ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையிலேயே மிக முக்கியமான பகுதி. உடலிலும் மனதிலும் ஏற்படும் இயற்கையான மாற்றங்களால் சில குழந்தைகள்



பயந்து போவார் கள். சில குழந்தைகள் குழப்பத்தில் இருப்பார்கள். இது வரை எல்லா விடயத்துக்கும் அம்மாவையே கேட்டுச் செய்திருப்பார்கள். இனி, தானே முடிவெடுக்கத் தொடங்குவார்கள். ஆடைகள் வாங்குதிலும் சரி, வெளியே போவதிலும் சரி தனியாக அல்லது தோழர்களுடன் போவதையே விரும்புவார்கள். இப்போது பெற்றோர்களின் மனநிலை அப்பாடா பிள்ளை வளர்ந்து விட்டான். அவன் வேலைகளை அவனே செய்து கொள்கிறான். நிம்மதி என்று பெருமையோடு விட்டு விடுவார்கள். இப்போதுதான் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே ஒரு விலகல் ஏற்படுகீறது. இந்த விலகல்தான் கடைசியில் ஆபத்தில் வந்து முடிகிறது. அம்மாவின் கடமை முடிந்துவிட்டது. இந்தச் சமயத்தில்தான் அவனுக்கு அப்பாவின் உதவி அவசியம் தேவைப் படுகிறது. இந்த இளமைப்பருவத்தை சிறுவர்களிலும் சேர்க்க முடியாது பெரியவர்களிலும் சேர்க்க முடியாது. ஏனென்றால் இரண்டும் கெட்டான் வயது . இந்த வயதில் நிறைய வித்தியாசம் தெரியும். அவங்களுக்குள்ளே ஏற்படுகிற மாற்றத்தால் பாதிப்பு இருக்கும். சிடு சிடுப்பு, கோபம் ஏதாவது கேட்டால் எரிந்து விழுவார்கள் இதைத்தான் நிறைய பேர், வளர வளரத் திமிர் அதிகமாகி விட்டது என்பார்கள். ஆனால் இதைச் சரியாகப் புரிந்து கொண்டு அவர்கள் இந்த வயதைக் கடக்கும் வரை அவர்களோடு துணையாக இருப்பது நமது; கடமை. இந்த வயதில் அப்பா அவனோடு நெருக்கமாகப் பழக வேண்டும். அவனுடைய நியாயமான தேவைகளைப் பூர்த்தி செய்து, அவனைச் சந்தோஷப்படுத்தி என் அப்பா என்னிடம் அன்பாகவும் பரிவாகவும் நடந்து கொள்கிறார் என்று அவன் மனம் சொல்ல வேண்டும். கண்டிக்க வேண் டிய நேரத்தில் கண்டித்து கோபப்பட வேண்டிய நேரத்தில் கோபப்பட்டு அதை விட அதிகமாக அவனிடம் உங்கள் அன்பை வெளிப் படுத்த வேண்டும்.

ஒரு நாளைக்கு அரை மணி நேரமாவது அவனுடன் தனிமையில் பேச வேண்டும். முடியவில்லையென்றால் முயற்சி செய்து பத்து நிமிடமாவது பேச வேண்டும்.

(தொடரும்)

# அரசியல்வாதிகள் 100 பேருக்கு எதிராக ஊழல் முறைப்பாடுகள்

## ஊழலுக்கு எதிரான முன்னணி கையளிக்கிறது

கொழும்பு, ஏப் .4

முன்னாள்அமைச்சர்கள், நாடா ளு மன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகளின் உறுப்பினர்கள், மாகாண அமைச்சர்கள், பிரதேச சபைகளின் தலைவர்கள் மற்றும் அரசின் உயர் அதிகாரிகள் உள் ளிட்ட 100 பேருக்கு எதிராக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விடம் முறைப்பாடுகள் கையளிக் கப்படவுள்ளதாக ஊழலுக்கு எதி ரான முன்னணி தெரிவித்துள்ளது.

இந்த முறைப்பாடுகள் உள்ளடங் கிய 100 கோவைகள் ஏற்கனவே தயாரித்து முடிக்கப்பட்டிருப்பதாக ஊழலுக்கு எதிரான முன்னணியின் அமைப்பாளர் நிஸாந்த சிறிவர்ண சிங்க தெரிவித்துள்ளளார்.

இலஞ்சங்களைப் பெறுதல், ஊழல் கள் மற்றும் முறையற்ற விதத்தில் சொத்துக்களை சம்பாதித்துக் கொள்ளும் குற்றச்சாட்டுக்கள் குறித்து இந்த முறைப்பாடுகள் முன்வைக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர்கள், நாடாளு மன்ற உறுப்பினர்கள் மற்றும் அர சின் உயர்மட்ட அதிகாரிகள் உள் ளிட்ட தரப்பொன்றுக்கு எதிராக இதற்கு முன்னரும் ஊழல்களுக்கு எதிரான முன்னணி இலஞ்ச, ஊழல் விசாரணை ஆணைக்குழுவுக்கு 24 முறைப்பாடுகளையும், நிதி மோசடிகள் விசாரணைப் பிரிவுக்கு ஐந்து முறைப்பாடுகளையும் கைய ளித்துள்ளது. (த-22)

# இலங்கை -அமெ. இடையே வலுவான பாதுகாப்பு உறவு

## இரு தரப்பும் சந்தித்துப் பேச்சு

கொழும்பு, ஏப்.4



இலங்கைக்கும்- அமெரிக்காவுக் கும் இடையிலான பாதுகாப்பு உற வுகளை மேலும் வலுப்படுத்தி கொள்ள நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.

இலங்கைக்கு பயணம் மேற்கொண் டுள்ள அமெரிக்க உயர்பாதுகாப்பு அதிகாரி ரொபர்ட் ரோஸ் மற்றும் முப்படைகளின் பிரதம அதிகாரி ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஆகி யோருக்கிடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போதே அமெரிக் காவுடனான பாதுகாப்பை வலுப்ப டுத்துவது தொடர்பில் கலந்துரை யாடப்பட்டுள்ளது. இதன் முதற்கட்ட நடவடிக்கையாக இலங்கைப் படை யினருக்கு அமெரிக்காவில் பயிற் சிகளைப் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கைப் படையினருக்கு அமெ ரிக்காவில் பயிற்சி வழங்குவது தொடர்பில் அமெரிக்காவின் நிலைப் பாட்டை மாற்றி கொள்ளவேண்டும் என ஜகத் ஜயசூரிய கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை- கடந்த கால அரசு ஆட்சியிலிருந்தபோது இலங்கைப் படையதிகாரிகள் அமெரிக்காவில் நடைபெற்ற பாதுகாப்புக் கருத்த ரங்குகளில் பங்கேற்பதற்குக் கூட வாய்ப்பு கிட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# மைத்திரியின் சகோதரருக்கு ரூ.30 லட்சம் சம்பள உயர்வு

கொழும்பு, ஏப் .4

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வின்இளையசகோதரரும்,ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத் தலை வருமான பி.ஜி.குமாரசிங்கவுக்கு மூன்று மடங்கு சம்பள உயர்வு வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் நேற்று முன் தினம் முதல் நடைமுறைப்படுத்தப்பட் டுள்ளதாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் பணிப்பாளர் சபை குறிப்பிட்டுள் ளது.

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத் தலைவரின் மாதாந்த சம்பளம் இதுவரை 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக இருந்த நிலையில் அதனை 30 லட்சம் வரை உயர்த்த ஸ்ரீலங்கா ரெலிக்கொம் பணிப்பா ளர் சபை தீர்மானித்துள்ளது.

ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவ னமானது தொலைத்தொடர்புகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சின் கீழ் இயங்குவதுடன், அமைச்சர் மங்கள சமரவீரவின் ஆலோசனைக்கு அமைய பணிப் பாளர் சபை இந்தச் சம்பள உயர்வு தீர் மானத்தை மேற்கொண்டுள் ளது.

அடிப்படைச் சம்பளம் ரெலிக்கொம் மற்றும் மொபிற்றல் ஆகிய இரு நிறுவனங்களிலும் கிடைக்கும் மேலதிக கொடுப்பனவுகளுடன் சேர்த்தால் சுமார் ஒரு கோடி ரூபாவைச் சம்பளமாக பெறுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரெலிக்கொம் நிறுவனப் பணிப்பா ளர் சபையின் இந்தச் சம்பள உயர்வு முடிவுக்கு நிறுவனத்தின் பங்காளி நிறுவனமான மலேசியா வின் மெக்ஷிஸ் நிறுவனம் கடும் எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

பணிப்பாளர் சபை சம்பள உயர்வு வழங்கப்பட வேண்டியது அவசி யம் எனத் தெரிவித்துள்ளது.

எனினும், இவ்வாறு கண்மூடித்தன மான தீர்மானம் எடுப்பதாயின் மெக்ஷிஸ் நிறுவனம் தமது பங்கு களை விற்க நேரிடும் என குறித்த நிறுவனம், ரெலிக்கொம் பணிப் பாளர் சபைக்கு அறிவித்துள்ள துடன் பங்குகளை விற்பது குறித்து மெக்ஷிஸ் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (த)

# இன்று அரைச் சந்திர கிரகணம்

கொழும்பு, ஏப்.4

இலங்கையில் வாழ்கின்றவர்கள், இன்று சனிக்கிழமை அரை சந்திர கிரகணத்தைப் பார்க்க முடியும் என்று நவீன தொழில்நுட்பம் தொடர்பிலான ஆர்தர் சி கிளார்க் மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

மாலை 5 மணிக்கே அரை சந்திர கிரகணம் தென்படும் என்றும் அந்த மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

எனினும், சந்திர கிரகணத்தின் இறுதி இரவு 8 மணிவரையும் தென்படும் என்றும் அறிவித்துள்ளது.

சந்திரன் இன்று மாலை 4.46 மணிக்கு உதிக்கும். அப்போதிருந்து இரவு 8 மணிவரையும் அரை சந்திரக்கிரகணம் தென்படும்.

இந்த அரை சந்திர கிரகணம், வட அமெரிக்கா, பசுபிக் சமுத்திரம் ஊடாக சீனா வரையிலும் முழு சந் திர கிரகணமாகத் தென்படும் என்றும் அந்த நிலையம் அறிவித்துள்ளது. (ற)

# வசந்தகால நிகழ்வுகள் நுவரெலியாவில் ஆரம்பம்

கொழும்பு, ஏப்.4

நுவரெலியா மாநகர சபையின் ஏற் பாட்டில் இம்முறை வசந்த கால நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை காலை பெருந்திரளான பாண்ட் மாணவர் களின் பங்குபற்ற லுடன் நுவரெலியா பிரதான வீதியில் ஆரம்பித்து வைக்கப் பட்டன.

பாடசாலை மாணவர்களின் பாண்ட் வாத்திய நிகழ்வுகள் நுவரெலியா பிரதான வீதியில் ஆரம்பமாகி நுவ ரெலியா பிரதான தபால்கந்தோ ருக்கு முன் னால் நிறைவுபெற்றது.

இதில் நுவரெலியா, வெலி மடை, ஹக்கல, நானுஓயா ஆகிய பகுதி களைச் சேர்ந்த 35 பாடசாலை களி லிருந்து வருகைதந்த 50 குழுக்கள் பங்குபற்றின. இதில் மேலைத் தேய, கீழைத் தேய பாண்ட் வாத்தியங் கள் இடம்பெற்றன.

நுவரெலிய மாநாகர முதல்வர் மஹிந்த தொடம்பே கமகே தலைமை தாங்கிய இந்நிகழ்வில் பிரதம அதிதி யாக மத்திய மாகாண சபை உறுப்பி னர் ஆர்.ராஜாராம் கலந்து கொண்ட துடன், நுவரெலியா மாவட்ட செய லாளர் எலன் மீகஸ் முல்ல, நுவ ரெலியா மாநகர சபை உறுப்பினர் களான எல்.நேருஜி, மொகமட் பலீல், கேதீஸ்வரன் எம்.சந்திரன் உட்பட கல்வித் திணைக்கள அதி காரிகள் பொலிஸ் உயர் அதிகாரி கள், உட்பட அரச திணைக்களங் களின் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் முக்கிய பங்கு வகிப் பது நுவரெலியா வலய கல்விப் பணி மனையும், பாடசாலைகளுமாகும்.

ஆனால், நிகழ்வில் கலந்து கொண்ட பாடசாலை அதிபர்களுக்கான கதி ரைகள் ஒதுக்கப்படாமை தொடர்பா கவும் மங்கல விளக்கேற்றலில் அதிபர்கள் அழைக்கப்படாமை தொடர்பாகவும் கலந்துகொண்ட அதிபர்கள் விசனம் தெரிவித்தனர்.

நுவரெலியா வசந்தகால நிகழ்வு கள் கடந்த புதன்கிழமை தொடக்கம் ஆரம்ப மாகியுள்ளன. இதில் முக்கிய நிகழ்வுகளாக மோட்டார் கார் ஓட் டப் போட்டிகள், மலர்க் கண்காட்சி கள், குதிரை ஓட்டப்போட்டி, நாள் தோறும் இசை நிகழ்ச்சிகள், சர்வ தேச ரெனிஸ், கோல்ப் போட்டிகள், பொலிஸாரின் சாகச நிகழ்வுகள் உட்பட இன்னும் பல முக்கிய நிகழ் வுகளும் இடம்பெறவுள்ளன.

வசந்தகால நிகழ்வுகளுக்கான அனைத்து ஏற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டுள்ளதுடன் விசேட போக்கு வரத்துத் திட்டம் ஒன்றை இக்கால எல்லைக்குள் நடத்த திட் டமிடப்பட்டுள்ளதாகவும் நுவ ரெலியா மாநகர முதல்வர் தெரி வித்திருந்தார். (வ)

# கிழக்கில் காணிகளை மீளக் கையளிப்பு குறித்து விசேட கவனம் செலுத்தப்படும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப் 4



கிழக்கு மாகாணத்தில் இராணுவத் தினரால் கையகப்படுத்தப் பட்டுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் காணிகளை மீளக் கையளிப்பது தொடர்பில் விசேட கவனம் செலுத் துவதாக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவித்துள்ளார்.

நல்லாட்சிக்கான தேசிய முன்னணி யினரின் தலை மைத்துவ சபையின ருக்கும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது. இந்தச் சந்திப்பு நேற்றுமுன்தினம் வியாழக் கிழமை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகோத்தா வில் இடம்பெற்றுள்ளது. இதன்போதே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற் கண் டவாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது ஜனாதி பதித் தேர்தலைத் தொடர்ந்து ஏற்பட் டுள்ள இலங் கையின் புதிய அரசி யல் சூழ் நிலைகள் தொடர்பாகவும் எதிர்கால அரசியல் முன்னெடுப்புக் கள் தொடர்பாகவும் விரிவாக கலந் துரை யாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் நல் லாட்சிக்கான தேசிய முன்னணி யின் தவிசாளர் எம்.எம். அப்துர் ரஹ்மான், பொதுச் செயலாளர் எம்.ஆர்.நஜா முஹமத், வட மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் அய்யூப் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். (வ-10)

# வெள்ளவத்தை ஹோட்டலில் இந்திய தம்பதியின் சடலங்கள்

வெள்ளவத்தையில் உள்ள தனியார் ஹோட்டல் அறையில் இருந்து இந் தியத் தம்பதியரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

தமக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய இவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குண சேகர தெரிவித்துள் ளார்.

சந்தேகத்திற்கிடமான முறை யில் மீட்கப்பட்ட சடலங்கள் 36 மற்றும் 37வயதுடைய ஆண், பெண்ணின் சடலங்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள தாகவும் ,சம்பவம் தொடர்பான விசாரணைகளை வெள்ளவத் தைப் பொலிஸார் மேற் கொண்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த)

**வேலையாள்கள் தேவை**

- ★ கோட் மெஷின் மைண்டர்
- ★ கணினி வடிவமைப்பாளர் (டிசைனர்)
- ★ பைண்டர்

முன்னனுவம் உள்ளவர்கள் விரும்பத் தக்கது. 10.04.2015 இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். மற்றைய விவரங்கள் நேரில் கலந்து பேசலாம்.

**தொடர்பு: 077 6316365**
**024 222 3658, 024 222 7216**

வாணி கணினிப் பதிப்பகம்
இல. 85, கந்தசாமி கோயில் வீதி,
வவுனியா.

## மரண அறிவித்தல்கள்

### மைக்கல் ஜோசப்



இந்தியாவைப் பிறப்பிடமாகவும் சட்டநாதர் கோயிலடி நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட மைக்கல் யோசப் 02.04.2015 வியாழக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னார் சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான மைக்கல் லூர்த்தம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான நாதஸ்வர மாதேதை நல்லூர் முருகையாபிள்ளை- நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராமானந்தப்பிள்ளை மற்றும் கமலாம்பிகை (கனடா), புஸ்பவதி, ஐஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கமலாதேவி, சண்முகானந்தன், கணேஸ்வரன், பத்மகாந்தன் ஆகியோரது சகோதரரும், சிவானுஜா, விதுரன் ஆகியோரின் அன்புச் சித்தப் பாவும், சிந்துளா, அகலிகன், சாயிகேசன், தமிழ்யா ஆகியோரின் பெரியப்பாவும், சந்திரகுமார், பிரதீபன் அரவிந்தன், வரத லக்ஷிமி ஆகியோரின் மாமனும், சனாதனி, ஹரிஸ், மதுவந்தி ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (03.04.2015) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நல்லூர் சட்டநாதர் கோவில் முன்பாக உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சட்டநாதர் கோயிலடி, நல்லூர்.**
**T.P: 0771614355**

தகவல் :
**குடும்பத்தினர்.**

### பொன்னுத்துரை கனகரத்தினம்



நீர்வேலி தெற்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கனகரத்தினம் 02.04.2015 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதர் பொன்னுத்துரை- இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், சத்தியதேவியின் அன்புக் கணவரும் திருமதி வேதவனம் இரத்தினத்தின் (கனடா) சகோதரரும், கமலேஸ்வரி, கமலேந்திரா, புஸ்பேந்திரா (குமார்) ஆகியோரின் அன்புத் தந்தையும், அனோஜன், கிசானி, தனுசியன் ஆகியோரின் பேரனும், சிறிதரன், றஜினா, கவிதா ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நேற்று (03.04.2015) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நீர்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தணிகை ரேடேர்ஸ்,**
**நீர்வேலி.**

தகவல் :
**புஸ்பேந்திரா (குமார்-மகன்)**

திருமதி
### பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணி ஐயர் பரமேஸ்வரி அம்மா

மறவன்புலோ, வள்ளங்குளம் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி பிரம்மஸ்ரீ சிவசுப்பிரமணி பரமேஸ்வரி அம்மா (03.04.2015 ) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக்க ஐயர் - மீனாம்பாள் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை ஐயர்- தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், சிவசுப்பிமணி ஐயரின் அன்பு மனைவியும், கணேஷ் சுவாமி நவநீத ஐயர் மகேஸ்வரி (லீலா அம்மா ) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெகன்நாத சர்மா (ஊரெழு) ஜெயகாந்தக் குருக்கள் ( கனடா ) தியாகராஜ சர்மா சந்திராதேவி சண்முகநாத ஐயர் கலாமணி காலஞ்சென்ற அருணாதேவி காலஞ்சென்ற கேதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று ( 04.04.2015 ) சனிக்கிழமை மு.ப. 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மறவன்புலோ தனிப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**வள்ளங்குளம்**
**பிள்ளையார் கோவிலடி**
**மறவன்புலோ, சாவகச்சேரி.**
077 923 1675

தகவல் :
**குடும்பத்தினர்.**

### திருமதி அன்னம்மா சுப்பிரமணியம்




பண்ணாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா சுப்பிரமணியம் கடந்த 01.04. 2015) புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இலகுப்பிள்ளை-நன்னிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கறுவல்தம்பி-சிதம்பரநாச்சி தம்பதியரின் மருமகளும், சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, பொன்னம்மா, சிதம்பரப்பிள்ளை (மலேசியா) தில்லையம்பலம், ஆறுமுகம், அண்ணாமலை, மார்க்கண்டு ஆகியோரின் அன்புச் சகோதரியும், விசாகப்பெருமாள், செல்வநாயகி, சிதம்பரநாதன், காலஞ்சென்ற ஜீவராணி மற்றும் சிவக்கொழுந்து (நோர்வே), ஏரம்பமூர்த்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், றஞ்சினி (ஜேர்மனி), தயாளினி (ஜேர் மனி), கனகசபை (மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை), சம்பந்தமூர்த்தி (அஞ்சல் அலுவலகம் சுழிபுரம்), கிருஷ்ணகுமரன் (தாதிய உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்திய சாலை), நீதிமதி (விரிவுரையாளர்- நுண்கலைப் பிரிவு), கல்பனா, பவித்திரா, லவிந்தா, ஜதுர்சன், ஜசானி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.04.2015) சனிக்கிழமை பி.ப 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**'சாயிபதி',**
**பண்ணாகம், சுழிபுரம்.**

**தகவல் : பிள்ளைகள்,**
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**



*வரலாற்றுச் சிறப்பு மிக்க கிளிநொச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பொங்கல் உற்சவம் நேற்று இரவு வெகு விமரிசையாக நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் அம்மனை வழிபட்டனர். ஆயிரக்கணக்கான பாற்காவடிகளும், நூற்றுக்கும் அதிகமான பறவை காவடிகளையும் எடுத்தவாறு பக்தர்கள் வீதியெங்கும் காணப்பட்டனர்.* (ற–21)

# ஜி.எஸ்.பி. பிளஸுக்கு தகுதிபெற இன்னும் நிரூபிக்க வேண்டும்

## ஐரோப்பிய ஒன்றியம் கூறுகின்றது

கொழும்பு, ஏப்.4

மனித உரிமைகள் விடயத்தில் இலங்கையில் முன்னேற்றம் காணப்படுகின்றது. ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான கலந்துரையாடலை பிற்போடுவதற்கு ஐரோப்பிய ஒன்றிய அங்கத்துவ நாடுகள் ஆதரவளித்திருந்தன.

நாட்டில் மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றத்தைக் கொண்டு வரும் அர்ப்பணிப்புகளை நிறைவேற்றவும் நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறுதல் தொடர்பாக நம்பகரமான உள்ளக விசாரணைப் பொறிமுறையை ஸ்தாபிப்பதற்குமான காலஅவகாசத்தை இலங்கை அரசு கேட்டுக்கொண்டதற்கமைவாக செயற்படுத்துவதற்கு இது வழிகோலும் என நம்புவதாக ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார செயற்றிட்ட சேவையின் பதில் முகாமைத்துவ பணிப்பாளர் யூகோ அஸ்ட்டுடோ தெரிவித்தார்.

வடக்கில் படையினர் வசமிருந்த காணிகளில் ஒருபகுதியை விடுவித்துள்ளமை, சிவில் ஆளுநரை நியமித்தமை, நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவை மீண்டும் பதவியில் அமர்த்தியமை போன்ற நடவடிக்கைகள் புதிய அரசு மேற்கொண்ட சில நம்பிக்கையளிக்கும் நடவடிக்கைகள் என அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்த விடயத்தில் முன்னேற்றங்களை ஐரோப்பிய ஒன்றியம் உன்னிப்பாக அவதானிக்கும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இந்தக் கருத்துகளை வெளியிட்டார். இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றிய வதிவிடப் பிரதிநிதி டேவிட் டலியும் கலந்துகொண்டார்.

இதேவேளை– நல்லாட்சி, சட்டம் மற்றும் மனித உரிமைகள் தொடர்பில் புதிய செயலணிக் குழுவை ஸ்தாபிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கையும் இணக்கம் தெரிவித்துள்ளன. நேற்று முன்தினம் இடம்பெற்ற ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இலங்கைக்கும் இடையிலான கூட்டு ஆணைக்குழு சந்திப்பின் பெறுபேறாகவே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. 'கூட்டு ஆணைக்குழு சந்திப்பின்போது நல்லாட்சி சட்டத்தின் ஆட்சி மற்றும் மனித உரிமைகள் விடயம் தொடர்பில் கலந்துரையாடல்களுக்கு வழி சமைக்கும் வகையில் புதிய செயலணிக்குழுவை ஸ்தாபிப்பதற்கு கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டதாக' ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியத்திற்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளிவிவகார செயற்றிட்ட சேவையின் பதில் முகாமைத்துவ பணிப்பாளர் யூகோ அஸ்ட்டுடோ தெரிவித்தார்.

மனித உரிமைகள் விடயத்தில் நாடுகளை ஊக்கப்படுத்துவதற்கான ஒரு சலுகையாக ஜி.எஸ்.பி. பிளஸ் அமைந்துள்ளதென சுட்டிக்காட்டிய யூகோ அஸ்டுட்டோ, இலங்கை அதனை மீண்டும் பெறுவதற்கு இன்னமும் பல தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டியுள்ளதெனக் குறிப்பிட்டார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை மீளப் பெற்றுக்கொள்ளும் முனைப்பில் அதற்கான அடிப்படை அளவுகோல்களைப் பூர்த்திசெய்வதில் இலங்கை அரசின் தயார்ப்படுத்தல்களைக் காணக்கூடியதாகவுள்ளதெனவும் அவர் சுட்டிக்காட்டினார். இந்தவகையில் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை இலங்கை அரசு மீளப்பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளைத் தாம் ஆரம்பித்துள்ளதாகவும் இது ஒரு முறைப்படியான ஒழுங்கு முறைமைக்கு அமையவே முன்னெடுக்கப்படுவதாகவும் கூறினார்.

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை மீண்டும் கிடைப்பதெனில், அதற்கு இலங்கை அரசின் சார்பில் இன்னமும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் உள்ளதுடன், இதற்கு இன்னமும் காலம் எடுக்கும் எனத் தெரிவித்தார். இலங்கை அரசு அடிப்படையில் ஐ.நாவின் 27 சாசனங்களை ஏற்று, அதற்கு அமைவாக செயற்பட வேண்டியது அவசியம் ' எனவும் அவர் மேலும் கூறினார்.

(ற–சி)

# ஆற்றில் குதித்து சிறுமி சாவு

உடபுசல்லாவை – கொல்எல்பிட்டிய பகுதியில் ஆற்றில் குதித்து சிறுமியொருவர் உயிரிழந்துள்ளதாக உடபுசல்லாவை பொலிஸ் பொறுப்பதிகாரி சுமித் வல்பொல தெரிவித்தார்.


நேற்றுமுன்தினம் பாடசாலை விட்டு இரு நண்பிகளுடன் வீடு திரும்பி வரும் போது, குறித்த சிறுமி ஆற்றிற்கு அருகில் நின்று கொண்டு நண்பிகள் இருவரையும் போகுமாறு கூறிய பின், இவ்வாறு ஆற்றில் குதித்து உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும், அப்பகுதியில் சென்ற ஒருவர் மாணவியின் புத்தகப் பையைக் கண்டு அதைப் பற்றி குறித்த சிறுமியின் பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து, பிரதேச மக்களும் பொலிஸாரும் இணைந்து சடலத்தை மீட்டுள்ளனர். சம்பவத்தில் கொல்எல்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த சச்சனி விக்கிரமசிங்க என்ற 14 வயதுடைய சிறுமியே உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு,பின்னர் நேற்று உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது என்று வைத்தியசாலை வட்டாரங்கள் கூறுகின்றன.

நீரில் மூழ்கி மூச்சுத் திண றியே சிறுமி உயிரிழந்துள்ளார் என்று சட்ட மருத்துவ அதிகாரி தெரிவித்தார் என்று உடபுசல்லாவை பொலிஸ் பொறுப்பதிகாரி சுமித் வல்பொல மேலும் குறிப்பிட்டார்.

காதல் விவகாரத்தால் இவ்வாறு தற்கொலை செய்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். உடபுசல்லாவை பொலிஸார் இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர்.(ற–சி)




காரைநகர் சிவன் கோயிலில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற தேர்த்திருவிழாவின்போது பல நூற்றுக்கணக்கான அடியவர்களின் அரோகரா கோஷத்துடன் சோமஸ்கந்தப் பெருமான் தனது பரிவாரமூர்த்திகளுடன் மாமணிவீதியாம் மூன்றாம் வீதியில் தேரில் உலா வந்து, அடியார்களுக்கு அருட்காட்சி வழங்கினார். (த-250)

## மிதிவெடி அகற்றலுக்கு கனடா தொடர்ந்தும் உதவி

இலங்கையில் மிதிவெடிகளை அகற்ற தமது அரசு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கத் தீர்மானித்துள்ளது என்று கனேடிய அரசு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் கொழும்பில் உள்ள கனேடிய உயர்ஸ்தானி கராலயம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு போர் முடிவடைந்ததைத் தொடர்ந்து மிதிவெடியற்ற சுற்றுச் சூழலை உருவாக்குவதற்கான இலங்கையின் முயற்சிகளுக்குக் கனடா தனது ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் வழங்கும். இந்த அறிவிப்பை, மிதிவெடி அகற்றும் செயற்பாட்டுக்கான உதவி மற்றும் மிதிவெடி தொடர்பான விழிப்புணர்வுக்கான சர்வதேச தினத்தில் வெளியிடுவதில் கனடா தூதரகம் மகிழ்ச்சியடைகின்றது.

500இற்கும் மேற்பட்ட குடும்பங்களை மீளக் குடியமர்த்தக் கூடிய 1000 ஹெக்ரேயருக்கு மேற்பட்ட உயர் விளைச்சல் மிக்க விவசாயக் காணிகளை விடுவிக்க வசதிப்படுத்தும் வகையில், மன்னார் மாவட்டத்தில் நிலக் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக மிதிவெடி ஆலோசனைக் குழுவின் பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கக் கனேடிய அரசு 850,000 டொலர்களை வழங்கவுள்ளது. மிதிவெடியினால் பாதிக்கப்பட்ட இடங்களில் வாழும் இலங்கையர் பாதுகாப்பாக இருப்பதில் இந்நிதியுதவி முக்கிய பங்காற்றும்.

கனடா போன்ற பங்குதாரர்களின் ஒத்துழைப்புடன் இலங்கை அரசு மேற்கொண்டுள்ள குறிப்பிடத்தக்கப் பணிகள், உயிர்களைப் பாதுகாத்தல், மீளத் திரும்புதலுக்கு வசதிப்படுத்தல் மற்றும் பாரபட்சமற்ற இத்தகைய ஆயுதங்களின் பாவனையை முடிவுக்குக் கொண்டு வரும் நோக்குடன் உரிய சர்வதேச கோட்பாடுகளை ஏற்றுக்கொள்ளுதல் என்பவற்றை ஊக்கப்படுத்துமது. இந்தப் புதிய நிதியுதவியானது, முன்னாள் மோதல் பிரதேசங்களிலிருந்து பெரியளவிலான வெடிப்பொருள்களை அகற்றுவதில் வெற்றிகரமாகச் செயற்பட்ட 'மக்' மற்றும் ஹலோ டிரஸ்ட் போன்ற சர்வதேச மிதிவெடி அகற்றும் அமைப்புக்களுக்கு ஒத்துழைப்பு வழங்கியமையினூடாக இலங்கையில் மிதிவெடி அகற்றும் முயற்சிகளுக்கான கனேடிய அரசின் பங்களிப்பு முன்னைய முக்கியத்துவத்தைக் கட்டியெழுப்பும். இது இடம்பெயர்ந்துள்ள ஆயிரக்கணக்கான மக்களை அவர்களது சொந்த இடங்களுக்கு மீளக் குடியமர்த்த உதவுவதாகவிருக்கின்றது.- இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (த)

# பல்கலை மாணவர்கள் அமைதி பேணவில்லை

### இதனாலேயே மோதல் ஏற்பட்டது பிரதமர் அலுவலகம் குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 4

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் அமைதியான முறையில் பிரதமர் அலுவலகத்துக்கு வந்திருந்தார்களாயின் மோதல் நிலைமை ஏற்பட்டிருக்காது என பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

பிரதமர் அலுவலகத்தை நோக்கி பேரணியாகச் சென்ற பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய மாணவர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட மோதல் நிலைமை குறித்து பிரதமர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக வெளியிடப்பட்ட செய்திகள் தொடர்பில் எமது காரியாலயம் அவதானம் செலுத்தியுள்ளது.

பிரதமர் அலுவலகத்துக்கு மனு ஒன்றைச் சமர்ப்பிப்பதற்கு வருவதாக மாணவர் ஒன்றியத்தால் முன்அறிவித்தல் விடுக்கப்படவில்லை. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் மனுவொன்றைச் சமர்ப்பிப்பதாகவே, அவர்கள் அறிவித்திருந்தனர்.

ஆனால், பேரணியின் பயணப் பாதை அவசரமாக மாற்றப்பட்டு கொள்ளுப்பிட்டி பகுதிக்கு வந்த அவர்கள், பிரதமர் அலுவலகத்துக்கு மனுவைச் சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிவித்தனர். அதற்காக ஒன்றியத்தின் 5 பிரதிநிதிகளுக்கு பிரதமர் அலுவலகத்துக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டிருந்த போதும், அந்த அழைப்பைக் கருத்திற்கொள்ளாது பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டதால் இந்நிலை ஏற்பட்டது.

இதுபோன்ற துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் நடைபெறுவது கவலைக்குரிய தொன்றாகும். இருப்பினும், ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியான முறையில் பிரதமர் அலுவலகத்துக்கு வந்திருந்தார்களாயின் இந்நிலை ஏற்பட்டிருக்காது- எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# ரஷ்யாவில் உயிரிழந்தவரின் சடலம் தோண்டி விசாரணை

கொழும்பு, ஏப் .4

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வின் மருமகனான உதயங்க வீரதுங்கவினால் பணிக்கு அமர்த்தப்பட்ட நோயல் ரணவீரவின் உடல் மீண்டும் நீதிமன்ற உத்தர வின்படி நேற்றுமுன்தினம் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது.

உதயங்க வீரதுங்க ரஷ்யாவுக்கான இலங்கையின் தூதுவராக இருந்த காலப்பகுதியில் நோயல் ரணவீர தூதரகத்தின்பணிப்பாளராகஇணைத்துக் கொள்ளப்பட்டிருந்தார். இவர்கள் இருவரும் கூட்டு வங்கிக் கணக்கை நிர்வகித்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் கடந்த 10 மதங்களுக்கு முன்னர் மர்மமான முறையில் நோயல் ரணவீர ரஷ்யாவில் உயிரிழந்தார். குறித்த சாவு தொடர்பிலான விசாரணை அறிக்கையை தரும்படி உறவினர்களால் உதயங்க வீரதுங்கவிடம் கேட்கப்பட்டு வந்த நிலையில்,அது ரஷ்யாவில் மேற்கொள்ளப்பட்டதாக அவர் தெரிவித்து வந்துள்ளார்.

இந்நிலையிலேயே உறவினர்கள் வெளிவிவகார அமைச்சில் செய்த முறைப்பாட்டை தொடர்ந்து, நேற்று முன் தினம் சடலம் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய தோண்டி எடுக்கப்பட்டுள்ளது. (த)

# சிங்கள 'ராவய' கருத்துக்கு ஷிப்லி பாறூக் கண்டனம்

மட்டக்களப்பு, ஏப் .4

முஸ்லிம்களுடைய இஸ்லாமிய உடையாகிய நிக்காபினையும், பர்தாவினையும் முற்றாக மூடிய தலைக் கவசத்தையும் தடைசெய்ய வேண்டும் என்று முஸ்லிம்களைக் கொச்சைப்படுத்தும் வகையில் கருத்து தெரிவித்த சிங்கள ராவய அமைப்பினரைக் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஷிப்லி பாறூக் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

சிங்கள 'ராவய' எனும் பௌத்த கடும்போக்கு அமைப்பைச் சேர்ந்த மத குருவான மாகல்கந்தே சுதந்த அவர்கள் முஸ் லிம் பெண்கள் அணிகின்ற நிக்காப்பை ஒரு ஆணுக்கு அணிவித்து அந்த உடையை முற்றாகத் தலையை மறைக்கும் தலைக் கவசம் அணிந்த ஒருவருடன் ஒப்பிட்டுக்காட்டி முஸ்லிம்களுடைய இஸ்லாமிய உடையாகிய நிக்காப்பையும், பர்தாவையும் முற்றாக மூடிய தலைக் கவசத்தையும் தடைசெய்ய வேண்டும் என்று மிகக் கேவலமாக முஸ்லிம்களுடைய அடிப்படை நம்பிக்கையைக் கொச்சைப்படுத்தும் வகையில் கருத்து தெரிவித்தார்.

இவ்வாறான செயல்களை மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன். கடந்த அரசில் முஸ்லிம்களுக்கு எதிரான பரப்புரை ஹலால் பிரச்சினைகளில் தொடங்கியது போன்று இந்த அரசில் நிக்காபில் தொடங்கி விடுமோ என அச்சப்பட வேண்டி இருக்கின்றது.

ஆட்சி மாற்றத்தில் மிகப்பெரிய பங்களிப்பை முஸ்லிம்கள் செய்திருக்கின்ற இந்தத் தருணத்தில் தொடர்ச்சியாக முஸ்லிம்களின் அடிப்படைகளுக்கு எதிராக இவ்வாறான கருத்துக்கள் வெளியிடப்படும்போது அதனை கண்டும் காணாமல் இருப்பது போன்ற நிகழ்வானது மேலும் முஸ்லிம்களை அரசின் மீது நம்பிக்கை இழக்கவைக்கும்செயலாகமாறிவிடும். ஆகவே இவ்வாறான விடயங்களில் அரசுஅலட்சியமாகஇருந்து விடாமல் உரிய நேரத்தில், உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாதுபோனால் கடந்த அரசு ஆதரித்து வளர்த்தெடுத்த கடும்போக்கு பௌத்த அமைப்பானபொதுபல சேனாவைப்போன்று இவ்வியக்கங்கள் சிங்கள, முஸ்லிம் மக்களிடையே இன முறுகலை தோற்றுவித்து அழிவுக்கு இட்டுச் செல்லும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை-என்றார். (த)

உதயன் விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com
0215671111

45 ஆம் நாள் நினைவஞ்சலி



நல்லூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட
அமரர்
குணரட்ணம் பற்குணராஜா
(M.A-Regional planning சாமஸ்ரீ தேசமான்ய, அகில இலங்கை சமாதான நீதிவான், ஓய்வுபெற்ற சிரேஷ்ட பதவி நிலை அலுவலகர் யாழ். மாநகரசபை, (முன்னாள் மாநகரசபை முதல்வரின் செயலாளர்.)
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.121/38 ஆஸ்பத்திரி வீதி, கோணாந்தோட்டம், யாழ்ப்பாணம்.

TVS கவி சேர்விஸ் சென்ரர் அன் ரிப்பியரிங்
உரிமையாளர் T. சிவா 077 4017 037

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
09.09.1951
மறைவு
05.03.2015

அமரர்
வல்லிபுரம் தவராஜலிங்கம்
(தவராஜ)

கடந்த 05.03.2015 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் வல்லிபுரம் தவராஜலிங்கம் அவர்களின் வீட்டுக் கிருத்தியைக் கிரியைகள் இன்று (04.04.2015) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

அன்னாரின் மரணச் செய்திகேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் மற்றும் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்,

தோகுதிப்பண்ணை, இராசவீதி, கோப்பாய் மத்தி, கோப்பாய்.

குடும்பத்தினர்.

# புதிய தேர்தல் முறைமை வந்தபின்பே ‘19’ஐ நடைமுறைப்படுத்த வேண்டும்

## சு.க. யோசனை முன்வைக்கும்

“அரசமைப்பின் 19ஆவது திருத்தச் சட்டம் எதிர்வரும் 10ஆம் திகதி நாடாளுமன்றில் சட்டமாக்கப்பட்டாலும், தேர்தல் முறைமையிலும் மாற்றம் வந்த பின்பே அது நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்ற திருத்தத்தை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி முன்வைக்கும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும்’ அமைச்சருமானராஜிதசேனாரத்னதெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக் களத்தில் நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 250 ஆகவேண்டும் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. தொகுதிவாரியாக 140, விகிதாசார முறையில் 75, தேசியப் பட்டியல் ஊடாக 25 உறுப்பினர்களும் இவ்வாறு தெரிவுசெய்யப்பட வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது.

தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் தற்போது பேச்சு நடத்தப்பட்டு வருகிறது. குறிப்பாக, தேர்தல் முறைமை மாற்றத்தின்பின்பே, 19 நடைமுறைக்கு வரவேண்டும்



என்ற யோசனை்யை சுதந்திரக் கட்சி முன்வைக்கவுள்ளது. நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெறுவதற்கு சு.கவின் ஒத்துழைப்பு அவசியம் என்பதால் இது கருத்திற் கொள்ளப்படும். அத்துடன், தகவல் அறியும் சட்ட வரைவும் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார். (ற-சி)

---

## போர்க்குற்றவாளிகள்

அமெரிக்க உதவி செயலாளர் டொம் மலினொவ்ஸ்கி கூறினார்.

30 வருடங்களாக இலங்கையில் தொடர்ந்த போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட அவர், ஒரு தரப்பினர் ஈட்டிய போர் வெற்றியானது, இரு தரப்புக்கும் இடையிலான காயங்களை ஆற்றுப்படுத்தவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

150 ஆண்டுகளுக்கு முன்னதாக அமெரிக்கா எதிர்நோக்கிய நிலைமையை இலங்கை இன்று எதிர்நோக்கி வருகின்றது என்று குறிப்பிட்ட அவர், போர் நிறைவின் பின்னரான 5 வருட காலப்பகுதியில் இலங்கைக்கும் சர்வதேச சமூகத்திற்கும் இடையில் முரண்பட்ட நிலைமைகள் காணப்பட்டன என்றும் தெரிவித்தார்.

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த சிறந்த சந்தர்ப்பம் கிட்டியுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். மக்களுக்கு இடையில் நம்பிக்கையை கட்டியெழுப்ப புதிய அரசு எடுத்துவரும் முயற் சிகள் வரவேற்கப்படவேண்டியது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-5,சி)

## இந்திய மீனவர்கள்

வடக்கு மீனவர்களுக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் இடையே சந்திப்பொன்று நடைபெற்றிருந்தது. அதில் கலந்துகொண்ட வடக்கு மீனவர்கள், இலங்கைக் கடல் எல்லைக்குள் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடுவதை அனுமதிக்க முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருந்தனர். இந்திய மீனவர்கள் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளைப் பயன்படுத்தி இலங்கைக் கடல் வளத்தைச் சூறையாடுகின்றனர் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

அதையடுத்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் இந்திய மீனவர்களை உடனடியாக கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பித்திருந்தார். (ற-101)

## சந்திரிகாவின்

“ஐ.நா. மனித உரிமைகள் அலுவலகத்தில் இலங்கை குறித்த விசாரணை அறிக்கை வெளிவந்ததும் அதனை உள்ளக விசாரணை பொறிமுறை செயற்பாட்டிற்காக நாங்கள் கவனத்தில் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். உள்ளக செயற்பாட்டை மேற்கொள்ளும் நோக்கில் அரசு ஏற்கனவே பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது”– என்றும் அவர் குறிப்பிட்டார்.

வெளிவிவகார அமைச்சில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இலங்கை – ஐரோப்பிய ஒன்றிய கூட்டு ஆணைக்குழுவின் 19 ஆவது அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

“மூன்று மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற தேர்தலில், 81.5 வீதமான மக்கள் தமது வாக்குக்களைப் பயன்படுத்தியிருந்தனர். இலங்கையின் வரலாற்றில் இது மிகப் பெரிய வாக்களிப்பு வீதமாகும். ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தெரிவுசெய்வதில் நாட்டின் அனைத்து சமூகங்களும் ஐக்கியமடைந்திருந்தன.

ஜனநாயக நிறுவனங்களைப் பலப்படுத்துதல் கருத்து சுதந்திரம், சட்டத்தை ஆட்சிப்படுத்துதல், நல்லாட்சி, மனித உரிமையை பாதுகாத்தல் ஆகிய அபிலாஷைகளை அடைந்து கொள்வதற்காக மக்கள் சிறிசேனவிற்கு வாக்களித்தனர். புதிய அரசு பதவியேற்றதிலிருந்து ஊடக சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல், தடை செய்யப்பட்ட இணையதளங்களை மீண்டும் இயங்க வைத்தல், ஊடகவியலாளர்களுக்கான கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை, வெளிநாடுகளிலுள்ள ஊடகவியலாளர்கள் அழைக்கப்பட்டமை போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

மனித உரிமை செயற்பாட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மீண்டும் தமது செயற்பாடுகளை அச்சமும், சித்திரவதையுமின்றி மேற்கொள்ள முடியும்.”– என்று அவர் அங்கு மேலும் குறிப்பிட்டார்.

“பாதுகாப்பு அமைச்சின் கீழிருந்த அரச சார்பற்ற நிறுவனங் களின் செயலகம், தற்போது கொள்கைத்திட்டமிடல் பொருளாதார அமைச்சுக்கு மாற்றப்பட்டுள்ளது. ஜனாதிபதி வடக்கிலும் – கிழக்கிலும் பதவியிலிருந்த இராணுவ ஆளுநர்களை மாற்றி சிவில் ஆளுநர்களை நியமித்தார். இது சிவில் நிர்வாகத்தைப் பலப்படுத்துவதுடன் இந்த மாகாணங்களின் சிவில் நடவடிக்கைகளில் இராணுவத்தின் ஈடுபாட்டையும் குறைப்பதற்கு வழிவகுத்துள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் மீளாய்வு செய்யப்பட்டு காணிகள் வழங்கப்பட்டுள்ளன. முதல் கட்டமாக அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள ஆயிரம் ஏக்கர் காணி விடுவிக்கப்படவுள்ளது. அதில் 425 ஏக்கர் காணி ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. முக்கிய விடயமாக ஜனாதிபதியும் பிரதமரும் கலந்துகொண்ட மீள்குடியமர்வு நிகழ்வில் தேசிய கீதம் தமிழில் பாடப்பட்டமை ஒரு முக்கிய நடவடிக்கையாக பார்க்கப்படுகிறது.”– என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

“நாட்டில் சமாதானத்தையும் நம்பிக்கையையும், நல்லிணக்கத்ந்தயும் கட்டியெழுப்பும் நோக்கில், ஜனாதிபதி நல்லிணக்கத்திற்கான விசேட ஜனாதிபதி செயலணி யொன்றை உருவாக்கியுள்ளார். இது முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் செயற்படும். உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டு நல்லிணக்கத்தையும், தீர்வையும் அடைவதற்கான பரிந்துரைகளை ஜனாதிபதி செயலணி முன்வைக்கும்.

கடந்த அரசு நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்தவில்லை. இந்நிலையில் அதனை உணர்ந்து கொண்டு பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்போம். குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள்அலுவலகத்தில்இலங்கை குறித்த விசாரணை அறிக்கை வெளிவந்ததும் அதனை உள்ளக விசாரணை பொறிமுறை செயற்பாட்டிற்காக கவனத்தில் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.”– என்றும் அவர் குறிப்பிட்டார்.

“இலங்கை பயங்கரவாதத்தால் பல தசாப்தங்கள் பல கஷ்டங்களை எதிர்கொண்டது. அந்த வகையில் புலிகள் மீதான தடையை தொடர்ந்து நீடிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் நடவடிக்கை எடுத்தமையை வரவேற்கின்றோம்” – என்றும் அவர் கூறினார். (ற-5)

## ‘போகோ ஹராம்’

இறுதிப்போரின்போது புலிகளிடம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் இவ்வாறு நடுக்கடலில் வைத்து விற்பனை செய்யப்பட்டிருக்கலாம் எனவும், இது தொடர்பில் தீவிர விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. கேள்வி நேரத்தில், ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய வினாவுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

இது தொடர்பாக அவர் கூறியவை வருமாறு:

“ரஷ்யாவுக்கான முன்னாள் தூதுவர்மீதான குற்றச்சாட்டு தொடர்பில் விசாரணைகள் இடம்பெறும்நிலையில், அவர் தலைமறைவாகியுள்ளார். மேற்படி விவகாரம் தொடர்பில் உக்ரேன் அரசும் எமக்குத் தகவல்களை வழங்கியுள்ளது. இவர் நைஜீரியாவில் செயற்படும் போஹோ ஹராம் தீவிரவாத அமைப்புக்கும் ஆயுதம் வழங்கியிருப்பார் என்று சந்தேகம் எழுகின்றது.

விற்பனை செய்யப்பட்ட ஆயுதங்கள் தொடர்பில் சர்ச்சை எழுகின்றது. இவை அரசின் ஆயுதம் அல்ல என முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கூறியுள்ளார். குறிப்பாக, இறுதிப்போரின்போது புலிகளிடம் கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள், தங்கங்கள் அடங்கிய முழு விவரத்தையும் முன்னாள் அரசு வெளியிடவில்லை. எனவே, புலிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்களா விற்பனை செய்யப்பட்டுள்ளன? நடுக்கடலில் வைத்து ஆயுதம் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அந்தவகையில் தற்போது விசாரணைகள் இடம்பெறுகின்றன” – என்றார். (ற-சி)

## இனவாதம்

அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டின்போது கருத்து வெளியிட்டஅமைச்சர் ராஜித,

“இலங்கையில் நடைபெற்ற ஆயுதப்போராட்டத்தைப்பின்னோக்கிப் பார்த்து அதற்கான காரணங்களைக் களைந்து, அமைதியான ஒரு சகாப்தத்தை உருவாக்குவதற்காகவே கற்றுக்கொண்ட பாடங்களுக்கும், நல்லிணக்கப்பாட்டுக்குமான ஆணைக்குழு நிறுவப்பட்டது. இன ஒற்றுமை சீர்குலைவுக்கான காரண, காரியங்களை இந்த ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

இதற்கமைய இன, மத விரோத உரைகளும், எழுத்துகளும் இன ரீதியான மத ரீதியான பதற்றங்களை உருவாக்கியுள்ளன. இந்த ஆணைக்குழுவின் கண்டுபிடிப்புக்கிணங்க இவற்றைத் தவிர்ப்பதற்குக் காத்திரமான அரசியல் இணக்கப்பாடும், சமா தானமாக இணைந்து செயற்படும் நிலைப்பாடும் ஏற்பட வேண்டும்.

இந்நிலையில், தடுப்புச் சட்டங்கள், அச்சட்டங்களைத் தீவிரமாக நடைமுறைப்படுத்தல் ஆகிய அம்சங்களும் தண்டனைச் சட்டத்தில் சேர்க்கப்படவேண்டுமென சட்டவரைஞர்களுக்கு அறிவித்தல் விடுக்க வேண்டுமென நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ கொண்டுவந்த பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

சட்ட வரைஞர்களால் அனுப்பப்படும் வரைபு அரச வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். அத்துடன், சட்டமாக்கப் பிரகடனப்படுத்தப்படுவதற்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காகவும் அனுப்பி வைக்கப்படும்” – என்றார்.

## கொல்லப்பட்ட

நேற்று நேரில் சென்று அவதானித்தார்.

இலங்கைக்குப் பயணம்மேற்கொண்டுள்ள, ஜனநாயகம், மனித உரிமைகள், தொழிலாளர் விவ காரங்களுக்கான, அமெரிக்காவின் உதவி இராஜாங்கச் செயலர் மாலினோவ்ஸ்கி நேற்று வடக்குக்கு வந்திருந்தார். ஆட்சி மாற்றத்தின் பின்னரான இங்குள்ள நிலைமைகளை நேரில் கண்டறியும் நோக்குடன் அவரது பயணம் அமைந்திருந்தது. வடக்குப் பயணத்தின் போது, பல்வேறு பிரதேசங்களுக்கு நேரில் சென்றதுடன், சிவில் சமூகத்தினரையும் சந்தித்துப் பேசினார்.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் அவர் சென்றார். போரின் போது இலங்கை அரசால் ‘மோதல் தவிர்ப்பு வலயம்’ (நோ பயர் சூன்) என்று அறிவிக்கப்பட்ட பிரதேசங்களின் தற்போதைய நிலைமைகளை நேரில் பார்வையிட்டார். அப்போது முல்லைத்தீவு, முள்ளிவாய்க்காலில், போரின் போது கொல்லப்பட்ட மக்களுக்காக அவர் அஞ்சலி செலுத்தினார்.

இது தொடர்பில் அவர் தனது ருவிட்டரில், இரு தரப்பினராலும் முல்லைத்தீவில் கொல்லப்பட்டவர்களுக்காக பிரார்த்திப்பதாகவும், இந்த துன்பங்களின் அடிப்படையில் இனிமேல் இவ்வாறு நிகழக் கூடாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதன் பின்னர் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த அவர், புதிய அரசு மக்களை மீளக்குடியமர்த்திய இடங்களைச் சென்று பார்வையிட்டார். (ற-5)

## இந்திய மீனவரை

படகுகளை பறிமுதல் செய்வோம் என்று இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆணவத்தோடு பேசியிருப்பது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இது தமிழக மீனவர்களுக்கு விடுக்கப்பட்டிருக்கும் கொலை மிரட்டலாகவே கருத முடியும்.

இலங்கைத் தலைநகர் கொழும்பில் வடக்கு மாகாண தமிழ் மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றிருக்கிறது.

இந்தக் கூட்டத்தில் பேசிய இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இலங்கை கடல் எல்லைக்குள் நுழையும் தமிழக மீனவர்களை படகுகளுடன் கைது செய்து சிறையில் அடைப்போம் என்று மிரட் டல் விடுத்திருக்கிறார். இனிமேல் தமிழக மீனவர்களின் படகுகளை பறிமுதல்செய்தால்அவற்றைதிருப்பி ஒப்படைக்கப் போவதில்லை என்றும் கொக்கரித்திருக்கிறார்.”– என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

“தமிழகம் மற்றும் இலங்கை மீனவர்களிடையே சுமூக நிலையை உருவாக்கவும் இருநாட்டு மீனவர்கள் தங்களது பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்டுவதற்காகவும் இதுவரை 3 கட்ட பேச்சு நடத்தப்பட்டுள்ளது. பேச்சை நியாயமாக தமிழக மீனவர்களை கைது செய்கிற இலங்கை அரசுடன் இந்திய அரசுதான் நடத்தியிருக்க வேண்டும். இருப்பினும் ஏதோ ஒருவகையில் சுமூக தீர்வு காணப்பட்டு விடாதா என்ற அடிப்படையில் தமிழக மீனவர்களும் 3 கட்ட பேச்சிலும் பங்கேற்றனர்.

இருதரப்பு மீனவர் பேச்சு முற்று முழுவதுமாக முடிவடையாத நிலையிலேயே ஈழத் தமிழ் மீனவர்களை தமிழக மீனவர்களுடன் மோத விடும் வகையில் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன சிறப்பு ஆலோசனைக் கூட்டத்தை கூட்டியிருக்கிறார்.”– என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“கச்சதீவு பகுதியில் மீன்பிடிப்பது என்பது தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையாகும். இதை எந்த அரசுகளாலும் தடுத்து தட்டிப் பறித்துவிட முடியாது. இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கே தமிழக மீனவர்களை சுட்டுப் படுகொலை செய்வேன் என்று கொக்கரித்தபோது மிகக் கடுமையாக இந்திய மத்திய அரசு கண்டித்திருக்க வேண்டும். இதனால் தற்போது இலங்கை அதிபர் மைத்ரிபால சிறிசேனவும் தமிழக மீனவர்களை கைது செய்வோம்– படகுகளை பறிமுதல் செய்வோம் என்று மிரட்டுகிறார். இலங்கை ஜனாதிபதியின் இந்த ஆணவப் பேச்சுக்கு இந்திய மத்திய அரசு கடும் கண்டனம் தெரிவிக்க வேண்டும்.இந்த விவகாரத்தில் தமிழக அரசும் மத்திய அரசுக்கு மிகக் கடுமை யான அழுத்தங்களைக் கொடுத்து இலங்கைக்கு வன்மையான கண்டனத்தை தெரிவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்”– என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## பிரதமர் பதவிக்கு தகுதியற்றவர் மஹிந்த

பிரசன்ன வீரவர்தன கூறுகிறார்

கொழும்பு, ஏப்.4
முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நாட்டின் பிரதமர் பதவிக் குத் தகுதியற்றவர் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணி செயலாளரும் நாடாளு மன்ற உறுப்பினருமான எரிக் பிரசன்ன வீரவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில், மஹிந்த ராஜபக்ஷ பிரத மர் பதவிக்குத் தகுதியா னவரா? என்று ஊடக வியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த போதே நாடா ளுமன்ற உறுப்பினரான எரிக் பிரசன்ன வீரவர்தன இவ்வாறு கூறினார்.

இதற்கு முன்னர் இலங் கையில் பதவியில் இருந்த பிரதமர்கள் சிலர் கண் சரியாக தெரியாதவர்கள், காது சரியாகக் கேளாத வர்கள் என்றும் அவர் குறிப் பிட்டார்.

எனினும், மஹிந்த ராஜ பக்ஷ சுகதேகியாக இருப்ப தால் அவருக்கு அவ்வா றான பதவியை வழங்க முடி யாது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (வ)

# விவசாயக் காணியை மீளப்பெற்றுக் கொடுங்கள்

## கிழக்கு மாகாண சபை நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்கிறார் முன்னாள் அமைச்சர் உதுமாலெப்பை

அம்பாறை, ஏக்.4
பொத்துவில் பிரதேச தமிழ், முஸ்லிம் மக்கள் பரம்பரை பரம் பரையாக விவசாயம், சேனைப் பயிர் செய்து வந்த காணிகளை மீண்டும் அவர்களிடம் ஒப்ப டைக்க கிழக்கு மாகாண சபை அவசர நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என்று கிழக்கு மாகாண சபை முன்னாள் அமைச் சர் உதுமாலெப்பை வேண்டு கோள் விடுத்துள்ளார். இது தொடர் பில் அவர் மேலும் கூறுகையில்:

"பொத்துவில் பிரதேசம் கடந்த 03 தசாப்த காலமாக போர் சூழ் நிலை கள் மற்றும் இயற்கை இடர்களால் அதிகம் பாதிக்கப்பட்ட பிரதேச மாகும். அம்பாறை மாவட்டத்தின் தாண்டியடி, கோமாரி, ஊறனி, 60ஆம் கட்டைக் கிராமம் மற்றும் கனகர் கிராமம் ஆகிய கிராமங் களில் தமிழ் மக்கள் தங்களுக்குச் சொந்தமானகாணிகளில் சேனைப் பயிர் செய்து தமது வாழ்வாதா ரத்தை மேற்கொண்டு வந்தனர். இதேவேளை, கனகர் கிராமத்தில் தமிழ் மக்கள் வாழ்ந்து வந்தனர். எனினும், கடந்தகாலப் போர்ச் சூழ்நிலையால் அச்சத்தின் கார ணமாக தமிழ் மக்கள் தங்களின் காணிக்குள் செல்ல முடியாத சூழ்நிலைகள் ஏற்பட்டன. இதே போன்று பொத்துவில் பிர தேசத்தில் வாழும் முஸ்லிம் மக் கள் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வந்த கிரான் கோவையிலுள்ள 502 ஏக்கர் விவசாயக்காணி, செங்காமம், தேக்கன் சேனை, தோணிக்கமம், ஆமைவெட்டுவான் மற்றும் இறத் தல் போன்ற பிரதேசங்களில் விவசாயம், சேனைப்பயிர் செய்து தமது வாழ்வாதாரத்தை மேற்கொண்டு வந்துள்ளனர்.

அந்தக்கிராம மக்கள் விவசாயம் செய்து வந்த காணிகளில் தற் போது விவசாயம், சேனைப் பயிர் செய்வதை வன வள பாது காப்புத் திணைக்களம் எல்லை யிட்டு தடை செய்துள்ளது.

இது குறித்து பொத்துவில் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டங்களில் நான் பல தடவைகள் வனவள அதிகாரிகளிடத்தில் கோரிக்கை விடுத்து வந்துள்ளேன். நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ள நிலையில் பொத்துவில் பிரதேச தமிழ், முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான காணிகளில் விவ சாயம், மேட்டு நிலப்பயிர்ச் செய்கை செய்வதற்கான அனுமதியைப் பெற அவசர நடவடிக்கைகளை கிழக்கு மாகாண சபை மேற் கொள்ள வேண்டும் என்று கிழக்கு மாகாண சபையிடம் கேட்டுக் கொள்கின்றேன்"– என்றார். (வ)



ஈழத்தில் வரலாற்றுச் சிறப்புமிக்க திருகோணமலை திருக்கோணேஸ்வரப் பெருமானின் வருடாந்த பெருந்திருவிழா நேற்று முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது. (வ-40)

## உரும்பிராய் இந்து கல்லூரியில் நேற்று நடைபெற்றது பரிசளிப்பு

வலி.வடக்கு, ஏப்.4
உரும்பிராய் இந்துக் கல்லூரி யின் நிறுவுநர் நினைவு தினமும் வருடாந்த பாசளிப்பு நிகழ்வும் நேற்று கல்லூரி மண்டபத்தில் அதிபர் அ.அருணந்தசிவம் தலை மையில் நடைபெற்றது.

நிகழ்வில் கலந்துகொண்ட விருந் தினர்களான யாழ்ப்பாணம் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண் தயா ளன், கனடா பழைய மாணவர் சங்க கிளையின் செயலாளர் க.சோதிலிங்கம் மற்றும் முன் னாள் அதிபரும் நெடுந்தீவு கல்விக் கோட்ட கல்விப் பணிப்பாளரு மான ஈஸ்வரதாசன் உட்பட ஏனை யவர்களும் மண்டபத்துக்கு ஊர் வலமாக அழைத்துவரப்பட்டனர். மங்கல விளக்கேற்றும் நிகழ்வைத் தொடர்ந்து கல்லூரி மாணவ மாணவிகளின் நடனம், பேச்சு, கவிதை, கோலாட்டம் என்பனவும் இடம் பெற்றன. (வ-86)

## வெளிநாட்டு முதலீடுகளை கிழக்கில் ஊக்குவிக்கத் திட்டம்

அம்பாறை, ஏப்.4
கிழக்கு மாகாணத்தில் விவசா யம், மீன்பிடி, சுற்றுலாத் துறை களில் வெளிநாட்டு தொழில திபர்களின் ஆர்வத்தையும் முத லீட்டையும் ஊக்குவிக்கும்



திட்டத்தைத்தான் முன்னெடுத்திருப் பதாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஐக்கிய அரபு நாடுகளைச் சேர்ந்த தொழிலதிபர்களை கிழக்கு மாகாண முதலமைச்சர் கிழக்கு மாகாண பிரதிப் பிரதம செயலா ளர் கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் சந்தித்தார். இதன் போதே அவர் இவ்வாறு கூறி னார். அங்கு முதலமைச்சர் மேலும் கூறியதாவது:

"கிழக்கு மாகாணத்தில் விவ சாயம், மீன்பிடி, சுற்றுலாத்துறை களில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதன் மூலம் பல வேலைத் திட்டங்களை உரு வாக்கி பலருக்கு வேலைவாய்ப் பளித்து தொழில் இல்லாத பிரச் சினைக்குத் தீர்வு காண முடியும். இதற்கு கிழக்கு மாகாண முதல மைச்சர் என்ற ரீதியில் சகல ஒத்து ழைப்புக்களும் வழங்க நான் தயாராக உள்ளேன்"– என்றார்.

இந்தக் கலந்துரையாடலில் போக் குவரத்து பிரதி அமைச்சர் எம்.எஸ். தௌபீக், முதலமைச்சரின் பிரத்தி யேகச் செயலாளர் கே.பத்மநாதன் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (வ-40)

## அபராதம்

தென்மராட்சி,ஏப்.4
கசிப்பு வைத்திருந்த மட்டு வில் தெற்கு வாசிக்கு சாவகச் சேரி நீதிமன்றில் புதன்கிழமை 25 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது:

சாவகச்சேரி மதுவரி நிலை யத்தினரால் தாக்கல் செய்யப் பட்ட வழக்கு புதன்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இதன்போதே இவ்வாறு அபரா தம் விதிக்கப்பட்டது. (வ-9)



## பண்டிகைக்கால முற்பணத்தை அதிகரித்தது யாழ்.ப.நோ.கூ.ச.

யாழ்ப்பாணம், ஏப்.4
யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட் டுறவுச் சங்கம் பணியாளர்களுக் கான பண்டிகைக்கால முற்பணத்தை ஏழாயிரத்து ஐநூறு ரூபாவாக அதிகரித்துள்ளது. சங்கத்தில் விசேட இயக்குநர் சபைக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டு இந்த முற் பணத்தை உடனடியாக பணியா ளர்களுக்கு வழங்கவும் நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டுள் ளது என்று சங்கத்தின் தலைவர் மு.ஜெ.சுஜீந்திரன் தெரிவித்தார்.

முற்பணமாக சங்கத்தால் பணியா ளர்களுக்கு ஐயாயிரம் ரூபாவே வழங்கப்பட்டு வந்தது. தற்போதைய நிலையில் சித்திரைப் புத்தாண் டுக்கான பண்டிகைக் கால முற் பணத்தை 7500 ரூபாவாக அதிக ரித்து வழங்குமாறு பணியாளர் கள் சங்கத் தலைவரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

சங்க இயக்குநர் சபை கூட்டத்தில் பணியாளர்களின் இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு முற்பணத்தை 7500 ரூபாவாக அதிகரித்து உடன் [illegible] பட்டது.

இந்தத் தீர்மானத்துக்கு அமைய பணியாளர்களுக்கான பண்டிகைக் கான முற்பணம் நேற்று முன் தினம் தொடக்கம் அதிகரித்து வழங்கப் பட்டு வருகின்றது. இதேசமயம் ஏனைய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் சிலவும் பண்டிகைக் கான முற்பணத்தை இந்த ஆண் டில் அதிகரித்து வழங்கவும் நடவ டிக்கையை மேற்கொண்டுள்ள தாக கூட்டுறவு அபிவிருத்தித் திணைக் களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.




# டோனியின் வெற்றிக் கூட்டணி

நடந்து முடிந்த உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்ற இந்திய அணியில் இடம்பெற்ற பெரும்பாலான வீரர்கள், 2019ஆம் ஆண்டு இங்கிலாந்தில் நடைபெறும் உலகக்கிண்ணத் தொடரிலும் பங்கேற்க வேண்டும் என, இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் கெய்க்வாட் தெரிவித்துள்ளார்.

மிகவும் பலவீனமான அணி' 'காலிறுதியைக் காண்பதே கஸ்டம்' இவ்வாறான விமர்சனங்களையெல்லாம் ஊதித்தள்ளி எந்தவொரு ஆட்டத்திலும் தோல்வியடையாமல் இந்திய அணி அரையிறுதிவரை முன்னேறி அரையிறுதியில் ஆஸ்திரேலியாவிடம்தோல்வியடைந்து வெளியேறியது. இந்திய அணியின் தொடர் வெற்றிகள் குறித்து பல்வேறு பாராட்டுக்கள் குவிந்து வரும் நிலையில், இந்திய அணியின் முன்னாள் பயிற்சியாளர் கெய்க்வாட்டும் இந்திய அணியைப் புகழ்ந்து தள்ளியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில்'சமீபத்திய உலகக்கிண்ணத் தொடரில் அரையிறுதியைத் தவிர, மற்ற ஆட்டங்களில் இந்திய அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. அதற்குமுன் நடந்த முத்தரப்புத் தொடரை எண்ணிப் பார்த்தால் இந்திய அணி காலிறுதிச் சுற்றுக்கு தகுதி பெறும் என்று எவரும் எதிர் பார்த்திருக்க மாட்டார்கள். இந்த நிலையில் இந்திய அணி அரையிறுதிக்கு முன்னேறி விட்டது. பந்துவீச்சாளர்கள் இந்தத் தொடரில் 7 ஆட்டங்களில் 70 இலக்குகளை சாய்த்திருந்தனர். உலகக்கிண்ணத் தொடருக்கு முன் இந்திய பந்துவீச்சாளர்களால் ஒன்றுமே செய்ய முடியாது என்று எல்லோரும் நினைத்தனர். கடைசியில் வியக்கத்தக்க வகையில் செயற்பட்டு அசத்திவிட்டனர். மொத்தத்தில் இந்த உலகக் கிண்ணத் தொடருக்கான அணியில் இடம்பெற்ற இந்திய வீரர்கள் பெரும்பாலும் அடுத்து இங்கிலாந்தில் நடக்கும் உலகக்கிண்ணத் தொடரிலும் தொடரவேண்டும். ஏனெனில் இந்த வீரர்கள் அன்னிய மண்ணில் மிகவும் போராடுகின்றனர். அடுத்த உலகக்கிண்ணத் தொடர் நடைபெறுவது இங்கிலாந்தில். எனவே அடுத்து சில ஆண்டுகளுக்கு இதே அணி தொடரும் பட்சத்தில் கூடுதலாக நல்ல அனுபவம் கிடைக்கும் இந்த அனுபவத்தை வைத்து இந்தக் கூட்டணியால் இங்கிலாந்திலும் மிகவும் போரட முடியும்' என்றார்.

(த–ரி)

# 4 நாள் டெஸ்ட்டுக்கு இங்கிலாந்து பரிந்துரை

டெஸ்ட் ஆட்டம் தற்பொழுது ரசிகர்களால் மறக்கப்பட்டுவரும் நிலையில் டெஸ்ட் ஆட்டத்தை மீண்டும் புத்துணர்வுடன் கட்டியெழுப்ப ஆட்டத்தை 5 நாள்களில் இருந்து நான்கு நாள்களாகக் குறைக்க இங்கிலாந்து கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை திட்டமிட்டுள்ளது.

'ரி–20' ஆட்டங்கள் அறிமுகமான பின்னர் வீரர்களின் அதிரடியும் இரட்டிப்பானது. ஆட்டத்தில் விறுவிறுப்பு பிரிக்க முடியாத ஒன்றாக மாறியது. இதனால், டெஸ்ட் ஆட்டத்தின் மீதிருந்த மோகம் தற்பொழுது மிகையாகக் குறைந்து வந்துள்ள நிலையில், மீண்டும் டெஸ்ட் ஆட்டத்தில் ருசிகரத்தன்மையைக் கொண்டுவருவதற்கு டெஸ்ட் ஆட்டத்தை நவீனப்படுத்தும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வந்தது. இதன் ஒரு கட்டமாக ஆட்டத்தை, பகலிரவு ஆட்டமாக வைக்கலாம் என்றும் சில யோசனைகள் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையில் 5 நாள்கள் நடைபெறும் டெஸ்ட் ஆட்டத்தை 4 நாள்களாகக் குறைத்து நடத்த இங்கிலாந்து கிரிக்கெட் சபை திட்டமிட்டு உள்ளது. நியூஸிலாந்து அணி மே மாதம் இங்கிலாந்து செல்கிறது. அப்போது டெஸ்ட் ஆட்டத்தை 4 நாள்களில் நடத்த திட்டமிட்டு இருப்பதாக இங்கிலாந்து கிரிக்கெட் சபைத் தலைவராகப் பொறுப்பேற்க இருக்கும் கோலின் கிரேவஸ் தெரிவித்துள்ளார்.

4 நாள்களாக நடத்தத் திட்டமிட்டு இருக்கும் டெஸ்டில் தினசரி 110 பந்துப்பரிமாற்றங்கள் வீச பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அதன்படி 4 தினங்களில் 440 பந்துப்பரிமாற்றங்கள் வீசப்படும். தற்போது தினசரி 90 பந்துப்பரிமாற்றங்கள் வீசப்படுகின்றன. 5 தினங்களில் 450 பந்துப் பரிமாற்றம் வீசப்படும். இதனால் 10 பந்துப் பரிமாற்றங்கள் மட்டுமே குறைந்த நிலையில் இருக்கும். இங்கிலாந்தின் இந்த திட்டத்தை இந்திய கிரிக்கெட் சபையும், சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபையும் ஆதரிக்காது என்று பரவலான கருத்து நிலவுகின்றது.

(த–ரி)

# தடகளத்தில் சாதிக்க வேண்டும்



இந்தியாவின் மூத்த தடகள வீரர் மில்கா சிங், தான் இறப்பதற்குள் ஒலிம்பிக் தடகளப் போட்டிகளில் இந்தியர் ஒருவர் தங்கம் வெல்வதைப் பார்க்கவேண்டும் என்று தன் விருப்பத்தைத் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் மாணவர்களுக்கான விளையாட்டுத்துறைக் கல்வியில் அறிவியல் ரீதியான அணுகு முறையைப் புகுத்தும் புதிய திட்டத்தை அறிமுகம் செய்து வைக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் இறப்பதற்குள் ஒலிம்பிக் தடகளத்தில் இந்திய வீரர் ஒருவர் தங்கம் வெல்ல வேண்டும் என்ற எனது ஆசையே இந்தத் திட்டத்துக்கான காரணம். வெற்றியை நோக்கிய தீராத அவர் கொண்ட இளம் தடகள வீரர்கள், நல்ல பயிற்சி முறையைக் கைவசம் வைத்துள்ள பயிற்சியாளர்கள், நாட்டில் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்காகப் பாடுபடும் அதிகாரிகள். இந்த மூன்று காரணங்களும் ஒன்று சேர்ந்து சாத்தியப்படும் பட்சத்தில் எனது கனவு நனவாகும். தடகளத்தில் இந்திய வீரர்கள் உறுதியாகத் தடம்பதிக்க வேண்டும். அதற்கான வாய்ப்புக்களும் அதிகமாக்கப்பட வேண்டும்' என்றார்.

(த–ரி)



# சிறந்த வீரராக மக்கலம்

நியூஸிலாந்து கிரிக்கட் சபையின் சிறந்த வீரருக்கான விருதை நியூஸிலாந்து அணித் தலைவர் மக்கலம் வென்றுள்ளார்.

சர்வதேச ஆட்டங்களில் சாதித்தவர்களைக் கௌரவப்படுத்தும் விதமாக, நியூஸிலாந்து கிரிக்கெட் சபையின் சார்பில் ஆண்டு தோறும் விருது வழங்கப்படும். இந்த விருதுகளில் உயரிய விருதான சிறந்த வீரருக்கான விருதை அணித்தலைவர் மக்கலம் வென்றுள்ளார். உலகக்கிண்ணத் தொடரில் மிகவும் சிறப்பாகச் செயற்பட்டு அணியை இறுதிக்கு அழைத்துச் சென்றமையினாலேயே மக்கலத்துக்கு இந்த உயரிய விருது கிடைத்தது.

நியூஸிலாந்தின் உபதலைவர் வில்லியம்ஸனுக்கு சிறந்த ஒருநாள் வீரர், சிறந்த ரி–20 வீரர், சிறந்த டெஸ்ட் வீரர் என்று மூன்று முக்கிய விருது கள் கிடைத்தன.

சிறந்த பந்து வீச்சாளராக ஸ்ராார்க் தெரிவானார்.

(த–ரி)

# இரட்டிப்பு மகிழ்ச்சி

மலேசியா பட்மின்ரன் தொடரில் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார் சாய்னா நேவால். அதே நேரத்தில் புள்ளிக்கணக்கில் முதல்தர வீராங்கனையாக இனங்காணப்பட்ட இவர் முதல்தர வீராங்கனையாக உத்தியோகபூர்வமாகவும் அறிவிக்கப்பட்டார்.

மலேசியாவின் தலைநகர் கோலாலம்பூரில் மலேசியா பட்மின்ரன் தொடர் நடக்கிறது. இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சாய்னா நேவால், சீனாவின் யோ ஜுவை எதிர்த்து விளையாடினார். அபாரமாக ஆடிய சாய்னா 21–13, 21–9 என்ற செட்களில் வென்று காலிறுதிக்கு முன்னேறினார்.

இந்த வெற்றியை சாய்னாவும் அவரது ரசிகர்களும் கொண்டாடிக் கொண்டிருக்கையில் புள்ளிக் கணக் கின்படி உலகின் முதல்தர வீராங்கனையாகவும் சாய்னா உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டமை அவர்கள் அனைவரையும் இரட்டிப்பு மகிழ்ச்சிக்குக் கொண்டு சென்றுள்ளது.



உலகின் முதல்தர வீராங்கனையாக உயர்ந்த சாய்னாவுக்கு இந்தியாவின் பிரதமர் மோடி உட்பட, பல பிரபலங்களும் விளையாட்டு வீரர்களும் வாழ்த்துத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ரி)

# இம்முறையும் சென்னையில் விளையாடுவதில் சிக்கல்கள்

இம்முறை ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரின் சென்னையில் நடைபெறும் லீக் ஆட்டங்களில் இலங்கை வீரர்கள் களம் காண முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது.



இந்தியாவில் ஆண்டு தோறும் ஐ.பி.எல். கிரிக்கெட் திருவிழா கோலாகலமாக நடைபெற்று வருகிறது. இதன்படி நடப்பு ஆண்டுக்கான ஐ.பி.எல் கிரிக்கெட் போட்டிகள் ...ர்வரும் 8ஆம் திகதி முதல் மே ...ம் திகதி வரை நடைபெறவுள்ளன.

இதில் சென்னை சுப்பர் கிங்ஸ் – டெல்லி டேர்டெவில்ஸ் ஆகிய அணிகள் மோதும் லீக் ஆட்டம் 9ஆம் திகதி சென்னையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிலையில், ஈழத் தமிழர் பிரச்சினை உள்ளிட்ட காரணங்களுக்காகத் தமிழக அரசு அனைத்து இலங்கை வீரர்களுக்கும் தமிழகத்தில் விளையாட கடந்த இரண்டு சீசன்களிலும் தடை விதித்திருந்தது.


மேலும் இம்முறை இலங்கை வீரர்கள் எவரும் தமிழகத்தில் விளையாட முடியாது என, தமிழக கிரிக்கெட் சங்கத்தின் பொதுச் செயலாளர் காசி விஸ்வநாதன் உறுதி செய்துள்ளார்.

இந்தத் தகவலை ஐ.பி.எல் நிர்வாக குழுவுக்கும் அறிவித்துள்ளதாக அவர் கூறியுள்ளார்.

எனினும் மத்தியூஸ் சென்னையில் விளையாடும் போட்டியில் அனுமதிக்கப்படுவாரா என்பது குறித்து இன்னமும் ஐ.பி.எல். நிர்வாகத் தரப்பினரிடம் இருந்து எந்தவொரு தகவலும் கிடைக்கப்பெறவில்லை என டெல்லி டேர்டெவில்ஸ் அணி குறிப்பிட்டுள்ளது.

இதனால் டெல்லி அணியில் விளையாடும் முக்கிய வீரரான இலங்கை அணித் தலைவர் மெத்யூஸ் இந்த ஆட்டத்தில் பங்கேற்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது. (த)

# கிரிக்கெட் ஊழல் எதிரொலி பதவி விலகினார் ஜெயசூரிய



ஊழல் எதிரொலியையடுத்து நேற்று பதவி விலகியுள்ளார் இலங்கைக் கிரிக்கட்டின் தேர்வுக் குழுத் தலைவர் சனத் ஜெயசூரிய.

'இலங்கையின் கடந்தகால அரசியலைப் போலவே கிரிக்கெட்டுக்குள்ளும் பல்வேறு ஊழல்கள் மலிந்துள்ளன' போன்றதான பல குற்றச்சாட்டுக்கள் சமீப காலமாக பரவலாக முன்வைக்கப்பட்டு வந்தன. சில ஆதாரங்களுடன் இந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மையென்று நிரூபிக்கப்பட்ட நிலையில் இலங்கைக் கிரிக்கெட்டின் நிர்வாகக் குழு கலைக்கப்பட்டு அடுத்த தேர்தல் வரை இடைக்காலக் குழுவின் மூலம் கிரிக்கட் கட்டுப்பாடுகள் நிர்வகிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்ட நிலையில், இலங்கைக் கிரிக்கெட்டின் தேர்வுக் குழுத் தலைவராக இருந்த சனத் ஜெயசூரிய பதவி விலகியுள்ளார்.

உலகக்கிண்ண தொடருக்காகத் தெரிவுசெய்யப்பட்ட அணித் தெரிவு சிறப்பானதாக அமையவில்லை என்று எழுந்த குற்றச்சாட்டுக்களையும் தெரிவுக் குழு தலைவரின் பதவி விலகலையும் ஆராயும்போது உலகக்கிண்ணத் தொடருக்காக தெரிவு செய்யப்பட்ட அணித் தெரிவிலும் ஊழல்கள் நடந்துள்ளதா என்று கிரிக்கெட் ஆர்வலர்கள் பலரும் கேள்வியெழுப்பியுள்ளனர்.

இலங்கை அணியிலிருந்து மிக அண்மையில் ஓய்வை அறிவித்த நம்பிக்கை வீரர்களான சங்கா, மஹேல ஆகியோருடன் ஜெயசூரிய கருத்து முரண்பாடுகளைச் சமீப காலமாக கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த–ரி)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஏப். 4

வடமாரட்சி உதைபந்தாட்ட லீக்கின் அனுதிமதியுடன் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடந்தும் 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் மாலை 3.30 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சுடர் ஒளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நவசக்தி விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் மற்றொரு ஆட்டத்தில் செஞ்சுடர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி ...தவுள்ளது.

★ ★ ★

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வளர்மதி விளையாட்டுக்கழகம் தனது 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்களில் மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மானிப்பாய்ரெட்றேஞ்சர்ஸ்விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து புத்தூர் விக்னேஸ்வரன் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. மாலை 5 மணிக்கு இடம்பெறும் மற்றொரு ...டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டக்கழக அணியை எதிர்த்து எல்லாளன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

★ ★ ★

...ங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் ...டத்தும் சாந்தன், யூட்கசன் ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டத்தொடரின் முதலாவது காலிறுதியாட்டம் இன்று நடைபெறவுள்ளது. வவுனியா சிறுவர் பூங்கா மைதானத்தில் இரவு 7 மணியாளவில் மின்ஒளியில் இடம்பெறவுள்ள இந்த ஆட்டத்தில் அல்ஹிஜ்ராவிளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து அல்இக்பால்விளையாட்டுக்கழகஅணிமோதவுள்ளது (த–ரி–23)



# கோஹ்லிக்கும் விரைவில் டும்..டும்..

இந்திய கிரிக்கெட் வீரர் சுரேஷ் ரெய்னாவின் திருமணத்தைத் தொடர்ந்து சக வீரர் கோஹ்லியும் விரைவில் திருமண அறிவிப்பை வெளியிடுவார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

உலகக்கிண்ணத் தொடரில் இந்தியா, ஆஸ்திரேலியா அணிகள் மோதிய அரையிறுதி ஆட்டத்தை பார்க்க கோஹ்லியின் காதலியான அனுஷ்கா சிட்னி சென்றார். ஆனால் கோஹ்லி ஓர் ஓட்டத்தில் ஆட்டமிழக்க பெரும் விமர்சனங்கள் எழுந்தன.

மேலும் இவரின் இந்தச் சொதப்பலுக்கு காரணம் அனுஷ்கா தான் என்று ரசிகர்கள் சமூக வலைத்தளங்களில் அவரைத் திட்டித் தீர்த்தனர்.

இந்த நிலையில் இந்திய வீரர் சுரேஷ் ரெய்னாவின் திருமணம் இன்று டெல்லியில் உள்ள ஒரு நட்சத்திர ஹோட்டலில் நடைபெறுகிறது. இதில் கோஹ்லி தன் தனது காதலியான அனுஷ்கா சர்மாவுடன் கலந்து கொள்கிறார்.

இதற்கிடையே டெல்லியில் உள்ள விராட் கோஹ்லி வீட்டுக்கு அனுஷ்கா சர்மா சென்றுள்ளார். அனுஷ்கா சர்மா, கோஹ்லி வீட்டுக்கு வருவதை முன்னிட்டு வீட்டைச் சுற்றிலும் பலத்த பாதுபாப்பு போடப்பட்டிருந்தது.

வீட்டில்விராட்கோஹ்லியின் பெற்றோர்களைச் சந்தித்து அனுஷ்கா சர்மா பேசினார். திருமணம் குறித்து பேசுவதற்காகவே விராட் கோஹ்லியின் வீட்டுக்கு அனுஷ்கா சென்றதாகவும் கூறப்படுகிறது.

இந்த நிலையில் சுரேஷ் ரெய்னாவைத் தொடர்ந்து, விராட் கோஹ்லியும் திருமணவாழ்க்கைக்குள்நுழையலாம் எனசெய்திகளும்பரவி வருகின்றன.(த)

# உதைபந்தாட்டப் பயிற்சிகள் வவுனியாவில் இன்று ஆரம்பம்

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையுடன் வவுனியா உதைபந்தாட்ட சங்கம் நடத்தும் 'கிராஸ்ரூட்ஸ்' உதைபந்தாட்ட பயிற்சிநெறி இன்று தொடக்கம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வரை வவுனியா நகரசபை கேட்போர்கூடம் மற்றும் மைதானத்தில் நடைபெறவுள்ளது. இந்த 'கிராஸ்ரூட்ஸ்' உதைபந்தாட்டப் பயிற்சிநெறியில் உடற்கல்வி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கழகங்களின் சிரேஷ்ட வீரர்கள் எனப் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். இந்தப் பயிற்சி நெறியை இலங்கையின் முன்னனி 'கிராஸ்ரூட்ஸ்' பயிற்றுநர் ஸ்ரேன் வோல் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–ரி–23)

# அண்ணா ஸ்ரார், ஆதிசக்தி அடுத்த சுற்றுக்குத் தகுதி

யாழ்ப்பாணம், ஏப். 4

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வளர்மதி விளையாட்டுக்கழகம் தனது 25ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தும் 7பேர் பங்கு பற்றும் விலகல் முறையிலான உதைபந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் கலையொளி விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆதிசக்தி விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது. இதில் ஆதிசக்தி விளையாட்டுக்கழக அணி 5:1என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்றமற்றொருஆட்டத்தில்அண்ணா ஸ்ரார்விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து நெடியகாடு விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது. இதில் அண்ணா ஸ்ரார் விளையாட்டுக்கழகஅணி 3:1என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்றது. (த–ரி–23)

# ஸ்ரீ முருகன் விளையாட்டு விழா நாளை

யாழ்ப்பாணம், ஏப். 4

அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூகநிலைய பவளவிழாவை முன்னிட்டு நிலாவொளி விளையாட்டுக்கழகம் நடத்தும் விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை விளையாட்டுக் கழகத் தலைவர் சி.பிரதாபன் தலைமையில் காலை 6 மணிக்கு நிலைய முன்றிலில் இடம்பெறவுள்ளது.

காலையில் இருந்து நடைபெறவுள்ள இந்த விளையாட்டு விழாவில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் என அனைத்து வயதுப்பிரிவினருக்குமான பலவகையான விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த–ரி–23)

# நவஜீவன்ஸை வீழ்த்திக் கிண்ணம் கைப்பற்றியது ஆவரங்கால் இந்து

யாழ்ப்பாணம், ஏப். 4

உசன் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழகத்தின் 55ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்றுச் சம்பியன் ஆனது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை உசன் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின் ஒளியில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. 5செற்களைக் கொண்ட இந்த ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று கிண்ணத்தைக்கைப்பற்றியது.(த–ரி–23)

# கருணாகரன், வல்வை அணிகள் அபார வெற்றி

யாழ்ப்பாணம், ஏப் 4

யங் கம்பன்ஸின் உதைபந்தாட்டத் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் கருணாகரன் அணியும், வல்வை அணியும் வெற்றிபெற்றன.

கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக்கழகம் யாழ் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட உதைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் கம்பர்மலை யங்கம்பன்ஸ் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற ஆட்டங்களில் முதலாவது ஆட்டத்தில் அன்பாலயம்விளையாட்டுக்கழகஅணியை எதிர்த்து கருணாகரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் கருணாகரன் விளையாட்டுக் கழக அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. தொடர்ந்து இடம்பெற்றஆட்டத்தில்வல்வைவிளையாட்டுக்கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை ஐக்கியம் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் வல்வை விளையாட்டுக்கழக அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (த–ரி–23)

# போராட்டங்கள், இழப்புக்கள் எல்லாம் தமிழரசுக் கட்சிக்கு மட்டும் சொந்தமல்ல

## சம்பந்தனுக்குச் சங்கரி கடிதம்

கொழும்பு, ஏப்.4
இழப்புகள்,போராட்டங்கள் எல்லாம் தமிழரசுக் கட்சிக்குமட்டும்தான் சொந்தம் என்று நினைத்துவிடாதீர்கள். அதைவிட பன் மடங்கு போராட்டங்களையும் இழப்புக்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்திருக்கின்ற ஏனைய அமைப்புக்களும் சந்தித்திருக்கின்றன என்பதை தமிழரசுக் கட்சியினருக்கு நீங்கள் ஞாபகப் படுத்துங்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் எழுதியுள்ள கடிதத்தின் முழு விவரம் வருமாறு :-

கடந்த 28.03.2015 ஆம் திகதி திருகோணமலையில் நடந்த கருத்தரங்கில் கூட்டமைப்பு பதிவு சம்பந்தமாக நீங்கள் கூறிய கருத்துக்களில் ஏதோ தமிழரசுக் கட்சிதான் நீண்டகால போராட்டங்களை முன்னெடுத்தது என்றும் அவர்களின் சம்மதம் இதில் முக்கியம் என்றும் கருத்துக் கூறியிருந்தீர்கள். போராட்ட வரலாறுகளை எடுத்துப் பார்த்தால் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கின்ற எல்லாக் கட்சிகளும் போராட்ட வடிவங்களை மாற்றிக் கொண்டு தமிழரசுக் கட்சியை விட மிகத் தீவிரமாகப் போராடியுள்ளன. ஏற்கனவே தமிழ் மக்களின் பிரச்சினையை தமிழரசுக் கட்சியால் தீர்க்கமுடியாது என தீர்க்கதரிசனத்தால் உணர்ந்துகொண்ட படியால்தான் தமிழரசுக் கட்சியின் செயற்பாடுகள் அனைத்தையும் முடக்கிவைத்துவிட்டு தந்தைசெல்வா 1972ஆம் ஆண்டு அப்போதிருந்த முக்கிய தமிழ்த் தலைவர்களான சட்டமாமேதை அமரர் ஜி.ஜி. பொன்னம்பலம், மலையகத் தமிழர்களின் விடிவெள்ளி அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஆகியோரை இணைத்துக் கொண்டு தமிழர் விடுதலைக் கூட்டணியை உருவாக்கினார். அந்த வரலாறு தங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஏனெனில் அப்போது தாங்கள் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருந்தும் தமிழரசுக் கட்சியில் எந்த ஒரு முக்கிய பதவியிலும் இருக்கவில்லை. தமிழரசுக் கட்சியின் எந்தவொரு போராட்டத்திலும் கலந்துகொண்டதுமில்லை. இருந்தும் தமிழர் விடுதலைக் கூட்டணி உதயமான பின்னர்தான் தாங்கள் ஒரு பிரபல்யமான சட்டத்தரணி என்ற காரணத்தினால் தந்தை செல்வா உங்களையும் தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைத்துக் கொண்டுசெயற்பட்டார். 1977ஆம் ஆண்டு தாங்கள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில்தான் போட்டியிட்டு முதன்முதலாக நாடாளுமன்றம் சென்றீர்கள் என்பதைக் கூட மறந்துவிட்டீர்களே. தந்தை செல்வாவின் மறைவுக்குப் பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி பிரதான எதிர்க் கட்சியானதும் அதில் தாங்களும் அங்கம் வகித்தீர்கள். தமிழர் விடுதலைக் கூட்டணியின் போராட்டங்கள், அதன் தலைவர்களின் தலைமறைவு வாழ்க்கைகள், தமிழ் மக்களின் பிரச்சினைகளை சர்வதேச அரங்குக்கு எடுத்துச்சென்ற முறைகள் எல்லாவற்றையும் எப்படி மறந்தீர்கள்?தமிழர் விடுதலைக் கூட்டணியோடு ஒப்பிடும்போது போராட்டங்களானாலும் சரி, இழப்புகளானாலும் சரி தமிழரசுக் கட்சியின் பங்கு மிகச் சிறியதே-என்றுள்ளது. (த)

# 2 அமைச்சர்கள் பதவி விலகுவர்

கொழும்பு, ஏப் .4
அண்மையில் தேசிய அரசில் இணைந்து அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொண்ட இருவர் தமது பதவிகளில் இருந்து விலகத் தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சுப் பதவிகள் பெற்றுக்கொண்டவர்களே இவ்வாறு பதவி விலகவுள்ளனர்.

இது தொடர்பில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைவர்களிடம் முறைப்படி அறிவிக்கப்படவுள்ளது. குறித்த அமைச் சர்களுக்கு வாக்களித்தவர்களிடமிருந்து ஏற்பட்டிருக்கும் எதிர்ப்பு காரணமாக அவர்கள் பதவி விலகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர்கள் தங்கள் மாவட்டங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1967இல் பிறந்த உதயச் செவ்வாய் மிருகசீரிடம் 4ஆம் பாதம் 43 ¾ கிரக பாவம் கொண்ட மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.

தொடர்பு: 0778203359

அரிய சந்தர்ப்பம்

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தொழில்நுட்பத் துறையில் வேலைவாய்ப்பு பெற அரிய சந்தர்ப்பம்.

★ Mobile phone Repairing காலம் 3 மாதம்
★ Electronics காலம் 10 மாதம்
★ Air conditioning காலம் 6 மாதம்
★ Electronical wiring, Rewinding காலம் 6 மாதம்

சகல பயிற்சிகளும் முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி முடிவில் வேலை பெற்றுக் கொடுக்கப்படும்.

பயிற்சிகள ஆரம்பம்: 05.04.2015 (சனி, ஞாயிறு)
06.05.2015 (கிழமை நாள்கள்)

விவரங்களுக்கு:-
JAFFNA TECHNICAL INSTITUTE
No 23, பலாலி வீதி, யாழ்ப்பாணம். T.P: 0778249949
O/L படித்தவர்கள் அனுமதிக்கப்படுவர்

# பீக்கொக் மாளிகை மஹிந்தவின் வசம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கோட்டைப் பிரதேசத்தில் உள்ள வர்த்தகர் ஏ.எஸ்.பி. லியனகேக்குச் சொந்தமான பீக்கொக் மாளிகை என்ற பெயரில் அழைக்கப்படும் மாளிகையை கொள்வனவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த மாளிகையை தான் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இலவசமாக வழங்கியதாக லியனகே கடந்த வாரம் ஊடகங்களிடம் கூறியிருந்தார். எனினும் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள லியனகே, அந்த மாளிகையை இலவசமாக வழங்கியிருப்பார் என்பதை நம்ப முடியாது என அவரது வர்த்தகத்துடன் சம்பந்தப்பட்ட நபர்கள் கூறியுள்ளனர்.

மாதம் 4 லட்சம் ரூபா வாடகைக்கு விடப்பட்டிருந்த பீக்கொக் மாளிகையை எந்த விதத்திலும் இலவசமாகக் கொடுத்திருக்க மாட்டார் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதேவேளை, ஜோதிடர் ஒருவரின் ஆலோசனையின் படி பீக்கொக்மாளிகையில்உள்ள நீச்சல் தடாகம் மஹிந்த ராஜபக்ஷவின் ஜாதகத்திற்கு ஏற்றாற்போல் மாற்றியமைக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

அத்துடன் எட்டு வருடங்களில் மஹிந்த ராஜபக்ஷவுக்குச் சொந்தமாகும் வகையிலான உடன்பாட்டில் பீக்கொக் மாளிகை வழங்கப்பட்டுள்ளதாகவும் பேசப்படுகிறது. கொழும்பில் உள்ள இரண்டு அலங்கரிக்கப்பட்ட மாளிகைகளில் பீக்கொக் மாளிகையும் ஒன்றெனஅடையாளம் காணப்பட்டுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற பின் னர், ஜனாதிபதி மாளிகையுடன் அலரி மாளிகையையும் பயன்படுத்தி வந்ததுடன் நாட்டில் பல பிரதே சங்களில் புதிதாக ஜனாதிபதி மாளிகைகளைக் கட்டுவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

விசேட கருத்தரங்கு

■ April 11 இல் நடைபெறவுள்ள அரச முகாமைத்துவ உதவியாளர் போட்டிப்பரீட்சை
■ விரைவில் நடைபெறவுள்ள மாகாண முகாமைத்துவ உதவியாளர் போட்டிப்பரீட்சை

விரிவுரையாளர்

காலம்: 05.04.2015 ஞாயிறு காலை 9.00 - 4.00 வரை

நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்நகர்.
T.P: 0774696695

விற்பனையாகின்றன போட்டிப் பரீட்சை வழிகாட்டிகள்

தொகுப்பு: த.தவசேகர்

★ வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் -300/=
★ வடமாகாண வருமான பரிசோதகர் -300/=
★ அரச முகாமைத்துவ உதவியாளர் -400/=
★ புகையிரத நிலைய அதிபர் தரம்III -300/=
★ பொது உளச்சார்பு பொது அறிவு வழிகாட்டி- 450/=

பூபாலசிங்கம், அன்னை, ஸ்ரீலங்கா, சிதம்பரப்பிள்ளை, கவிதா, கஜேன், இராமச்சந்திரா, ஜோதி புத்தகசாலைகளிலும் வகுப்பிலும் பெற்றுக் கொள்ள முடியும்.

T.P: 0754164564

# சுதர்சனக் கிரியா

வாழும் கலைப் பயிற்சி எடுத்தவர்களுக்கு சுதர்சனக்கிரிய நாளை காலை 7 மணிக்கு நல்லூர் சட்டநாதர் கோவில் வீதியிலுள்ள திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில்நடைபெறும். (ஒ)

# பள்ளத்தில் பாய்ந்தது ஓட்டோ பெண்கள் இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.4
ஹற்றன், டிக்கோயா, வனராஜா பகுதியில் 300 அடி பள்ளத்தில் ஓட்டோ வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் இரு பெண்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் ஹற்றன் மல்லியப்பு பிரதேசத்தைச் சேர்ந்த தாய் (வயது -70), மகளான ஏ.சந்திரகுமாரி தம்மிக்கா (வயது-48) ஆகியோரே உயிரிழந்துள்ளனர்.

இந்தச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில், டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையிலிருந்து ஹற்றன் நோக்கிச் சென்ற ஓட்டோ ஒன்று பொகவந்தலாவ ஹற்றன் பிரதான வீதியில் டிக்கோயா வனராஜா பிரதேசத்தில் பிரதான வீதியை விட்டு விலகி 300 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது. இதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய், மகள் இருவரும் உயிரிழந்ததோடு, ஓட்டோச் சாரதி படுகாயங்களுக்குள்ளாகி, டிக்கோயா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில், மேலதிக சிகிச்சைகளுக்காக நாவலப்பிட்டி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

இதில் பயணித்த மற்று மொரு பெண் சிறுகாயங்க ளுக்குள்ளான நிலையில் டிக்கோயா மருத்துவ மனையில் சிகிச்சைபெற்று, வீடு திரும்பியுள்ளதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விபத்து தொடர்பில் ஹற்றன் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (வ)

இனிய சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு
இந்தியன் செலக்ஷனின்
மெகா சேல்
இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.
காலம்: 02.04.2015-15.04.2015



சகலவிதமான பஞ்சாபி துணிகள், தைத்த பஞ்சாபிகள், நெற் பஞ்சாபிகள், சேட் வகைகள், சிறுவர் சிறுமியருக்கான ஆடைத் தெரிவுகளுக்கும்
புத்தம் புதிய டிசைன்களில் 10% முதல் 50 % வரையிலான விலைக்கழிவு
"இந்தியன் பஜார்"
அன்புடன்அழைக்கின்றார்கள்
இந்தியன் செலக்ஷன்

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 04.04.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.